# வெற்றிமணி

London
GERMANY

Vettimaniy

மணி 66 free Circulation ஐப்பசி. Oct. 2016




Rathy
JEWELLERS LTD
London's Largest Selections
லண்டனில் முன்னணி நகைமாளிகை!
எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்
28 Ealing Rd
Wembley
HAO 4TL London
Tel: 02089033063


# ஏன் தமிழன் அடிவாங்குகிறான்!

வெற்றி மைந்தன் ( தமிழ்நாடு)



## காதல் எல்லாம் கல்யாணத்தில் முடிவதில்லை!

அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

**சின்னமேளம்** உள்ளே.....


செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்
எம்மிடம் தாலிக்கொடிகள்
செய்பவர்களுக்கு கூறைப்புடவைகள்
பட்டுப்புடவைகள் அனைத்தும்
50% விலைக்கழிவில்
162 B, Mitcham Road London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269




பாடல் காட்சி
www.Tbbstars.com இல் பார்த்து மகிழுங்கள்

தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி




# அன்றும் காதலுக்கு அப்பிள்
# இன்றும் காதலுக்கு அப்பிள்!




ஒரு சிலர் மட்டும், ஏன் எப்படி என்று அறிவதில் கண்ணாக இருக்கிறார்கள். இவர்கள்தான் வாழ்வில் எதனையாவது கண்டுபிடிக்கத் துடிப்பவர்கள்.
சிலர் ஒவ்வொரு விடையத்திலும், தமக்கு சாதகமானதை சாதுரியமாகக் கண்டு, அதனை பயன்படுத்தும் வித்தை அறிந்தவர்களாக இருக்கிறார்கள்.
நம்பினால் நம்புங்கள்! நம்பவில்லை என்றால் ஆய்வு செய்யுங்கள். இதோ உலகில் நாம் காணும் சில புது மைகளும். சில விசித்திரங்களும்.





( D'Zhana Simmons)

நாம் கடைகளுக்கு சென்று பொருட்கள் வாங்கும் போது, பொருட்களை ஸ்கன் பண்ணுவார்கள். உடன் அதன் விலை வரும். ஸ்கன் பண்ணப்படும் பகுதி கறுப்பு வெள்ளையில் சில கோடுகளாகவோ அல்லது புள்ளி களாகவோ இருக்கும். பொதுவாக நாம் அந்தக் கறுப்புப் புள்ளிகளைத்தான் ஸ்கன் வாசிப்பதாக எண்ணுவோம். உண்மையில் அது கறுப்பை வாசிக்கவில்லை. வெள்ளைப் பகுதியை மட்டுமே வாசிக்கிறது.

ஒரு 14 வயதுப் பெண் பிள்ளை ( D'Zhana Simmons) 118 நாட்கள் இதயம் இன்றி வாழ்ந்துள்ளார். அவருக்கு இரு பம்கள் இரத்தத்தை பம்பண்ண உதவியாகப் பொருத்தப்பட்டு இருந்தது. அவருக்கு இதயம் தானம் செய்பவர் கிடைக்கும் மட்டும், இச்செயற்கை பம்பே உயிர் கொடுத்துக்கொண்டு இருந்தது.

எமது நாட்டில் காதலைச் சொல்ல பெரும்பாலும் விழிகளே உதவின. பழைய கிரேக்கதேசத்தில் ஒருவர் தன் காதலைச் சொல்ல, ஒரு அப்பிள் பழத்தால் தனது விருப்பத்துக்குரியவள் மீது எறிவார்கள். அப்படித்தான் அன்று தமது காதலை அவர்கள் வெளிப்படுத்தினார்கள். அன்றும் காதலுக்கு அப்பிள் இன்றும் காதலுக்கு அப்பிள். நம் நாட்டில் ஒருவர் கடித்த அப்பிளை மற்றவரும் கடித்தால் காதல் உர்ஜிதம். பாருங்கள் அன்றும் காதலுக்கு கைகொடுத்தது அப்பிள், இப்பவும் கைகொடுக்கிறது அப்பிள் ஐபோன்.



கொங்கொங்கிலும், யப்பானிலும் மைக்டெனால்ட் 24 மணி நேரமும் திறந்திருக்கும். அங்கு சென்று முழுநேரமும் இருப்பதற்கு அனுமதி உண்டு. சாட்டுக்கு சிலவற்றை வாங்கி, மெதுவாக தொட்டுக்கொண்டு ஒரு நாளைப் போக்கிக் கொள்ளலாம். அதற்கு அங்கு சட்டம் இடம் கொடுக்கிறதாம். இப்படிப்பட்டவர்களை மக்டொனால் அகதிகள் என்று அழைப்பார்களாம்.

## வெற்றிமணி
## முக்கிய அறிவித்தல்

வெற்றிமணி அபிமானிகளே
அன்பான வேண்டுகோள்.
நிகழ்வின் நிழல்கள்
என்னும் பகுதி.
நமது மக்களின் கலை, கல்வி,
பண்பாட்டு நிகழ்வுகளின் பதிவுகளாக
நீண்டகாலமாக வரும் ஒரு பகுதி.
இப்பகுதியில் இடம் பெறும்
புகைப்படங்கள்
தெளிவானதாக இருக்க வேண்டும்.
தெளிவில்லாத எந்தப்படமும்,
முக்கிய நிகழ்வாக இருப்பினும்
பிரசுரிக்கப்பட மாட்டாது.
முக்கியமாக கைத்தொலைபேசியில்
எடுக்கும் படங்கள்
தவிர்க்கப்படவேண்டும்.
2 படங்கள் மட்டுமே அனுப்பலாம்.
தெரிவு செய்யும் பொறுப்பு
வெற்றிமணி நிர்வாகத்தைச்
சார்ந்தது.
மின் அஞ்சலில் மட்டுமே
ஒவ்வொரு மாதமும் 14 ம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்க
வேண்டும்.
e-mail: vettimaniy@hotmail.com







## நன்றி நவிலல்



கஜந்தன் - சுதன்யா தம்பதிகள்

டோட்மூண்ட் நகரில் 03.09.2016
நடைபெற்ற எங்கள் திருமணத்தில்
நேரில் கலந்து சிறப்பித்து வாழ்த்தியவர்களுக்கும்,
வாழ்த்துக்கள் அனுப்பிய உள்ளங்களுக்கும்,

எங்கள் இதயம் கனிந்த நன்றிகள்.
**கஜந்தன் - சுதன்யா தம்பதிகள்**


மணமகன் பெற்றோர்:
திரு.திருமதி சோமசுந்தரம்
புங்குடுதீவு 2ம் வட்டாரம்.
Waltrop / Germany

மணமகள் பெற்றோர்.
திரு திருமதி ஶ்ரீதரன்
சுருவில்.
Dortmund / Germany

**வெற்றிமணி**

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 241



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

(முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்

"ஓவியக்கலைவேள்"

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

Chief Editor:

Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com

Company No: 8876276

"வெற்றிமணிமொழி"

தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்

சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)

Vettimaniy Ltd

Sanje:07824 61 83 83

vai g (U.K) 00 44 7788 195962



## கங்கா நதி, ஜமுனா நதி, இதில்

# காணாமல் போன சரஸ்வதியைத் தேடி...

Ranjan F. Xavier








Vedic Saraswati as drawn by Shridhar.

வெண்தாமரைப் பூவில் வீற்றிருந்து அளப்பரிய அறிவையும் ஞானத்தையும் அருள் பாலிக்கும் தெய்வ மான சரஸ்வதி அன்னை ஒரு போதும் காணாமல் போக மாட்டாள் என்பது உலகெங்கும் பரந்து வாழும் இந்துக களுக்கு நன்கு தெரியும்.

அப்படியாயின் யாம் தேடும் சரஸ்வதி யார்? ரிக் வேதத்திலும் மற்றும் புராண இதிகாசங்களில் காலம் காலமாகக் குறிப்பிட்டு வந்த சரஸ்வதி நதியினைத்தான் தேடுகிறோம். நதியாயின் அது எங்கே உற்பத்தியானது? எங்கே தவழ்ந்தது? எங்கே கடலுடன் சங்கமித்தது? இப்போது எங்கே மறைந்து விட்டது? எப்படி யாரால் மறைக்கப்பட்டது? அதனைத் தேடிக் கண்டு பிடிப்பதில் என்ன நன்மைகள் எனப் பல கேள்விகள் எழலாம்.
பல இலட்சம் வருடங்களாக இமயமலையின் பனிச்சி கரங்களில் பிறந்து ஆயிரக்கணக்கான மைல்கள் தூரம் பயணித்துத் தான் செல்லுமிடமெல்லாம் மக்களைப் போசித்து உலகின் உன்னதமான சிந்துவெளி நாகரிகத்தின் தோற்றுவாயாகவும் அதனைத் தாங்கிப் பிடித்த அன்னையாகவும் இருந்த புனித சரஸ்வதி நதி இருந்த இடம் தெரியாமல் தொலைந்துவிட்டது. தொலைந்து சுமார் 4000 வருடங்கள் ஓடி விட்டன.

## 2 நதிகள் சந்திப்பு எங்ஙனம் திரிவேணி சங்கமமாகும்

காலப்போக்கில் இது ஒரு கற்பனை நதி எனப் பெரும் பாலோரால் கருதப்பட்டு வந்தது. 12 வருடங்களுக்கு ஒரு தடவை வட இந்தியாவில் உள்ள அலகபாத்தில் கங்கையும் யமுனையும் சந்திக்கும் திரிவேணி சங்கமத்தில் நீராடுவதால் கோடிக்கணக்கான பக்தர்கள் தங்கள் பாவங்களைக் கழுவிக் கொள்வார்கள். இந்நிகழ்ச்சி கும்பமேளா எனப்படும். ஆனால் 2 நதிகள் சந்திப்பு எங்ஙனம் திரிவேணி சங்கமமாகும் என்ற கேள்வி எழுகின்றது. திரிவேணி என்றால் 3 ஆறுகள். ஆக 3வது நதி எங்கே என்றொரு கேள்வியும் பின்தொடரும். அதற்குப் பதிலாக அது ஒரு புனித நதி ஆகாயத்திலிருந்து அருவமாக விழும் அற்புதநதி என ஒரு சாராரும் இல்லை 3வது நதி ஒரு நிலக்கீழ் ஆறு. அதுதான் திரிவேணி சங்கமத்தில் 3வதாகச் சங்கமிக்கிறது என மறு சாராரும் கூறி வந்தனர்.

அருவம் உருவம் என்பதெல்லாம் மக்களின் நம்பிக்கை சார்ந்தது. நம்பிக்கைகளை நிரூபிக்க முடியாது. ஆனால் உலகில் பல இடங்களில் நிலக்கீழ் நதிகள் பாய்வதாகச் செய்மதி ஆதாரங்களுடன் செய்திகள் கிடைத்த வண்ணமுள்ளன.

**காங்கேசன்துறையில் கண்டுபிடிக்கப்பட்ட சுரங்கம்!**

இவ்விடத்தில் இலங்கையில் 1968ஆம் ஆண்டளவில் காங்கேசன்துறையில் கண்டுபிடிக்கப்பட்ட சுரங்கம் பற்றிக் குறிப்பிடவேண்டும்.
அருகிலிருந்த சீமெந்துத் தொழிற்சாலைக்கு முருகைக்கற்கள் எடுக்க அகழ்ந்தபோது நிலக்கீழ் சுரங்கமொன்று வெளியுலகுக்குத் தெரியவந்நது.
அச்சுரங்கம் மிக நீளமாக இருந்ததுடன் ஆழமற்ற நன்னீராறு ஒன்று கீழே கடலை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது. அப்பொழுது அச்சுரங்கம் நல்லூர் இராசதானியிலிருந்து கீரிமலைக்கேணிவரை செல்வதாக ஒரு உறுதிப்படுத்தப்படாத செய்தியொன்று பரவியிருந்தது. ஆயினும் பின்னர் இலங்கை அரசு அந்தச் சுரங்கத்தை அவசரமாக மூடிவிட்டது.

1893ஆம் வருடம் ஒரு பிரித்தானியப் பொறியாளர் C.F. Oldham என்பவர் இந்தியாவின் இராஜஸ்தானில் உள்ள Gagger என்ற கோடை காலத்தில் வறண்டு போய்விடும் ஒரு நதியில் குதிரைச்சவாரி செய்து கொண்டிருக்கும் போது அவரது மனதில் ஒரு கேள்வி எழுந்தது. மிகவும் நீர்வரத்துக் குறைந்த வருடத்தின் பெரும்பகுதியில் வறண்டு கிடக்கும் இந்த நதியின் நதிப்படுக்கையும் அதன் கரையும் 2 மைலுக்கும் மேலான அகலமாக அமைந்திருப்பதன் பின்னணி என்ன என்பதே அவரது வினா.
வேதநூல்கள் புராணங்கள் இதிகாசம் மற்றும் இலக்கியங்களை உள்ளவர்களின் துணையுடன் அலசி ஆராய்ந்தபொழுது ஒரு மாபெரும்நதி ஒன்றின் சிறுபகுதி குற்றுயிராய் இருப்பதாய் கண்டுகொண்டார்.
அவதானித்தவை உண்மையிலேயே ஒரு மகாநதியின் ஒரு பகுதியாக இருக்கலாம் என நம்பினார். அதற்காகத் தொல்லியல் சான்றுகளைத் தேடியபொழுது சரஸ்வதி என்ற நதி உண்மையிலேயே இருந்து மறைந்த ஒரு ஜீவ ஊற்று என்பதற்கான சான்றுகள் கிடைக்கத் தொடங்கின. இதுவே சரஸ்வதி நதியைத் தேடும் முயற்சிக்கு அத்திவாரமிட்டது. ஆயினும் அந்த ஆய்வுகள் ஏதோ காரணத்தால் முற்றுப்பெறவில்லை.

தொடர்ச்சி 4ம் பக்கம்


Century Travels GmbH

website : www.centurytravels.de

அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

Colombo ab 479€

Colombo Guest House 3-4 Person Pro Tage 39-59 €

Ram Nishanthan
Dip.T.T.Mgt-IATA/UFTAA Montreal
017621682149

இந்தியாவுக்கான விசா பெற்றுத் தரப்படும்

Essen மாநகரில்
Steeler str 150
45139 Essen
0201 64 888 225

29€

Sri lanka:
No-82
New Chetty street
Colombo 13
Tel: 011 23 22 838

Fax: 0231 5844665

email : info@centurytravels.de

Tel: 0231 58 96 557 /0231 55 74 319

Rheinische Strasse 29
44137 Dortmund.Germany

Colombo airport Transfer 29€

Oldham, தான் ஆய்வு செய்யும் நதிப்படுக்கை ஒரு மாபெரும் முன்னேற்றகரமான நாகரிகத்தின் முக்கிய தோற்றுவாயாகத் திகழ்ந்தது என்பதனை அறிந்திருக்கவில்லை. சற்றுப் பின்னராக மொஹஞ்சதாரோ ஹரப்பா (சிந்துவெளி) நாகரிகத்தின் அழிந்துபோன தடயங்கள் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் (தற்போதைய பாகிஸ்தானின் மேற்குப்பகுதி) கண்டுபிடிக்கப்பட்டது. சிந்துவெளிச் சமுதாயம் மிகவும் முன்னேறிய மக்கள் குழாம் எனவும் இதுவரை அறியப்பட்ட பழைய நாகரிகங்களில் உன்னதமானது எனவும் எடுத்துக் கூறிய மேலைநாட்டு ஆய்வாளர்கள் அந்நாகரிகத்தின் சொந்தக்காரர்கள் திராவிடர் எனவும் ஆதாரப்படுத்தினர்.

அதேவேளை அண்மைக்கால ஆராய்ச்சிகளின்படி சிந்துவெளி நாகரிகத்தை ஒத்த அதே காலகட்டத்தில் செழிப்புற்றிருந்த மக்கள் சமுதாயங்கள் இருந்ததற்கான தொல்லியல் அடையாளங்கள் சுமார் 2500க்கும் மேற்பட்டவை, பரவலாக இந்தியாவின் பஞ்சாப் ஹரியானா மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களிலும் பாகிஸ்தானின் மேற்குப் பகுதிகளிலும் கிடைத்துள்ளன. இதன்மூலம் சிந்துசமவெளி நாகரிகத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் சரஸ்வதிநதியின் பங்கு மகத்தானதாயிருந்தது நிரூபணமாகிறது.

கடந்த 25 வருடங்களில்தான் சரஸ்வதியின் தேடல் முனைப்படையத் தொடங்கியது. சரித்திர சமய அரசியல் மற்றும் பொருளாதார காரணங்களுக்காகவும் சரஸ்வதியின் தேடல் அவசியமாகிறது. தற்பொழுது பல சாதகமான ஆதாரங்கள் வெளிவந்த வண்ணமுள்ளன.

முதலில் சரஸ்வதி நதி என்பது ஒரு கற்பனையல்ல என்ற நிறுவத்தோடு அதன் தற்போதைய இருப்பைக் கண்டுபிடிக்க வேண்டியதாகவும் உள்ளது.

சரஸ்வதி என்ற ஒரு பழங்கால நதி இந்தியாவில் இருந்தது என்பதனை நிறுவ வேதநூல்களின் துணை அவசியப்பட்டது. ஆதி வேதநூலான ரிக்வேதத்தில் சரஸ்வதி நதி 60 தடவைகளுக்கு மேல் சொல்லப்படுகிறது. அதேவேளை புனிதகங்கை நதி பற்றி 2 தடவைகள் மட்டுமே வருகிறது. காலத்தால் ரிக்வேதத்தைவிட மிகப்பிந்திய உபநிடதங்களில் சரஸ்வதிநதி பற்றிய ஒரு குறிப்பும் இல்லாதிருப்பதும் கங்கையுடன் வேறு பல நதிகளின் பெயர்கள் மட்டுமே எழுதப்பட்டு இருப்பதிலிருந்தும் சரஸ்வதி காணாமற் போய் சுமார் 4000 வருடங்கள் உருண்டோடி விட்டதாக ஆய்வாளர்கள் கணித்திருந்தார்கள். அண்மையில் இக்கணிப்பு மிகச்சரியானதென கார்பன் கால நிர்ணயமுறைக் கணிப்பும் ஊர்ஜிதம் செய்துள்ளது.

இந்திய மற்றும் அமெரிக்கச் செய்மதிகளின் தரவுகளும் அதிநவீன நிலக்கீழ் உணர்கருவிகளால் அறியப்பட்ட ஆதாரங்களும் தொல்லியல் சான்றுகளும் சரஸ்வதி இமயத்தின் பனிமுகடுகளில் இருந்து உருவாகி 5 மைல்கள் அகலமான நதியாகத் தெற்குப் புறமாகப் பலநூறு மைல்கள் சென்று பின்னர் இந்தியாவின் மேற்கு வடமேற்குத் திசைகளில் பல உபநதிகளை உருவாக்கி வேறு பல உதிரி நதிகளை உள்வாங்கி அரபிக்கடலில் பல கிளைகளாகச் சங்கமித்ததாகப் பெரும்பான்மையான ஆய்வாளர்கள் நம்புகின்றனர். மேலும் ராஜஸ்தான் பாலைவனமாக மாறுவதற்கு

முன்பு அது பச்சைப் பசேலெனச் செழிப்பாக இருந்ததாகவும் சரஸ்வதியின் மறைவே சிந்துவெளி நாகரிகத்தின் அழிவுக்கும் ராஜஸ்தான் போன்ற பகுதிகள் பாலைவனமாக மாறியதற்கான காரணங்களில் பிரதானமானது எனவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை சரஸ்வதிக்கு வற்றாத நீராதாரம் அளித்து வந்த இமயத்தின அருகே சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட மிகப்பெரும் பூமியதிர்ச்சி நதிக்கான நீர்வரத்தைத் துண்டித்துவிட்டதாகவும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட காலநிலை மாற்றங்கள் சரஸ்வதியை முற்றாக அழித்து மறைத்து விட்டதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்துவேத நூல்களிலும் இலக்கியங்களிலும் மக்களின் நம்பிக்கையாய் இருந்து எவ்வித சுவடுமின்றி காய்ந்து மறைந்த சரஸ்வதி நதியை மீட்டெடுத்து மீண்டும் வழித்தடங்களை





உருவாக்கினால் இந்திய மற்றும் பாகிஸ்தானில் உள்ள குடிநீர்ப்பஞ்சத்தை நீக்குவதுடன் நீர்ப்பாசனம் போக்குவரத்து என்பனவற்றுடன் வெள்ளப்பெருக்கு அனர்த்தங்களையும் தவிர்த்துப் பாலைவனங்களை மீண்டும் சோலைவனங்களாக மாற்ற முடியும்.

சரஸ்வதிநதியை இப்பொழுது தேடும் பணியில் முன்னிலை வகிக்கும் ஆய்வு நிலையமாக இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் இயங்கும் சரஸ்வதி சிந்து ஆய்வுமையம் விளங்குகின்றது. Dr. கல்யாணராமன் என்னும் ஆய்வாளர் தலைமையில் 200 பக்கங்களுக்கு மேற்பட்ட கிடைத்தற்கரிய தடயங்களையும் சரஸ்வதி பற்றிய தரவுகளையும் ஆவணப்படுத்தியுள்ள சரஸ்வதி சிந்து ஆய்வுமையத்தின் ஆய்வுப் பெறுபேறுகளின் பயனாக இந்திய நடுவண் மற்றும் பல வடஇந்திய மாநில அரசுகள் தாங்களும் சரஸ்வதியைத் தேடும் முயற்சியில் இறங்கியுள்ளன. முக்கியமாக இந்துக்களால் புனிதமெனக் கொண்டாடப்படும் இந்நதியைத் தேட பாகிஸ்தான் அரசு அகழ்வாராய்ச்சியில் இந்தியாவிற்கு வழங்கும் ஒத்துழைப்பு வியந்து பாராட்டப்பட வேண்டிய அம்சமாக உள்ளது.

நிலவின் தட்ப வெப்பத்தையும் செவ்வாய்க் கிரகத்தில் புளூட்டோவில் உள்ள நில அமைப்புகளையும் துல்லியமாகக் கண்டுபிடிக்கும் தற்கால விஞ்ஞானிகள் தம்வசமுள்ள நவீன தொழில்நுட்ப வசதிகளின் துணையுடன் தம் காலடியில் மறைந்து கிடக்கும் பல இலட்சம் ஆண்டுகள் பலநூறு மைல்கள் வளைந்தும் நெளிந்தும் தவழ்ந்தும் பாய்ந்தோடிய அளப்பரிய வளங்களை அள்ளித்தந்த சரஸ்வதி நதியை முழுமையாகக் கண்டடையும் நாள் வெகுதொலைவில் இல்லை என்பது உண்மை.

நன்றி :தமிழர்தகவல் 25 வருட நிறைவு –இளந்தோப்புச்சுவடு–









பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன் நாட்டியக்கலை

இந்தியாவின் தூர தெற்கில் அமைந்திருக்கும் பிரதேசம் தமிழகம். இதற்கு மிக அண்மையில் ஈழத்துப் பிரதேசமாக யாழ்ப்பாணக் குடாநாடு அமைந்திருக்கிறது. எனவே தான் தமிழகத்தில் இருந்து தமிழர் தம் பண்பாடு கடல் கடந்து பரவத் தொடங்கிய புராதன காலகட்டத்தில் இருந்தே கூடிய அளவு அதனை உள்வாங்கிய பிரதேசமாக யாழ்ப்பாணம் அமைந்து விட்டது. தமிழகத்தின் ஒரு பகுதி போன்று யாழ்ப்பாணம் இன்று அமைந்திருப்பதனைக் காணலாம். அன்றிலிருந்து இன்றுவரை உலகின் வேறெந்தப் பகுதிகளுடனும் இல்லாத அளவுக்கு யாழ்ப்பாணம் பல்வேறு துறைகளிலும் தமிழகத்தோடு நெருங்கிய உறவுகளைக் கொண்டுள்ளமையைக் காண்கின்றோம்.

மிகப் பழமையில் இருந்தே யாழ்ப்பாணத்தின் வடகரையிலுள்ள துறைமுகப்பட்டினங்களான காங்கேசன்தறை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, சம்புகோளம் (மாதகல்) மற்றும் மன்னார் மாதோட்டம் மூலமும் தமிழகத்துக்கும் யாழ்ப்பாணத்துக்குமான தொடர்புகள் இருந்து வந்துள்ளன. நாகரிகம் படைத்த தமிழ் மக்கள் எப்பொழுது கடல் கடந்து இங்கு வந்தனரோ அப்பொழுதே அவர்களது பண்பாடு, கலை, கலாசாரம் என்பனவும் இங்கு அறிமுகமாயின எனலாம். யாழ்ப்பாணம் தீவுசார் பகுதியாக இருப்பதனால் கடல் கடந்து இங்கு பரவிய இக்கலை, பண்பாடுகள், கலாசாரத்துறைகள், தனித்துவமான சில சிறப்பியல்புகளைத் தம்முள் ஏற்படுத்திக் கொண்டன. நுண்கலைகளிலும் இவ்வாறான தனித்துவமான அம்சங்கள் வளர்ச்சி கண்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழகத்துக் கலைகளான கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், இலக்கியம் முதலான நுண்கலைகள் இங்கு வேரூன்றிய காலகட்டத்தைச் சரியாக நிர்ணயிப்பதற்கான ஆதாரங்கள் இல்லை. எனினும் மிக நீண்டகாலமாகத் தமிழகத்தில் வளர்ந்து வந்த இக்கலைகள் அங்கு போல் இங்கும் கோயிற் கலைகளாக நிலவி வந்துள்ளன எனலாம். இவ்வாறு கோயில்களில் வளர்க்கப்பட்டு வந்த கலைகளில் தனித்தவமாக இங்கு கவனிக்க வேண்டியது நாட்டியக்கலை ஆகும்.

சங்ககாலத்தில் தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் இடையே தொடர்புகள் இருந்தமைக்கான இலக்கிய ஆதாரங்கள் உண்டு. சிலப்பதிகாரத்தில் நாட்டியக்கலை பற்றிய பல விரிவான தகவல்கள் காணமுடிகின்றது. "கடல் சூழ் இலங்கைக் கஜபாகு மன்னன்" கண்ணகியின் விழாவிற் கலந்து கொண்டமையும், அன்று முதல் ஈழத்தில் (யாழ்ப்பாணம் உட்பட) கண்ணகிக்கு கோயில்கள் எடுத்த பாங்கினையும் நோக்குகின்ற போது நாட்டிய அரசி மாதவியின் ஆடற்கலையும் இங்கு அறியப்பட்டிருக்கும் என்று கருத இடமுண்டு.

நாயன்மார்களால் பாடப்பட்ட திருக்கோணேஸ்வரம், திருக் கேதீஸ்வரம் ஆகிய இரு தலங்களும் தமிழகத்தில் தேவதாசி மரபு இருந்த காலப்பகுதியான பல்லவர் காலத்தில் இருந்த கோயில்கள் ஆகும். இக்கோயில்களில் நாட்டியக்கலை நிச்சயமாக இருந்திருக்க வேண்டும் என ஊகிக்கப்படுகின்றது.

சோழப்பெருமன்னர் ஆட்சிக்காலத்தில் மும்முடிச்சோழ மண்டலமாக வட இலங்கை சோழப் பேரரசில் இணைக்கப்பட்டது. அப்பொழுது பொலநறுவை, திருகோணமலை போன்ற இடங்களில் யாழ்ப்பாணத்திலும் சோழர் ஆதிக்கம் பரவியமையும், இங்கு கோயில் அமைத்து ஆதரித்தமையையும் முதலாம் இராசேந்திரன் கால கோட்சைச் சாசனம் மூலம் ஊகிக்க முடிகின்றது. எனவே யாழ்ப்பாணத்திலும் கோயில்கள் இக்காலத்தில் இருந்திருத்தல் கூடும் எனவும் இக்கோயில்கள் போர்த்துக்கேயர், ஒல்லாந்தரால் அழிக்கப்பட்டிருத்தல் கூடும் எனவும் கருதப்படுகின்றது. தஞ்சைப் பெருங்கோயிலில் இருந்தவாறு தேவதாசிகள் அக்காலத்திலிருந்த யாழ்ப்பாணத்துக் கோயில்களில் நாட்டியப் பணியில் ஈடுபட்டிருத்தல் கூடும் என்றும் கருத இடமுண்டு.

சோழரின் ஈழத்தலைநகராக விளங்கிய பொலநறுவையில் அமைக்கப்பட்ட "வானவன் மாதேவி ஈச்சரத்திலே" திருப்பணி புரிந்த தேவரடியார் கோயிலிலே "நந்தா விளக்கு" எரித்தனர் எனக் கல்வெட்டுக் கூறுகின்றது. கி.பி. 1344இல் இலங்கைக்கு வந்த மொறொக்கோ நாட்டுப் பயணியான இபின்பட்டுட்டாவின் பிரயாணக் குறிப்புக்களின் மூலம் தெவிநுவரவில் இருந்த பெரிய விஸ்ணு ஆலயத்திலே இறைவன் திருமுன் குறிப்பிட்ட கிரியைகளின் போது ஆடுவதற்கும், பாடுவதற்கும் ஐந்நூறு ஆடல் மகளிர் இருந்தனர் எனவும், கந்தளாயில் இருந்த விஜயராஜ ஈஸ்வரம் என்னும் சிவாலயத்திலே ஏழு தேவரடியார் இருந்தனர் எனவும் வரலாற்றுக் குறிப்புக்கள் உண்டு.

கி.பி. 14ஆம் நூற்றாண்டுக்கும் 16ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சிங்கள மொழியில் எழுதப்பட்ட சந்தேச (தூது)ப் பிரபந்தங்களிலே தெய்வங்களின் திருமுன்பும், அரசவையிலும் இடம்பெற்று வந்த நடனங்களின் வர்ணனைகள் பற்றியும், தென்னிலங்கையில் சமகாலத்தில் நிலவிவந்த நடன, இசைக்கலைகள் பற்றிய குறிப்பிடத்தக்க தகவல்கள் காணப்படுகின்றன. களனியில் இருந்து விபீ'ணனின் தேவாலயத்திலே "ஆடல் மகளிர் கைவழி நயனம் செல்ல" ஆடுதல் பற்றிச் சேவவிஹினி சந்தேசய குறிப்பிடுகின்றது. இக்காலகட்டத்தில் இங்கு கேரள கதகளியோ, கண்டிய நடனமோ இடம்பெற்றதற்கு தக்க சான்றுகள் இல்லை எனவும், பரத நாட்டியமெ நிலவியிருக்கும் எனவும் இ.ஆர்.சரத்சந்திரா சுட்டிக்காட்டியுள்ளார்.

இவற்றில் இருந்து புராதன இலங்கையில் இந்துக் கோயில்களில் நடனக்கலை மரபு இருந்தது என்பதும் இம்மரபு யாழ்ப்பாணத்திலும் இக்காலப்பகுதியில் சிறந்து விளங்கியிருக்கக்கூடும் எனவும் கருத இடமுண்டு. ஏனெனில் தென்னிந்தியா யாழ்ப்பாணத்துக்கு மிக அண்மையில் இருப்பதும், இங்கு தமிழர்கள் வாழ்வதும், இக்காலப்பகுதியில் இலங்கையில் ஏனைய பகுதிகளில் இருந்த கோயில்களில் இம்மரபு சிறந்து விளங்கியமையும் காரணங்களாகக் கருதப்படக்கூடியனவாகும். எனினும், புராதன யாழ்ப்பாண வரலாறு பற்றி அறிவதற்கு எவ்வாறு திட்டவட்டமான ஆதாரங்கள் இல்லையோ அதேபோல நாட்டியக்கலை பற்றி அறிந்து கொள்வதற்கும் போதிய ஆதாரங்கள் இல்லை. எனவே நாட்டியக் கலையின் நிலை பற்றிய செய்திகளை ஊகித்து அறியக் கூடியதாக உள்ளதே ஒளிய முடிந்த முடிவாகக் கூறமுடியாதுள்ளது.

இலங்கையின் வடபிரதேசத்திற் குறிப்பாக யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு சுமார் நான்கு நூற்றாண்டுகள் (ஏறத்தாழ கி.பி. 1250 தொடக்கம் 1649 வரை) நிலவிய தமிழ் அரசிலே தமிழர் பண்பாட்டின் பல்வேறு கூறுகளும் பேணப்பட்டதுடன் வளர்ச்சியடைந்தும் வந்தன. பண்பாட்டு நிலைக்களமாக அமைந்த அரசர்கள் போல கலைகள் வளர ஆக்கமும், ஊக்கமும் அளித்தனர். அவர்களில் பலர் கலை உணர்வும், கலைத்திறனும் கொண்டிருந்தனர்.

மேலும் இக்காலப்பகுதியில் தென்னிந்தியாவிலே தமிழ் நாட்டில் ஏற்பட்ட முஸ்லீம் படையெடுப்புக்கள், அரசியல் குழப்பங்கள் காரணமாக அங்குள்ள மக்களில் ஒரு சாரார் யாழ்ப்பாண அரசுக்கு வந்து குடியேறினர் எனப்படுகின்றது. அதன் காரணமாகவும் நாட்டியக்கலை வளர்ச்சி இங்கு ஊட்டம் பெற்றிருக்கலாம்.

இக்காலத்தைப் பற்றி வையாபுரி ஐயரால் எழுதப்பட்ட "வையாபாடல்" மற்றும் முத்துக்கவிராசன் இயற்றிய "கைலாயமாலை" மயில்வாகனப் புலவர் இயற்றிய "யாழ்ப்பாண வைபவமாலை" போன்ற நூல்களில் நடனம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

6ம் பக்கத் தொடர்ச்சி

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள்
மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளளோம்
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
www.Nandys.de
e.mail:info@nandys.de

# கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்



சேவியர்

1

இறைமகன் இயேசு இந்த உலகிற்கு மனிதனாக வந்ததன் நோக்கங்கள் இரண்டு.
ஒன்று, மனிதர்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்க தனது உயிரைப் பலியாகத் தருவது. அதன் மூலம் அவரை நம்புவோருக்கு மீட்பையும் விண்ணக வாழ்வையும் அளிப்பது. ”பாவங்களை நீக்கவே அவர் தோன்றினார் என்பது உங்களுக்குத் தெரியும். அவரிடம் பாவம் இல்லை.( 1 யோவான் 3 : 5)”
இரண்டாவது, ஒரு மனிதன் புனிதனாக வாழ்வது எப்படி என்பதை தனது வாழ்க்கையின் மூலம் வாழ்ந்து காட்டுவது. ”எல்லா வகையிலும் நம்மைப்போலச் சோதிக்கப்பட்டவர் எனினும் பாவம் செய்யாதவர்.( எபிரேயர் 4 : 15) என்கிறது விவிலியம்.
அவர் இறந்து உயிர்த்தெழுந்தபின் சீடர்களிடம் விடைபெற்று விண்ணகம் சென்றபோது இரண்டு விஷயங்களை அவர்களிடம் சொன்னார். ஒன்று, தூய ஆவியானவரை உலகிற்கு அனுப்பி மக்களுக்கு வழிகாட்டுவேன் என்பது. இரண்டாவது, ”நீங்கள் என் பெயரால் கேட்பதையெல்லாம் நான் செய்வேன்” எனும் வாக்குறுதி ( யோவான் 14:13..17 )
எதையெல்லாம் இயேசுவிடம் கேட்கலாம் ?

ஒரு இதய நோய் என்றால் கார்டியாலஜிஸ்டை போய் பார்ப்போம் ஒரு மெக்கானிக்கைப் போய் பார்க்க மாட்டோம். அதே போல தான் ஆன்மீகமும். இயேசு எதை மக்களுக்குத் தர விரும்பினார். எது அவருக்கு மிகவும் பிடித்தமானது ? எது அவரது விருப்பம் என்பதன் அடிப்படையில் நமது வேண்டுதல் இருந்தால் அது விரைவில் நிறைவேறும்.

1. மன்னிப்பு!
பாவங்களிலிருந்தும், பாவத்தின் குற்ற உணர்ச்சியிலிருந்தும் மனிதன் விடுபட வேண்டியது மிகவும் அவசியம். ”நம் பாவங்களை நாம் ஒப்புக்கொள்வோமென்றால் கடவுள் நம் பாவங்களை மன்னித்து, குற்றம் அனைத்திலிருந்தும் நம்மைத் தூய்மைப்படுத்துவார். ஏனெனில் அவர் நம்பிக்கைக்குரியவர், நேர்மையுள்ளவர். (1 யோவான் 1 :9 )”. என்கிறது பைபிள்.
இறைவனிடம் நமது பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பை வேண்டினால் அவர் நிச்சயம் பாவங்களை மன்னிப்பார். ”பாவங்களை மன்னிக்க மானிடமகனுக்கு அதிகாரம் உண்டு” என அவர் வெளிப்படையாகவே பறை சாற்றினார். பாவத்தினால் வந்த சாபத்தினால் உருவான நோயாளிகளையும், பேய்பிடித்தவர்களையும் அவர் சுகமாக்கினார். பாவம் விலகியபோது அது கொண்டு வந்த சாபமும் விலகியது.

நாம் செல்கின்ற வழி மனிதநேய பணிகளுக்கு எதிராய் இருந்தால், இறை விருப்பத்துக்கு மாறாக இருந்தால் செய்ய வேண்டிய முதல் வேலை இது தான். ”நான் பாவி” என இயேசுவிடம் அறிக்கையிட்டு மன்னிப்பு கேட்பது. நாம் எல்லோருமே பாவிகள் தான். ”பாவம் நம்மிடம் இல்லை என்போமென்றால் நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்வோம் உண்மையும் நம்மிடம் இராது. (1 யோவான் 1:8)” என்கிறது விவிலியம். மன்னிப்பு கேட்டால் அவர் நிச்சயம் மன்னிப்பார், அதற்காக ஆவலுடன் இருக்கிறார். ஆனால் ஒரே ஒரு கண்டிஷன். !!!

**”பிறருடைய குற்றங்களை நீங்களும் மன்னிக்க வேண்டும் !!!”**
**இல்லையேல் உங்கள் குற்றங்கள் மன்னிக்கப்படாது.**

( தொடரும் )

5ம் பக்கத் தொடர்ச்சி

## சின்னமேளம்

வையாபாடல் என்னும் நூலில் உள்ள “ஆடும் மாதர் வலம் வர”, “நஞ்சு விழி நாட்டியம் செய்வோம்” ஆகிய வரிகள் நடனம் பற்றிக் குறிப்பிடுகின்றன.

அரசரின் முடிசூட்டு விழாவிலும் கைலாசநாதர் கோயில் மகாகும்பாபி'கேத்திலும் இடம்பெற்ற நடனம், இசை, இசைக்கருவிகள் பற்றிக் கூறப்படுகின்றது.

இங்கு பெரிய கோயில்களிலும் அரசவைகளிலும் தமிழர்களுடைய சாஸ்திரிய நடனமாகிய பரதநாட்டியம் இருந்து வந்தது எனலாம். இக்காலத்தில் எழுந்த நூல்களில் பரதம் என்ற சொல்லும் வந்துள்ளது. எடுத்துக்காட்டாக,

“பாத்தனில் இயலிசை நாடகம்
பரதமோடியலிசை பாடினும்”

என மாதவி அரங்கேற்றுக் காதை (13) இலும்,

“பரத நெறியாளன்” (மேற்படி 111)

என கண்ணகி வழக்குரை காவியத்திலும்,

“நடக்கும் பரதமியலிசை நாடகம்”

என தட்சிணகைலாய புராண சிறப்புப் பாயிரத்திலும்,

“ஆடகச் சிலம்பொலி யருவக் கிண்கினி
பாடகச் சீறடி பரதப் பண்ணுறச்
குடகக் கரங்களிற் கண்கடோய் தர
நாடகத்தியல் பெற நூறு நாட்டினார்”



எனத் திருச்செந்துவர் காவியத்திலும் வருவன குறிப்பிடப்பாலன. பரத எனும் பதம் நடனம் எனும் பொருளின் மட்டுமன்றி நடிகன். ஆடுவோன், நாடகம் முதலிய பொருள்களும் கொள்ளப்படும்.

தட்சிணகைலாய புராணத்தில்

“கறுவு மனக் கணிகையர்”

எனவும்

“நடன விதந்தரு நளினத்தார்க்கு”

எனவும் ஆடுவோர் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. இதில் ஆடற்கரசனுடைய திருநடனம் பற்றியதாயினும் அதில் இடம்பெறும் “நளினம்” என்னும் பதம் பரதத்தின் சிறப்பியல்பு ஒன்றினைக் காட்டுவதாக அமைகின்றது. எண் முதலிய கலைகளுடன் பதினொரு வகையான ஆடற்கலைகளைப் பயின்றான் எனக் கண்ணகி வழக்குரை காவியம் எடுத்துக் கூறுகிறது. இந்நூலிலே அடைவ, சாரி முதலியன பற்றிய குறிப்புக்களும் வந்துள்ளன. தவில், நாகசுரம் போல இசை, நடன கலைஞர்களும் பொதுவாக மரபு வழிக் கலைஞர் குடும்பங்களிலே நன்கு பேணி வளர்க்கப்பட்டன எனலாம். இக்கலைகளை அரசர்களும் மக்களும் ஆதரித்து வந்தனர். எனவே யாழ்ப்பாணத்தில் இருந்த சில பெரிய கோயில்களிலாவது தேவரடியார் இருந்து சமயப் பணிகளுடன் கலைப் பணிகளையும் செய்து இருப்பர் எனக் கருத முடிகிறது.

கி.பி. 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலே யாழ்ப்பாணத்தில் ஐரோப்பியரான போர்த்துக்கேயரின் ஆட்சி ஏற்பட்டது. இவர்கள் யாழ்ப்பாண அரசை வென்று இந்துக் கோயில்களை இடித்ததுடன் தங்கள் கிறிஸ்தவ மதத்தினையும் அது சார்பான கலைகளையும் பரப்பினர். ஒல்லாந்தர்களும் ஆரம்பத்தில் இதனையே செய்தனர். இவ்வாறான மத ஒழுங்கு முறையால் சைவ சமயமும் கலைகளும் நலிவடைந்தன. சில இடங்களில் அவை நீறு பூர்த்த நெருப்புப் போல இருந்தன எனலாம்.

**சின்ன மேளம் தொடரும்**




# குற்றம் கடிதல்



1

குந்தவை

காலைபத்துமணியிருக்கும் மிகவும் சோர்வாக இருந்தமையால் நண்பியின் வீட்டுக்குச் சென்று சற்றுநேரம் கதைத்துவிட்டு வரலாம் என்ற எண்ணத்தோடு சென்றிருந்தேன். அவள் வீட்டில் மறுஒளிபரப்புச் செய்யப்படும் நாடகங்கள் ஓடிக் கொண்டிருந்த நேரமது. நண்பியும் அவளது அம்மாவும் கூடவே அவளது அப்பாவும் (அவர் ஓய்வுபெற்றவங்கியாளர்) ஒன்றாக அமர்ந்து ஒவ்வொரு கதாப்பாத்திரங்களையும் திட்டியவாறே பார்த்துக் கொண்டிருந்தனர்.

எனக்கு அவ்வளவு ஆர்வமில்லை அந்த நாடகத்தில் இப்போது ஒருகாலத்தில் இதனை விழுந்துவிழுந்து பார்த்த சாதாரண ரசணைக்கு உட்பட்டவள்தான் நானும். சிலமாதங்களில் இந்த நாடகம் என்றாலே எனக்கு அலர்ஜி. நண்பியைப் பார்க்கச் சென்ற விதி தொலைக்காட்சியின் முன்னே என்னையும் இழுத்துவைத்திருந்தது.

முன்பு ஏன் இந்த இடைவேளைகள் வருகின்றன என்று திட்டிய மூளை இன்றையநாளில் மூச்சைப் பிடித்துநாடகம் பார்ப்பவர்கள் அந்த இடைவேளைகளில் நிதானமாய் மூச்சுவிட்டு பேசத்தான் என்று சமாதனம் சொல்லுமளவு வளர்ந்திருந்தது. நான் இருந்ததை அவர்களுக்கு அவ்வப்போது உணர்த்தியது அந்த இடைவேளைகள் தான். இரவு பார்க்கவில்லையா? எனநான் கேட்ட கேள்விக்கு மறுஒளிபரப்பு இல்லாத வேறு நாடகங்களை பார்பதாகவும் பகலில் இந்த நாடகம் பார்து நேரத்தை செலவு செய்வதாகவும் கூறினாள்.

ஆர்வமாக அவர்கள் பார்த்துக்கொண்டிருந்த அந்தநாடகம் ஒன்றும் அவ்வளவு தரமானதுஅல்ல (அதுசரி தரமான நாடகங்கள் ஒலிபரப்பானால் பாதியிலே நிறுத்திவிடுவார்களே) பொறுப்பற்ற சிலபடைப்புக்களுக்கு ஒரு நல்ல உதாரணம். கதாநாயகி ஒருவனைக் காதலித்து இன்னொருவனைக் கைப்பிடித்துகாதலிப்பவன் நினைப்பால் கணவனைத் தவிர்ப்பாள். கூடவே அவள் மனம் சீர்கெட்டமுறையில் அவனா இவனா என தடுமாறும். பத்தாதற்கு கணவன் செய்யும் அளப்பறைகள் மன்னிக்கவும் இயக்குனர் செய்யும் அளப்பறைகள் அதிகம்.

மெகாசீரியல் என்பதற்காக இப்படிதானா ஜவ்வு இளுப்பார். மொத்தத்தில் கதாநாயகி பாத்திரத்தை கொண்டு பெண்களை நிலையற்றமனம் கொண்டவராக,தீர்மானங்கள் எடுக்கமுடியாதவராக இன்னும் பல சொல்லிக்கொண்டே போகலாம். தன் நினைவுக்கேற்ப கதையை கொண்டுபோகின்றார் இயக்குனர். (அத்தனைமுரண்பாடுகள் அந்தநாடகத்தில்) அதனைத்தொடரந்து வருவது சாத்தான்தரும் வீடே மேலானது எனும் அளவுக்கு எம்மை சிந்திக்கச் சொல்லும்.

ஒரு திரைப்படம் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். அது தொலைக்காட்சியில் ஒளிபரப்பாதவரை குறித்ததொகையினரே தெரிந்து திரையரங்குகளிற்கு செல்கின்றனர். ஆனால் அதில் கூட நாம் தரம் தரமற்றது என்றபார்வையில் தேர்ந்துகொள்கின்றோம். ஆத்தோடு ஏ,யு என்றொருதெரிவும் அங்கே உள்ளது.


திரைப்பட இயக்குனர்களும் சமூகப் பொறுப்புடைய வர்களாயினும் தொலைக்காட்சியாளர்கள் அவர்களையும் தாண்டி பொறுப்புடையவர்கள்.





காரணம் தொலைக்காட்சி வீட்டிற்குள்ளேயே ஒரு அங்கத்தவர் போல எப்போதும் இருக்கும். மின்சாரத் தடைஒன்றைத் தவிர வேறுதடைகள் அதற்கு எழுவது குறைவு. இவை சிறுவர்களையும் தம்மோடு இணைத்துக் கொண்டவை. அவற்றினைத் தவிர்ப்பது இன்றைய காலகட்டத்தில் கடினமான ஒன்றாகும். எதை நாம் சமூகத்துக்கு வழங்குகின்றோம் என்ற பொறுப்புணர்சி ஒரு படைப்பபாளனுக்கு அவசியம் இருக்கவேண்டும்.







தாயகத்தில் செல்வச் சந்நிதி ஆலயம் அழகும் அருளும் நிறைந்த புண்ணிய ஸ்தலம்.அங்கு கேணிக்குள் அடியவர்கள் போட்ட குப்பை என்ன காணிக்கையா?




# தென்னிந்திய திரைப்பட இசையமைப்பாளர் பரத்வாஜின் “உள்ளம் தோறும் வள்ளுவம்” இறுவட்டு நல்லூரில் வெளியீடு

சக்தி எப்எம் வானொலியின் ஏற்பாட்டில் தென்னிந்திய இசையமைப்பாளர் பரத்வாஜ் ஆக்கி இசையமைத்த உள்ளம்தோறும் வள்ளுவம் என்ற பெயரில் அமைந்த திருவள்ளுவரின் 1330 குறட்பாக்களின் குரலிசையும் பொருளும் சேர்ந்த இறுவட்டின் வெளியீட்டு விழா 29.08.2016 இரவு நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது.





நிகழ்வில் இசை இறுவட்டிற்கான வெளியீட்டுரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் பொதுச் செயலர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் ஆற்றினார். உலக முக்கியத்துவம் பெற்ற திருக்குறள் இசை இறுவட்டு நல்லூர் மண்ணில் இடம்பெறுவது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும்..திருக்குறளின் முக்கியத்துவம் குறித்துத் தமது உரையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து இறுவட்டு வெளியீடு இடம்பெற்றது. எம்பிசி நிறுவனத்தின் குழுமப் பணிப்பாளர்களான உருத்திராணி பாலசுப்பிரமணியம் சாந்தி பகீரதன், சக்தி எப்எம் பிரதானி ஆர். பி. அபர்ணாசுதன் ஆகியோர் முன்னிலையில் இசையமைப்பாளர் பரத்வாஜ் இறுவட்டை வெளியிட்டு வைக்க சக்திஎப்எம் நடத்திய திருக்குறள் போட்டியில் மேற்பிரிவில் முதல்மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்ட வெற்றியாளர்கள் அதனைப் பெற்றுக் கொண்டனர்.



அதனைத் தொடர்ந்து இறுவட்டின் வெளியீட்டு அனுபவம் தொடர்பாக இசையமைப்பாளர் பரத்வாஜ் உரையாற்றினார். திருக்குறளுக்கு இசையமைப்பது தனது நீண்டநாள் கனவு என்றும் இதன் முழுமையான வெளியீடு யாழ் மண்ணில் நிகழ்ந்திருப்பது குறித்துத் தான் மகிழ்வடைவதாகவும் தெரிவித்தார். நான்கு வருடங்களாகத் தொடர்ச்சியாகத் தான் உழைத்தமையின் பலனை இன்று அனுபவிப்பதாகவும் ஒவ்வொரு தமிழனது வீட்டிலும் இந்த இறுவட்டு இருக்க வேண்டும் எனத் தான் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த இறுவட்டில் எஸ்.பி.பாலசுப்பிரமணியம், சித்ரா, உன்னிக்கிருஷ்ணன் உள்ளிட்ட பிரபல பாடகர்கள் தமது குரலில் குறட்பாக்களை இசைத்துள்ளனர். காஞ்சி காமகோடி பீடத்தைச் சேர்ந்த ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகள், மறைந்த இந்திய ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம், சுகி சிவம். கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் உள்ளிட்ட பல அறிஞர்கள் விளக்கவுரை வழங்கியுள்ளனர். ஒரு குறட்பாவுக்கு ஒரு பாடகர் ஒரு உரைஞர் என்ற வகையில் இறுவட்டு அமைந்துள்ளது.

(படங்கள் ஐ.சிவசாந்தன்)

# சப்பரமா? சப்பை ரதமா?

லலீசன்

.

இன்று 30.08.2016 நல்லைக் கந்தனது சப்பரத் திருவிழா. சப்பரம் என்ற சொல் எப்படி வந்தது என்பதை ஆராயாமல் தங்கள் அறிவுக்கு எட்டியபடி இந்தச் சொல்லை வானொலி தொலைக்காட்சியில் வர்ணனை செய்பவர்கள் கையாள்கின்றனர்.

.


தற்போது ஒரு புதிய கண்டுபிடிப்பாக சப்பையான ரதம் என்ற பொருளில் இந்தச் சொல்லைப் பயன்படுத்துகின்றனர். இது தவறானது. சப்ரமஞ்சம் என்ற அரசிருக்கையே சப்பரம் என்று ஆகியிருக்கிறது. அதாவது ஒரு வகை மஞ்சம் (மஞ்சம் என்பதுவும் இருக்கைதான்)

.

சப்பரம் என்றால் யானைத் தவிசு (தவிசு - இருக்கை) ஆகவே பெரிய இருக்கை என்று பொருள். இந்தச் சொல்லும் பொருளும் மிகப் பழமையான மதுரைத் தமிழ்ப் பேரகராதியில் உள்ளது. அதன் ஒரு பக்கத்தையும் இணைக்கின்றேன்.

.

(எனக்கு இந்தத் தகவலை வழங்கி ஆற்றுப்படுத்திய எனது ஆசான் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கு நன்றி)



சப்பங்கிச்சாயம் - சம்பங்கி வேரிலிருந்து எடுக்குஞ் சாயம்.
சப்படி-வயிரக்குற்றங்களுள் ஒன்று, தட்டை
சப்பட்டை - தட்டையானது; சிறகு, தோட்பட்டை, பதர்மடையன், உள்ளீடின்மை.
சப்பட்டையரம்-தட்டையான ஓர்வித அரம்.
சப்பட்டைவாக்கு - தட்டையான பக்கம், அசப்பியமான வார்த்தை, சப்பட்டை வாகு.
சப்பணங்கால்-அட்டணைக்கால், மடிபாசம்.
சப்பணங்கூடுதல் / சப்பணங்கோலுதல் } அட்டணைக்காலிடுதல்
சப்பணம் - அட்டணைக்கால், சப்பணங்கால்.
சப்பத்தி - தட்டைமுத்து, கோர்த்தமுத்து.
சப்பரச்சாதியார் - தேவாங்கச் சாதியாருள் உறவினரல்லாதாரோடு சம்பந்தஞ்செய்யும் ஒரு வகையினர்.
சப்பரம்மஞ்சம் - சப்பிரமஞ்சம்.
சப்பரம்-ஒருசித்திரவிருக்கை, யானைத்தவிசு.
சப்பரை - மூடன், சப்பட்டை, சோம்பேறி.








# உங்களுக்கும் இப்படி ஆகலாம்.

## சில பெண்கள் குங்குமப் பொட்டை நெற்றியிலும் பின் உச்சியிலும், மீதியை கழுத்திலும் வைப்பார்கள்!

**டாக்டர் எம்.கே.முருகானந்தன்**
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
**குடும்பவைத்தியர்**

அவளது கழுத்தின் குரல்வளை மிதப்பின் சற்றுக் கீழே ஒரு அடையாளம்.பிறப்பு மச்சம் அல்ல. நெற்றியிட்ட பொட்டு இட்ட பெண்ணின் கழுத்திலும் மற்றொரு பொட்டா என மயங்காதீர். பல பெண்களின் வழக்கம்தானே இது என்கிறீர்களா?

இது பொட்டு இல்லை. ஆனால் பொட்டிட்ல் கழுத்தில் அழிக்க முடியாதபொட்டு போலாகிவிட்டது ஆம் தினமும் நெற்றியில் குங்குமப் பொட்டு வைத்த பின்னர். அதே கையால் அதே குங்குமத்தால் கழுத்திலும் ஒரு பொட்டு வைப்பது அவரது வழக்கமும் கூட. சில காலத்தின் பின்னர் அந்த இடம் சற்றுக் கறுத்துக் கொண்டு வந்தது.

சற்று அரிப்பும் இருந்தது. ஆம் தோலில் அழற்சி ஏற்பட்டது. **Contact Dermatitis** என்பார்கள். ஊறு விளைவிக்கக் கூடிய எந்த பொருளுக்கும் எதிரான சருமத்தின் எதிர்வினையாக அழற்சி ஏற்படுகிறது. பெரும்பாலும் அப்பொருள் சருமத்துடன் தொடர்புறும் அந்த இடத்திலேயே ஏற்படும்.

அந்நியப் பொருள் சருமத்தில் படும்போது ஏற்படும் அழற்சியை அந்நியப்பொருட் தொடர்பு தோல் அழற்சி **contact Dermatitis** எனலாம். ஒட்டுக்கிரந்தி என்று பேச்சு வழக்கில் சொல்லலாம்.

சருமத்திற்கு ஒவ்வாத பொருளால், அதாவது அலர்ஜியை ஏற்படுவதாக இருந்தால் அதனை தொடர்பு ஒவ்வாமை தோலழற்சி **Allergic contact Dermatitis** என்பார்கள்.

**Betamethazone** போன்ற ஸ்டீரொயிட் கிறீம் மருந்துகளை அவ்விடத்தில் பூசிவர ஒவ்வாமை அழற்சி குணமாகும். ஒவ்வாமையை ஏற்படுத்தும் பொருள் மீண்டும் சருமத்தில் தொடர்புபடாது வைத்திருப்பதே முக்கியமானது.

### "போகுது வருகுது போகுது வருகுது போய்ப் போய் வருகிறது......"

"...எத்தனை மருந்துகளைப் பூசிவிட்டேன். மறைவது போல ஏய்புக் காட்டிமீண்டும் மீண்டும் வருகிறது.."நாற்பதை அண்டிய அவள் தனக்கு சீனி கொலஸ்டரோல் பிரஸர் ஏதாவதுவந்துவிட்டதா எனப் பார்க்க வந்திருந்தாள்.

ரிப்போட்டுகளைக் காட்டி முடிந்து எழுந்து போக முயன்றவள் மீண்டும் இருந்தாள்."இதையும் காட்ட வேணும் என்று நினைச்சனான் மறந்து போனன்" என்று மூக்கைக் காட்டினாள். கறுத்து சொரப்பாக மூக்கின் மேற்பாகம் அசிங்கமாகக்கிடந்தது. "ஒரு வகை எக்ஸிமா ஒட்டுக் கிரந்தி" என்றேன்

ஆனால் 'மருந்துபூசியும் மாறுதிடடலையே' என்றாள்.

"கண்ணாடி போடுறனீங்கள்தானே. இப்ப ஒருக்கா போடுங்க பார்ப்பம்" என்றேன்.

நான் நினைத்தது சரி மூக்கில் அழுத்திக் கொண்டிருக்கும் நோஸ்பாட் **(Nosepad)** கண்ணாடியால் ஆனது. எனவே அது அடையாளத்திற்குக் காரணமல்ல.

கண்ணாடி பிரேமின் ரிம்தான் காரணம். அது மெட்டலால் **(metal)** ஆனது. அந்த மெட்டலுக்கான ஒவ்வாமையால் தான் அலர்ஜி ஏற்பட்டிருக்கிறது.

ஆதனால்தான் மீண்டும் மீண்டும் வருகிறது. "கண்ணாடியை மாற்றுங்கள் ஆனால் அது பிளாஸ்டிக் பிரேம் உள்ளதாக இருக்க வேண்டும்" என்றேன்.

அடுத்த முறை அவளைக் கண்டபோது மூக்கு அழகாக இருந்தது.

சருமத்திற்கு ஒவ்வாத பொருளாட ஒவ்வாமை ஏற்படுவதாக இருந்தால் அதனை தொடர்பு ஒவ்வாமை தோலழற்சி ஒட்டுக் கிரந்தி **Allergic contact Dermatitis** என்பார்கள்.





### எதை எதற்குள் வைப்பது எனத் தெரியாது

எதை எதற்குள் வைப்பது எனத் தெரியாது வைத்துத் திணறுபவர்கள் முதுவயதினர் மாத்திரமல்ல. இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை எந்தப் பருவத்திலும் தொடர்கிறது.

இவற்றில் பல ஆபத்திலும் முடிவதுண்டு. இந்தச் சுட்டிப் பையனும் வைத்துவிட்டான். எடுத்துவிடுகிறேன் என்று முயன்ற தாயாரால் முடியவிடடலை.

இன்னும் உள்ளுக்குத் தள்ளியதுதான் மிச்சம். சும்மா பார்த்தால் தெரிகிறதா. இல்லவே இல்லை. நீண்ட சுரங்கப் பாதை போல இருள் அப்பிக் கிடந்தது. ஒளியைப் பாய்ச்சியபோது ஏதோ வெண்மையாகத் தெரிந்தது. காய்ந்த காதுக் குடுமியா, கல்லா, உருட்டிய பஞ்சா?

இதை எடுப்பதற்கு பல உபகரணங்கள் இருக்கின்றன. இதன் நுனியை அந்நியப் பொருளின் பிற்புறமாகக் கொண்டு சென்ற பின் மறுபுறத்தில் உள்ள படியை அழுத்த நுனியில் உள்ள கொழுக்கி விரியும் மெதுவாக பிற்புறமாக நகர்த்த அந்நியப் பொருளை இழுத்துக் கொண்டு வந்துவிடும்.

காது மென்மையான பகுதி சிறு காயம் பட்டாலும் வலி ஏற்படும். கிருமி தொற்றலாம். தாயின் பொறுமையும் மருத்துவத் தாதிகளின் உதவியும் சேர வெளியே வந்துவிட்டது அந்த அந்நியப் பொருள். வேறொன்றும் இல்லை. மடித்துச் சுருட்டிய பேப்பர் துண்டு. பெற்றோர்களே, குழந்தையின் காதிற்குள் அந்நியப் பொருள் போய்விட்டால் நீங்களாக எடுக்க முயல வேண்டாம். துரதிஸ்டவசமாக பிற்புறம் தள்ளுப்பாட்டால் செவிப்பறை காயமடையலாம். காது கேட்பதே பாதிப்புறலாம்.






T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184


Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

Graphic design Vettimaniy Ltd

# எனக்கு தமிழ் தெரியாதிருந்தால் புரியாத மொழியில் படம் பார்த்தமாதிரி, இருந்திருக்கும் என் தாயகப் பயணம்!


றஜினா தருமராஜா











என்ன ஓர் அழகிய நாடு! விமானநிலையத்திலிருந்து வெளியே வந்தபோது, என் தாய்நாட்டின் சுவாசக்காற்றும் சூரிய ஒளியும் எவ்வளவு அருமையாகவும் அழகாகவும் இருந்தன.
எங்கு பார்த்தாலும் தென்னைகளும் பனைகளும் காணப்பட்டன. இவைகள் என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே இருந்தன.
யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்றுகொண்டு இருக்கும் போது, பார்க்கும் இடமெல்லாம் அழகான கோவில்களும், தேவாலயங்களும், புத்தர் கோவில்களும் காணப்பட்டன.

எனது பெற்றோர் பிறந்த ஊருக்கு வந்தடைந்த போது, அழுகைச் சத்தம் எனது தந்தையின் தாயார். அக் காட்சியை என்னால் மறக்கமுடியாது. பெற்றோரையும் பிள்ளைகளையும் பிரிந்து புலம்பெயர் நாட்டில் வாழ்பவர்களின் துயரத்தை அப்போது தான் நான் உணர்ந்தேன்.
உறவினர்கள் எங்கள் மேல் கொண்ட அக்கரை அன்பைப் பற்றி சொல்ல வார்த்தையே இல்லை.

எனக்கு மிகவும் பிடித்தவை கிணறுகள் தான். மற்றும் சுவையாக சமைத்த ஆரோக்கியமான உணவுவகைகளும். மண் பானைகளில் சமைப்பதை ஒப்பிடவே முடியாது.

மாமரம் ஒன்றைக் கண்டோம். மாங்காய்களைப் பறித்து உண்டோம். ஆஹா என்ன ஒரு சுவை.
கடல் தாண்டிச் சென்று நயினை அம்மனைத் தரிசிக்கும் வரம் கிடைத்தது. அங்கு சென்றதுமே என் மனதில் மகிழ்ச்சி உண்டாயிற்று. தமிழர்களின் கட்டடக்கலைப் பற்றி நூல்களில் மட்டுமே பார்த்து வியந்திருக்கிறேன். ஆனால் நேரடியாகப் பார்த்து மகிழும் வாய்ப்புக் கிடைத்ததில் சந்தோஷம்.
நல்லூர் கோயிலுக்குச் சென்றிருந்தேன், நிலா வெளிச்சத்தில் வெளியே கற்பூரம் ஏற்றி வணங்கியதில் வித்தியாசமான ஆனந்தம்.

என்னை மட்டும் அல்லாமல் எல்லோரையும் வியக்கவைத்தது திருக்கோணேச்சுரம் தான். நுண்கலைகளில் ஒன்றான சிற்பக்கலையின் சிறப்பினையும் நான் பார்த்து ரசித்தேன். இராவணன் வெட்டு, இராவணன் சிலை அழகாக இருந்தன. ஏழு சிறிய சதுர வடிவான கிணறுகள், இவை கன்னியா வெந்நீரூற்று ஆகும். அங்கே சென்றிருந்தோம். அங்கே ஒருவர் பாம்பை கையில் வைத்து வித்தை காட்டினார். எனது அண்ணா அப்பாம்பை தனது தோழில் வாங்கிவைத்திருந்தார்.

சுற்றுலாப் பயணிகளுக்குப் பார்ப்பதற்கு நல்லதோர் இடம். கடைகளுக்குச் சென்றால் தமிழர்களின் வரவேற்பும் கவனிப்பும் நன்றாக இருந்தது. .மொத்தத்தில் தமிழைக் கற்றதன் பயனை உணா்ந்தேன்.

தமிழ் எனக்கு தெரிந்திருக்கவில்லை என்றால் புரியாத மொழியில் படம் பார்த்தமாதிரி இருந்திருக்கும்.


அவர்களது உணர்வை அன்பை அணுவளவும் குறையாது என் மனதில் பதியவைத்தது எது என்றால் அது நான் கற்ற தமிழ் என்பேன். எனக்கு தமிழ் ஊட்டிய பெற்றோருக்கும் ஆசான்களுக்கும் நான் தலை வணங்குகின்றேன். முழுமை பெற்ற ஒரு விடுமுறையில் இருந்து, திரும்பி வருவதற்கு மனமே இல்லை. வெளிநாட்டுக்குத் திரும்பி வர மனமேயில்லை.


16 வது ஆண்டு நிறைவான சேவை
Kaneen Electronics
Internet-sat, Receiver,Camera-Alam கருவிகள் மலிவு விலையில் பெற்று பயனடையுங்கள்
சகல Alarmanlage, Überwachung Kamera,Sat-Tv, IP-TV, Internet, பொருத்துதல், பழுதுபார்த்தல் சகல வேலைகளுக்கும். 2016 Januarry; புதிய சட்டத்திற்கமைய உங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்களுக்கு தீ அபாய அறிவிப்பு Alarm கருவிகளை சட்டபூர்வமாக அனுமதி பெற்றவர்கள் மூலம் பொருத்துவதற்கும், உங்கள் வீடுகளில் நடைபெறும் சகல மங்கள நிகழ்வுகளையும் மிகத்துல்லியமான தொழில்நுட்பமுறையில் Video ஒளிப்பதிவு செய்வதற்கும், Sattelte மூலம் நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கும் இன்றே நாடுங்கள்
Tel: 02053 423 740 Fax: 2053 423 741 -Mobil: 0172 2931266
info@ kaneenelectronics.de
www.kaneenelectronics.de
Schevenhoferweg-24
42111 Wuppertal





# வெற்றுக் கிரகத்தை வெள்ளி பார்க்கும் விஞ்ஞானம்.







## என்ன கிரந்தம் பேசுறாய் என்று பாட்டன், பாட்டி திட்டியதுண்டா?

விஞ்ஞானம் பல வருடங்களாய் விண்ணைப் பார்த்துக்கொண்டே உள்ளது. வீட்டில் தாத்தா பாட்டி கேட்பது போன்று ”என்ன வெள்ளி பார்க்கின்றாய்?” என்ற கேள்விக்கு உகந்தாற் போல், அண்ணாந்து ஆகாயத்தை அலசும் அனைவருக்கும் முன்னோடியாய் இருந்தது தமிழனே என்பதை மறக்கவும் மறுக்கவும் முடியாது. இன்னும் ஆழமாக ஆராய்த்தோம் என்றால், இன்றைய அதி நவீன ஆடம்பர நாகரீகத்தில் தமிழ் ஏன் கற்கவேண்டும்? கற்றென்ன பயன் என்று சொல்வோர் வீட்டில் வயதான முதியோர் இருந்தால் கிரந்தம் பற்றி விசாரித்துப் பார்க்கவும்.






என்ன கிரந்தம் பேசுறாய் என்று பாட்டி உங்களைத் திட்டியதுண்டா? அப்படித் திட்டி இருந்தால், அது என்ன கிரந்தம் என்று எப்போதாவது சிந்தித்ததுண்டா? இந்த உலகில் கண்டுபிடிக்கப்படாத விடையங்கள் எண்ணற்ற ரீதியில் உண்டு. அதில் ஒன்று தான் கிரந்தமும். தமிழைப் படி என்று இன்றைய கால குழந்தையை நிர்ப்பந்திக்கும் முதியவர்கள் தமிழ் படித்துள்ளாரா? என்றால் இல்லை. நாம் படித்துள்ளோம் பல்கலைகளையும் முடித்துள்ளோம் அனைத்தையும் தமிழில்ப் படித்துள்ளோம். ஆனால் தமிழைப் படிக்கவில்லை.

கிமு 3250- 2750 ஆண்டு காலப் பகுதிக்குரிய மொஹஞ்ச தாரோ ஹரப்பா பிரதேசத்தில் இருந்து எடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள், அதற்கும் முன் என்று கருதப்படும் குமரிக்கண்டம், இன்று சமுத்திரத்தில் சாந்தமாய் தூங்கும் பகுதியாகிய குமரிகண்டத்தில் இருந்து எடுத்த கல்வெட்டுக்கள் மற்றும் இன்றும் இந்தியக் கோவில்களில் சிதைந்து போய் இருக்கும் கல்வெட்டுக்கள் இவற்றில் எழுதப்பட்டு எவராலும் வாசிக்க முடியாத நிலையில் உள்ள மொழியே கிரந்தம் என்று அழைக்கப்படுகின்றது.

இந்தக் கிரந்தம் எவ்வாறு தமிழ் மொழியாகும் என்று எழும் கேள்வி, கிரந்தத்தைப் பார்த்தோருக்கு எழாது என்பதே உண்மை. கிரந்தம் தமிழ் எழுத்துக்கள் போன்றே இருக்கும் சில வளைவுகள் சுளிவுகள் அதிகமாக இருக்கும், 50 விழுக்காட்டிற்கு மேல் தமிழ் எழுத்துக்கள் பயன்படுத் தப் பட்டிருக்கும், ஆனால் படித்தால் அர்த்தம் இருக்காது, இருக்காது என்று சொல்வது தவறு, புரியாது என்று சொல்வதே தகும்.

இந்தக் கிரந்தத்திற்கும் வேற்றுக் கிரகத்திற்கும் சம்மந்தம் உண்டா? என்று கேட்டால், கிரந்தம் போன்றே அந்தக் கேள்வியும் புரியாத புதிராகிப் போகும். இறைவன், இந்திரன், தேவர் என்று அனைவரும் வானில் இருந்து வந்தனர் என்றும், அவர்களை பார்த்து பயந்து கட்டுப்பட்டனர் பூலோகவாசிகள் என்பதும், கட்டுக் கதை என்று எல்லோரும் சொல்லி வருகின்றனர், ஆனால் வேற்றுக் கிரகவாசிகள் விண்ணில் இருந்து வர வாய்ப்புண்டு என்று, இன்று விஞ்ஞானம் சொல்லும் போது, விழி விரித்துப் பார்த்துக் கொண்டிருத்தல் மட்டும் மூடத்தனம் தானே?

வேற்றுக் கிரகங்கள் இன்று வெற்றுக் கிரகங்களாக இருக்கின்றன. உயிரினங்களின் ஊசலாட்டமே இல்லை, என்று மண்ணை விட்டு மாபெரும் தூரம் சென்று விண்ணை தேடும் விஞ்ஞானிகளுக்கு ஒருநாள் இந்தக் கிரந்தத்தை வாசிக்கும் ஞானம் கிடைத்தால், இன்னும் அதிகமான உண்மைகள் அறிய வர வாய்ப்புண்டு. கிரந்தம் விளங்க வேண்டும் என்றால் தமிழ் அறிவு வேண்டும். தமிழனாய் பிறந்து, பாக்கியம் செய்த நாம் தமிழிலே நாட்டம் கொண்டால், நாளைய எதிர்காலத்தை நாமே மாற்றலாம்.



தமிழைப் படித்திருந்தால் நாம் என்றோ விஞ்ஞானிகள், வைத்தியர்கள் என்று பெரிய ஞானிகள் ஆகி இருக்கலாம் என்பதற்கு சில உதாரணங்கள்.

அணு என்ற வார்த்தையை முதலில் பயன் படுத்தியவர் ஔவையார், இன்று அணுவில்த் தான் அகிலமே அசைகின்றது.


அந்த அணுவை உற்றுக் கவனித்தால், அறியவராத பல விடையங்கள் கேள்விகளாகத் தோன்றும். அணுவில் இலத்திரன் புரோத்திரன் நியூத்திரன் மற்றும் கதிர்வீச்சுக்கள் உண்டு, அதே போல் இந்த விண்வெளியை ஒரு நீள் வட்ட மையமாக எடுத்தால் புரோத்திரன் போன்று சூரியன் உண்டு. இலத்திரன்கள் போன்று கோள்கள் சுற்றுகின்றன, இங்கும் கதிர்வீச்சுக்களும் உண்டு. ஆகவே இலத்திரன்கள் கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய பொருள். 10 இன் மறை 16ஆம் படிக்கே புலப்படும் நுண்ணிய இலத்திரனை பூமி என்று எடுத்துக் கொண்டால், அந்த இலத்திரனைப் போல் கோடி மடங்கு சிறிய நுண்ணிய உயிரினங்களோ அல்லது ஏதேனும் ஒரு பொருளோ அந்த இலத்திரனில் இருப்பதற்கு வாய்ப்புண்டு. அப்படி இருப்பின் அவை தான் மனித உயிரையும், உலகின் இயல்பையும் கட்டுப் படுத்தும் சக்தியாக இருக்கும்.

பல்லாயிரம் ஒளியாண்டு தூரம் தள்ளியுள்ள பொருளைத் தேடும் விஞ்ஞானம், அணுவை ஊடுருவித் தேட நினைக்கவில்லை. அணுவைப் பிளந்தால் ஆற்றல் வரும் என்று அறிந்த விஞ்ஞானி எவ்வாறு வரும் என்று அறியவில்லை. அதை ஆராய்வோம், அறிந்தால் பிரியும் உயிரைப் பிடித்து வைக்கும் ஆற்றல் பெறவும் வாய்ப்புண்டு.

**ஆழக் கடலின் அடியிலுள்ள முத்தை, ஆகாயத்தில் தேடலாமோ? ஞானக் கண்ணைத் திறப்போம்.நாளையை இன்றே படைப்போம்.**



# யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும்



## கிளித்தட்டு மறித்தல்!

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**

அக்காலத்து இளைஞர்கள் பெரும்பாலும் விரும்பி விளையாடும் விளையாட்டாகக் கிளித்தட்டு மறித்தலைச் சொல்லலாம். இந்த விளையாட்டைத் "தாச்சி" என்றும் "யாடு" என்றும் அழைப்பர். வடமராட்சிப் பகுதியில் இதனை "யாடு" என்று அழைப்பதே பெருவழக்காகும். உடற்பயிற்சிக்கு மிகவும் உகந்ததான இந்த விளையாட்டு ஒரு காலத்தில் மிகப் பிரசித்தி வாய்ந்ததாக இருந்தது. பூத்தல்இ காய்த்தல்(காத்தலாக இருக்க வேண்டும்)இ காய்இ பழம்இ உச்சுதல்இ கொந்தம்பாய்தல் முதலான சொற்கள் இந்த விளையாட்டிலே பயன்படுத்தப்படும். இரண்டு கோடு முதல் எட்டுக்கோடு வரை போட்டு "யாடு" விளையாடுவார்கள். கீழ்க் கோட்டிலிருந்து மேலே போபவரும்இ மேற் கோட்டில் இருந்து கீழே வருபவரும் ஒரு அடைப்புக்குள் வந்துவிட்டால் "காயும் பழமும்" என்று கூறுவார்கள். எல்லாக் கோடுகளிலும் ஓடி வருபவரை "தெம்பால்" என்று அழைப்பர். சில இடங்களிலே தெம்பால் ஓடுபவரைக் "கிளி" என்று அழைப்பதும் உண்டு. இன்று மிகச் சிறுபான்மையாகக் கிராமத்து இளைஞர்கள் இதனை விளையாடுகின்றனர்.

**கிட்டி அடித்தல்**

பாரம்பரிய விளையாட்டுக்களிலே "கிட்டி அடித்தல்" என்னும் விளையாட்டினைப் பெரும்பாலும் இளைஞர்களே விளையாடுவர். மிகச் சிறுபான்மையாகச் சிறுவர்களும் விளையாடுவதுண்டு. இளைஞர்கள் கிட்டி அடித்தலுக்கும் சிறுவர்கள் கிட்டி அடித்து விளையாடுவதற்கும் இடையே சில வேறுபாடுகள் உண்டு. கிட்டி அடித்தல் விளையாட்டில் இரண்டு குழுவினர் இருப்பர். ஒரு குழு "அடிக்கிற குழு" என்றும் மற்றையது "அலையிற குழு" என்றும் அழைக்கப்படும். ஏறத்தாழ கிரிக்கெட் விளையாட்டின் தன்மையை இவ்விளையாட்டிற் காணலாம். கிட்டி அடித்தலில் "மறுத்தான் அடித்தல்" என்பது மிகவும் முக்கியமானது. மறுத்தான் அடிபட்டுப் பல், மூக்கு முதலியன உடைந்த பலரை அக்காலத்திலே கிராமப்புறங்களிற் காணலாம். இன்று இந்த விளையாட்டு முற்றாகவே மறைந்து விட்டது எனலாம்.

**அம்பெறிதல்.**

யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய விளையாட்டுக்களிலே "அம்பெறிதல்" விளையாட்டும் மிக முக்கியமானதாகக் காணப்பட்டது. "அம்புப்பிட்டி" என ஒரு பிட்டி அமைத்து இளைஞர்கள் அம்பெறிவர். வைரமான பன்னைத் தடிகளைச் சீவி (சில வேளையிற் பூவரசு, துவரை முதலான தடிகளையும் பயன்படுத்துவர்) வைத்திருப்பர். ஒவ்வொரு இளைஞரும் தமது உடல் வலிமைக்கு ஏற்ப அம்புப் பிடியைத் தொட்டு உரசிச் செல்லும் வகையிலே அம்புகளை எறிவர். 50, 100 யார்களுக்கு மேல் இந்த அம்புகள் செல்வதுண்டு. இன்று இந்த விளையாட்டும் முற்றாகவே மறைந்துவிட்டது.

**போஉத் தேங்காய் அடித்தல்.**

பெரும்பாலும் சித்திரை வருடப்பிறப்பன்றும் சித்திரா பூரணை அன்றும் நடைபெறும் விளையாட்டுக்களிற் "போர்த் தேங்காய்" அடித்தல் மிகவும் முக்கியமானது. இளைஞர்கள் மாத்திரமன்றி நடுத்தர வயதினரும் போர்த்தேங்காய் அடித்தலில் ஊக்கத்துடன் பங்குபற்றுவர்.

இளைஞர்களும் நடுத்தர வயதினரும் மகிழ்வுடன் விளையாடும் விளையாட்டுக்களிற் கோழிச்சண்டை (சேவற் சண்டை), மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி என்பவை குறிப்பிடத்தக்கவை. யாழ்ப்பாணப் பிரதேசத்திலே கோழிச்சண்டை முற்றாகவே மறைந்து விட்டதெனலாம். ( டானியலின் அடிமைகள் நாவலிற் கோழிச்சண்டை மிகவும் சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.) மாட்டுவண்டிச் சவாரி மட்டும் ஓரளவுக்கு இன்றுவரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இப்பிரதேசத்திலே இளைஞர்கள்இ நடுத்தர வயதினர்இ முதியவர்கள் என யாவரும் "நாயும் புலியும்" இ "தாயம்" முதலிய விளையாட்டுக்களோடு "கடதாசி" விளையாட்டும் (உயசனள) விளையாடுவர். பெரும்பாலும் மழைக்காலங்களில் வீட்டில் இருந்து விளையாடும் விளையாட்டாகத் "தாயம்" முதலிய விளையாட்டுக்கள் காணப்பட்டன. கடதாசி விளையாட்டுப் பந்தயம் வைத்து (பணம்) விளையாடுவதனால் அந்த விளையாட்டை விளையாடுபவர்களுக்கு அக்காலத்திற்சமூக மதிப்புச் சற்றுக்குறைவாகவே காணப்பட்டது.

பெண்பிள்ளைகளுக்கான விளையாட்டுக்கள்.

பெண்பிள்ளைகள் கொக்கான் வெட்டுதல், மாங்கொட்டை போடுதல், கெந்தியடித்தல், கயிறடித்தல், கும்மியடித்தல், ஊஞ்சலாடுதல் முதலான விளையாட்டுக்களை விளையாடுவர்.

பெண் பிள்ளைகள் வீட்டிற்கு உள்ளேயும், வீட்டு முற்றத்திலேயும்தான் பெரும்பாலும் விளையாடுவார்கள். இவர்களின் பிரதான விளையாட்டாகக் "கொக்கான் வெட்டுதல்" என்னும் விளையாட்டைக் குறிப்பிடலாம். இந்த விளையாட்டிற்கும் தொடர்பு இருக்கலாம் எனக் கருதத்தோன்றுகின்றது. "கொக்கான் வெட்டுதல்" விளையாட்டை இப்போது காணமுடியாது. பெரும்பாலும் பெண் பிள்ளைகள் விளையாடிய "மாங்கொட்டைபோடுதல்" என்னும் விளையாட்டும் முற்றாகவே மறைந்து விட்டது. கிராமப்புறப் பெண் பிள்ளைகள் கெந்தியடித்தல், கயிறடித்தல் முதலான விளையாட்டுக்களைச் சிறுபான்மையாக விளையாடுகின்றனர். கும்மியடித்தலும் இப்போது மறைந்துவிட்டது. எனினும் "ஞானப்பெண்ணே" என விழித்துப்பாடும் கும்மி இலக்கியங்கள் பல இன்றும் நம்மிடையே உள்ளன. இவை அக்காலத்துக் கும்மியடித்தலை நினைவூட்டுபவையாக விளங்குகின்றன.

**சொற்கள், சொற்தொடர்கள்.**

பாரம்பரிய விளையாட்டுக்களிற் பயன்படுத்தப்படும் சொற்றொடர்கள் சில இன்றும் கிராமங்களிலே வேறு சந்தர்ப்பங்களில் வழங்குகின்றன. ஒருவர் உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் பேசித் தன் காரியத்திலே தோற்றுப்போனால் "இவன் காயும் பழமும் சோர்த்துப் போட்டான்" என்று கூறுவர். "இவ்வாறே கொந்தம் பாய்கிறான்", "தெம்பால் ஓடுகிறான்", "துரும்புச் சீட்டடிக்கிறான்" முதலான சொற்றொடர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களிலே பயன்படுத்தப்படுகின்றன.

பாரம்பரிய விளையாட்டுக்களிலே இடையிலே விளையாட்டை நிறுத்தவேண்டின் "ஆட்டம்", "தொங்கல் துப்பல்" முதலான சொற்களைப் பயன்படுத்துவர்.

யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய விளையாட்டுக்கள் பல சமூக மாற்றம் காரணமாக மறைந்துவிட்டன. நாமும் அவற்றை மறந்துவிட்டோம்.

நன்றி: நூல் யாழ்ப்பாணப் பண்பாடு
மறந்தவையும் மறைந்தவையும்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
இயற்க்கை ஆயுள்வேத ஐரோப்பிய நாடுகளுக்கு உகந்த
கேரளா இயற்கை மருத்துவம்
இந்தியா ஈரோடு - இலங்கை நல:லூர் - பிரான்ஸ் லாகூர்நெவ்
தொலைபேசி இல : 0091984225622З
குருநாந் ராம் லக்ஸ்மன்
இயற்கை மூலிகை வைத்தியசாலையில்,கைநாடி பார்த்து
உங்கள் சகலவிதமான நோய்களுக்கும்
இயற்கை மூலிகை வைத்தியப்படி தீர்த்துவைக்கப்படும்.

முடி உதிர்தல்
சிக்கன் குனியாவால் காய்ச்சல்
தீராத கை-கால் வலி
ஆஸ்துமா,அலர்ஜி
உடல் பருமன் அதிகரிக்க-குறைக்க
மூட்டுவலி,பயம்,ஞாபக சக்தி
பெண்களுக்கான மாதவிடாய் பிரச்சனை
தோல்வியாதி(சொரியாசிஸ்)
சிறுநீரகக் கோளாறு
இருதயக் கோளாறு
பக்கவாதம்
நரம்புத் தளர்ச்சி
தலைவலி
காய்ச்சல்
சரவாங்கி
இரத்தக்கொதிப்பு
வாயுக் கோளாறு
உஷ்ணம்
நரம்புவாதம்
அல்சர்
வயிற்றுவலி
இடுப்புவலி
காக்காவலிப்பு
ஆண்மைகுறைவு
வெட்டைச்சூடு
ஜனகடு
உள்மூலம்
வெளிமூலம்
பகந்தரிமூலம்
கை-கால் குடைச்சல்
கழுத்துவலி
முகப்பரு
தேமல்
வெண்குஷ்டம்
டி.பி
வாதம்
மஞ்சள் காமாலை
கண்,காது
தொண்டை நோய்கள்
ஆறாத காயங்கள்

மற்றும் எந்தவிதமான நோய்கள் உடம்பில் இருந்தாலும்
இயற்கை மூலிகை வைத்தியப்படி,
பக்க விளைவுகள் எதுவுமின்றி குணப்படுத்த முடியும்.



Gartenstrasse 185, 41236 Mönchengladbach - Germany
0049 1517-5230649 // 0049 1521-8215707

### மட்டுவில் கல்வம் அருள்மிகு சாந்தநாயகி சமேத சந்திரமௌலீவரர் ஆலயம்!

# ஆயிரம் ஆண்டு பழமைவாய்ந்த சிவாலயம்









நமது குடும்ப உறவில் நாம் கணவனது பெயரைச் சொல்லி அதனுடன் இணைத்து மனைவியைக்கூறுவது வழக்கம்.
ஆனால் சிவனும் சக்தியும் பாதி பாதியாக இருந்தாலும் ஒரு பாதி இல்லை என்றால் கதியே இல்லை என்றாகிவிடும்.
இருந்தும் பாதியான சக்தியை முன்னிலைப்படுத்தியே சிவன் இருக்கிறார். அதனை சிவ ஆலயங்களின் தனிச் சிறப்பு என்றும் சொல்லலாம்.

நான் அறிந்த வரை தாயகத்தில் உள்ள அராலி வண்ணப்புரம் சிவன் கோவில், அதன் முழுப்பெயர்

ஸ்ரீ விசாலாட்சி சமேத விஸ்வநாதேஸ்வரர் ஆலயம் என்பதேயாகும்.
இவ்வாலயமும் வண்ணார் பண்ணை சிவன் ஆலயமும் ஒரே காலத்தில் சிவலிங்கம் பிரதிஸ்டை செய்ப்பட்டதாக வரலாறு உண்டு. இந்தியாவில் இருந்து இரு சிவலிங்ககங்கள் கொண்டு வரப்பட்டன. அவற்றில் பெரியது வண்ணார் பண்ணை சிவன் கோவிலிலும், சிறியது அராலி வண்ணப்புரம் சிவன் கோவிலிலும் பிரதிஸ்டை செய்யப்பட்டது. பெரிய சிவலிங்கம் செல்வ லிங்கம் என்றும் சிறிய சிவலிங்கம் ஞான லிங்கம் என்றும் அன்று சொல்லப்பட்டதாகக் சில குறிப்புக்களில் காணமுடிகிறது.
மேலும் சிவ வழிபாடு இலங்கையில் சிறந்து விளங்கியது என்பதற்கு இராவணன் சிவன்மேல் கொண்ட பக்தி சான்றாகிறது.

யாழ்ப்பாணத்தில் மட்டுவில் கிராமத்தில் 1000 ஆண்டு பழமை வாய்ந்த ஒரு சிவாலயம் உண்டு என்றதும், அதனைத் தேடி அங்கு சென்றேன்.


வயல் வெளிகள், இடையே குறுகிய தெருக்களால் ஆலயத்தின் பெயரைக் கேட்டுக் கேட்டு சென்றேன். தெருவோரம் வயலில் வேலை செய்பவர்கள் எல்லோரும், நேராகப் போங்கள் தெரியும் என்றார்கள். அவர்கள் சொன்ன நேர் வாழ்வில் நேராகச் சென்றால் ஆண்டவன் தெரிவான் என்பது போல் இருந்தது.

ஆலயத்தின் பெயரும் முன்பு சொன்னமாதிரி சக்தியை முன்வைத்து, சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்.


கண்டுகொண்டேன் ஆலயத்தை! அழகான வயல் வெளியில், முன்னே பருத்த பலாமர நிழலில் அமைந்திருந்தது. அந்த ஆலயத்தின் தலவிருட்ஷமும் பலாமரம்தான்.

ஆலயம் பெரும்பகுதி கருங்கல்லால் அமைந்திருந்தது. ஆலயம் புனருத்தாரணம் செய்ப்பட்டு வருவது தெரிந்தது.

இருந்தாலும் இன்னும் இன்னும் அழகாக ஆயிரம் ஆண்டு பழமை வாய்ந்த



சிவஶ்ரீ.சிவசாமிக்குருக்கள்



சிவஶ்ரீ.சி.ஜெயந்திநாதக்குருக்கள்

சிவாலயத்தை அதன் பழமை மாறாது உருவாக்கினால் சிறப்பாக இருக்கும்.பெருந்தெருக்கள் அருகே கோவில் இல்லை. மக்கள் வசதியாக வந்து போக போக்குவரத்து வசதி பார்த்து அன்று ஆலயங்கள் கட்டப்படவில்லை.

பக்கத்தில் கடைக்கு வந்தனான், வந்த இடத்தில் வந்தனான் என்று உங்கள் நண்பனிடம் சென்று சொல்லிப் பாருங்கள். அவன் முகம் எப்படியாகும் என்று சொல்லத் தேவை இல்லை.

தொடர்ச்சி 14 ம் பக்கம்








மட்டுவில் கல்வம் அருள்மிகு சாந்தநாயகி சமேத சந்திரமௌலீவரர் ஆலயம்!

ஒரு நண்பனையே உன்னிடம் தான் வந்தனான். தேடித் தேடித், வந்தனான் என்று சொன்னால் அவனுக்கு நீங்கள் வைத்திருக்கும் அன்பின் ஆழம் தெரியும். அது போல்தான் ஆண்டவனையும் நாம் தேடிச் செல்ல வேண்டும். சுப்ப மாக்கெற்றுக்கு வந்த இடத்தில் பார்த்திட்டுப்போகும் பாத்திரமாக ஆண்டவனை எண்ணமுடியாது. காரணம் நாம் ஆண்டவனையும் நம் வடிவிலேதான் வணங்குகின்றோம். நம் உறவு முறைகளில் தானே ஆண்டவனையும் பார்க்கின்றோம்.

அன்று செல்லக் கதிர்காமம் செல்லப் பாதையா இருந்தது. கல்லும் முள்ளும் கடந்து சென்று வணங்க வில்லையா.
எனவே தேடிச் செல்லவேண்டும் தெய்வத்தை என்பதற்கு இணங்க அந்த ஆலயம் அமைந்திருந்தது.

இந்தக் கோவில் முன்னே அழகிய கேணி அமைந்துள்ளது. அப்புண்ணிய தீர்த்தத்திற்கு பெயர் ” சந்தரபுஸ்கரணி” முன்னுள்ள கேணிதான் தீர்த்தம்

இந்த கோவில் சிவனின் பெயர் சந்திரமௌலீஸ்வரன், அம்பாள் பெயர் சாந்தநாயகி. இந்த கோவிலுக்கு ஈழமண்டலசாதகம் என்னும் பாடல் பதிகம் உள்ளது. இந்த ஆலயத்தின் தலவிருட்சம் பலாமரமாகும். ஒரு காலத்தில் திருவெம்பாவை பூஜை நேரத்தில் இந்த ஆலயத்தில் நிலத்தின் கீழ் பலாபழம் பலாமரத்தின் காய்த்ததாக ஒரு செவி வழி கதையும் உண்டு.

இந்த ஆலயத்தைச் சுற்றி பின்பக்கம் காட்டு பகுதியில் ஐயனார் கோவிலும், பக்கத்தில் கல்வம் பிள்ளையாரும். வடபகுதியில் காளிகோவிலும் அமைந்துள்ளது.

இந்த ஆலயத்தில் பிரதம அர்ச்சகர்களாக இன்று யேர்மனி சுவற்றா நகரில் அமைந்துள்ள ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயத்தின் பிரதம குருக்கள் துர்காதுரந்தரர் சிவஸ்ரீ ஜெயந்திநாத குருக்களின் தாத்தா அப்பாசாமிக் குருக்கள் 1950 ஆண்டுமுதல் 1960 வரையும், பின் தந்தையார் சிவஸ்ரீ சிவசாமிக்குருக்கள்
1960 முதல் 1995 வரையும், அதன் பின்னர் அவரது சகோரதன் சிவஸ்ரீ சபாநாதக்குருக்கள் 1995 முதல் 2010 வரை சிவனை அர்ச்சிக்கும் பேறு பெற்றவர்களாக இருந்துள்ளனர்.



யேர்மனி டோட்மூண்ட் அமைந்துள்ள சாந்தநாயகி சமேத சந்திரமௌலீவரர் ஆலயம்

யேர்மனியில் டோட்மூண்ட் நகரில் அமைந்துள்ள சாந்தநாயகி சமேத சந்திரமௌலீவரர் ஆலயத்தின் பெயரும் 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்த மட்டுவில் கல்வம் சாந்தநாயகி சமேத சந்திரமௌலீவரர் ஆலயத்தின் பெயரும் ஒன்றாக இருப்பது கண்டு அது பற்றி அறிய முற்பட்டேன். அபோது அந்த ஆலயத்தினை ஆரம்பித்தபோது அங்கு பூஜை செய்த சிவஸ்ரீ ஜெயந்திநாதக் குருக்கள் அப்பெயரினை முன்மொழிந்ததாகவும் அறியக் கிடைத்தது. பழமை மிக்க பெருமைமிக்க ஓர் ஆலயத்தின் பெயரினைக் கொண்டு அமைந்த ஆலயம், இங்கு புலம்பெயாந்த நாட்டில் அருள்பாலிப்பது மக்களுக்கு கிடைத்த பேரருளாகும்.
தாயகத்தில் உள்ள பெருமைமிக்க பழமைவாயந்த ஆலயங்களை புதுப்பித்து (அதாவது அதன் பழமை குன்றாது) அவற்றைப் பேணிக் காப்பது நமது கடமையாகும். அரசு அரச மரம் கண்ட இடம் எங்கும் புத்தர் சிலை வைக்கிறது என்று குமுறும் நாம், இருப்பதை குன்றாது பேண முயல்வோம்.









# தமிழன் பிறருக்காகத் தன் நலனை விட்டுக்கொடுக்கும் பண்பு கொண்டவன்! அவன் படும் இன்னல்களுக்கும் அப் பண்பே காரணம்!



## சிங்கப்பூர் தமிழச்சங்கத் தலைவர் திரு அ.வை.கிருஷ்ணசாமி

சிங்கப்பூர் சென்றால் நகைவாங்கலாம் சைனபசார் பார்க்கலாமே, இரவில் மின்பல்புகளால் ஆன மரங்கள் பார்க்கலாம் அதற்கு மேலே வானத்தில் அமைந்திருக்கும் நீரத்தடாகம் பார்க்கலாம் இப்படி எத்தனையோ பார்க்கலாம். இருந்தாலும் ஒரு தமிழச்சங்கம் பல ஆண்டுகளாக சிங்கப்பூரில் தமிழ்த் தொண்டு புரிந்துவருகிறது அதனை பார்க்கவேண்டும் என்ற எண்ணமே முதல் தோன்றியது. இணையத்தளத்தில் தேடி அதன் விலாசத்தை எடுத்துக்கொண்டு விரைந்தேன்.

கட்டிடம் இருந்தது. அங்கு எவரும் இல்லை. அதன் அருகே ஒரு காரியாலயம் இருந்தது. அங்கு சிங்கப்பூர் தமிழ்சங்கத்தின் தொடர்புகளுக்கு உரியவர்களின் தொலைபேசி இலக்கங்கள் இருந்தன. அவர்களிடம் பெற்று திரு கிருஷ்ணாவுடன் தொடர்பு கொண்டோம்.

நாம் விபரத்தைச் சொன்னோம். உடனே நில்லுங்கள் சற்று நேரத்தில் வந்திடுவேன் என்றார். சொன்னது போல் வந்தார். வந்ததும் தமிழ் சங்கத்தின் கதவைத் திறந்து நம்மை அழைத்துச்சென்றார்.

தமிழ் அந்த இனிய மொழி நாம் எந்த தேசத்துக்குச் சென்றாலும் அங்குள்ள தமிழர்களுக்கு எம்மை உறவுக்காரர்கள் என ஆக்கி விடுகின்றது.
முதல் முறைதான் திரு கிருஷ்ணாவைச் சந்திக்கின்றேன், ஏதோ பாலிய நண்பனைக் கண்டது போல, விட்ட இடத்தில் இருந்து கதை ஆரம்பிப்பதுபோல் எமது உரையாடல்கள் அமைந்தது.

தமிழ் இனம் நலிந்து போகிறது என வேதனைப்பட்டார். தமிழ்ச்சங்கம் பல ஆண்டுகளுக்கு முன் தந்தை பெரியார் அவர்களின் முற்போக்கு கொள்கையுடன் தமிழர் சீர்திருத்தச் சங்கம் என ஆரம்பமாகி, பின்னர் தமிழ்ச்சங்கமாகப் பரிமானித்தது என்றார்.

கருத்தரங்குகள் கலைவிழாக்கள் மாநாடுகள் என பல செய்துவந்த சங்கம் இன்று குறிப்பிட்ட சில நிகழ்வுடன் இருக்கிறது.

ஒரு காலத்தில் இச்சங்கத்தின் தேவை இருந்தது. மக்களுக்கு இப்போ மந்திரிகளே மக்களை மாதம் ஒரு முறை நேரில்காணும் அளவுக்கு நாடு வந்துவிட்டது. அத்தோடு தமிழ்மக்களின் தமிழ் ஈடுபாடும் குறைந்து வருகின்றது. தமிழன் தலைநிமிர முடியாமல் உள்ளதற்கு காரணம் - தமிழன் பிறருக்காக எதனையும் விட்டுக்கொடுக்கும் உயர்ந்த பண்பும் ஒரு காரணம் என்ற உண்மையை வேதனையுடன் திரு கிருஷ்ணா முன்வைத்தார்.

சில மணித்துளிகள் பேசினாலும், தமிழ் மழையில் நனைந்த மகிழ்வு ஏற்பட்டது. அங்கு அருகே உள்ள மண்டபத்தில் அவரது மகள் நடனவகுப்புக்கள் நடத்தி வருகின்றார். அவ்வகுப்பில் இந்தோனீசியா மற்றும் சீனா மாணவிகளும் நடனம் கற்கின்றார்கள். பல நாடுகளுக்கும் கலைச் சுற்றுலா செல்கின்றார்கள். அங்கு சந்தித்த சில மாணவர்கள் வெற்றி மணியை ஆவலுடன் வாங்கிப்பார்த்தனர். தமிழ் புரியாது ஆனால் வடிவம் புரிந்துகொண்டு மகிழ்ந்தனர். அவர்கள் அண்மையில் நாட்டிய நாடகம் ஒன்றை சிறப்பாக அளித்த கலைஞர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ்ச்சங்கத் தலைவர் திரு கிருஷ்ணா அவர்கள் எம்மை காரில் ஏற்றி நமது விடுதிக்கு அழைத்துச் சென்றார். போகும் வழியில் திடீர் என நிற்பாட்டி மாம்பழம் நல்லது வாங்குவோம் என வாங்கி அன்பாகத் தந்தார். உங்களுக்கு எப்படித் தெரியும் சிவகுமாரனுக்கு மாம்பழம் பிடிக்கும் என்று கேட்க நினைத்தேன். கேட்டிருந்தால் அவர் என்னை சிவ குமரன் என்றிருப்பார் என்பதும் தெரியும்.


RKL IMMO .de IMMOBILIEN & BAUFINANZIERUNG
Umsatzsteuer ID.-Nr. DE186406298 | Berufserlaubnis erteilt am 08.01.2002
Sinnadurai Kiritharan | Tel. 05723-914519 | www.rklimmo.de | info@rklimmo.de



Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்:100% Free service
Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை

**நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!**
மேலதிகவிபரங்களிட்கு **Tel. 05723-914519** or www.rklimmo.de
or www.lankasri.com






# ஏன் தமிழன் அடிவாங்குகிறான்!

வெற்றி மைந்தன்



உலகின் மிகப் பழமையான மொழி எனும் பெருமை எம் தமிழ் மொழிக்கு உண்டு. எனில் ஆதி காலத்திலிருந்தே விதையாய் கிளம்பிய மானுட வரலாறு தமிழனுக்கு உண்டு. எந்த மொழியிலும், இல்லாத, இலக்கியச் செழுமை தமிழுக்கு மட்டுமே உண்டு. தெய்வீக மொழியான தமிழை அழிக்கவும், ஒழிக்கவும் எந்த மொழியாலும முடியவில்லை என்பதே உண்மை.

எந்த வரலாற்றுப் பாரம்பரியத்திலும் ,இல்லாத அளவுக்கு மனித நேயத்தையும், விருந்தோம்பலையும் போதித்து வந்த ,இனம் தமிழ் ,இனம். அண்டி வந்த எவரையும் நிராகரிக்காத, அவர்களுக்காக தனது உயிரைக் கூட தருமளவுக்கு தரும சிந்தனையும், விருந்தோம்பலின் விஸ்வரூபமும் கொண்டவர்கள் தமிழர்கள்.

வீட்டுக்கு வந்த நபருக்கு உணவளிக்க அரிசி, இல்லையே என கலங்கி, வயலில் விதைத்த விதை நெல்லைத் தோண்டி எடுத்து வந்து சமைத்துக் கொடுத்த கதைகள் நமது வரலாற்றில் உண்டு. அந்தத் தமிழனுடைய மனிதநேயத்தின் மூலக்கூறுகள் ,இன்னும் அவனுக்குள் உண்டு.

வீரத்தின் விளைநிலமாய் வாழ்ந்தவன் தமிழன். தனது காதலியுடன் கொஞ்சுகையில் கூட அவளுடைய கண்கள் அவனுக்கு வில்லாகவும், வேலாகவும் தான் தெரிந்தன. ஆனால் போர்க்களத்தில் நின்ற போது அம்புகள் பெண்களின் கண்களாகத் தெரியவில்லை. காதலில் கசிந்துருகிய தமிழன் வீரத்தை முன்வைத்தே வாழ்ந்து வந்தான்.

காலத்தால் மூத்த ஓர் அன்னையின் நேசமும், வீரத்தால் மூத்த தொன்மையும் கலந்து வாழ்ந்தவன் தமிழன். அதன் நீட்சியாய் தான், இருக்கிறான், இன்றைய தமிழன்.

,இயேசுவின் வீரம் அவருடைய சிலுவை மரணத்தில் வெளிப்பட்டது.
அன்னை தெரசாவின் வீரம் அவருடைய கருணையின் அர்ப்பணிப்பில் வெளிப்பட்டது.

சிங்களப் படைகள் வெறித்தனத்தில் வேட்டையாடிபோதும் கண்ணியமும், போர்நெறியும் மீறாமல் முன் நின்ற வரலாறு கொண்டவன் எம் தமிழன்.

**வீரம் என்பது வன்முறையல்ல.**

வீரம் என்பது அடுத்தவனை அழித்து அதிலே சிரிக்கும் குரூரமல்ல. வீரம் என்பது மனிதநேயத்தை மறுதலிப்பதல்ல. அதைப் புரிந்தவன் தமிழன். அதனால் தான் தன்னை ஆளவும், தன்னோடு வாழவும் தமிழனல்லாதவன் வந்தாலும் அன்போடு அரவணைக்கிறான்.

முல்லைப் பெரியாறு, இல்லையென்றாலும் மலையாளி சகோதரனை தமிழக வீதிகளில் டீ விற்காதே என்று சொல்லி யாரும் அடித்து விரட்டியதில்லை. கன்னட சகோதரன் அகதியைப் போல அலறியடித்து ஓட வேண்டிய சூழல் எழுந்ததில்லை. தமிழனின் வீரம் சகிப்புத் தன்மையில் எழுகிறது. மனிதநேயமும், அன்பும் கலந்த சகிப்புத் தன்மை.

காந்தியடிகள் ஆடை துறந்தது வலிமையின் அடையாளம். தமிழன் நிராகரிப்புகளையும், போராட்டங்களையும், எதிர்ப்புகளையும் சந்தித்தாலும் எல்லை மீறாமல் நிற்பதில் வெளிப்படுகிறது அவனுடைய வீரத்தின் ஆழம்.

தான் மட்டும் வாழவேண்டுமென நினைத்திருந்தால் ,இன்று தமிழன் உலகை ஆண்டிருப்பான். பிறர் வாழ வேண்டுமென நினைத்ததால் தான் குஞ்சுகளில் மிதி தாங்கும் அன்னையாய் பொறுமை காக்கிறான்.

,இது வலிமை என புரிந்து கொள்ளுங்கள் பிற மொழி நண்பர்களே. முறத்தால் புலி விரட்டிய மறத் தமிழச்சியின் பிள்ளைகள் கோழைகளாவதில்லை. அமைதி என்பது அத்துமீறலுக்கான அங்கீகாரமல்ல. ஈட்டிக் காயம் மார்பில் ,இல்லையேல் எம் அன்னையே எம்மை நிராகரிப்பார். எங்கள் ஈரம் விளையும் நெஞ்சில் நேசம் விதையுங்கள். விரோதம் விளைவிக்க முயலாதீர்கள்.

**தமிழன் அடிவாங்குவது அன்பின் வெளிப்பாடே**
**அடிமைத்தனத்தின் அடையாளமல்ல.**






# காதல் எல்லாம் கல்யாணத்தில் முடிவதில்லை!




காதல் எல்லாம் கல்யாணத்தில் முடிவதில்லை. எல்லா காதலும் கல்யாணத்தில் முடிந்திருந்தால் என்ன நடக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

ஆரம்பப் பள்ளியின் அரும்பு நாட்களில் கண்களுக்குள் சின்ன மின்மினிக் காதல் ஒன்று விட்டு விட்டு ஒளிகொடுக்கும். கணக்கு பாடத்தின் விடையைக் காட்டிக் கொடுத்ததன் மூலமாகவோ, இருந்த பலப்பத்தை இரண்டாய் ஒடித்து பாதி கொடுத்த பாசத்தின் பார்வையிலோ அந்த மின்மினிகள் தோன்றியிருக்கலாம். காமத்தின் அரிச்சுவடி கூட அருகில் நுழையாத, இனக்கவர்ச்சியின் இனம் என்ன என்பதே புரியாத பால்யத்தின் புனிதக் காதல் அது.
ஐந்தாம் வகுப்பின் பிரியாவிடை கணங்களில் சொல்ல முடியாத ஏதோ ஒரு இழப்புடன் விலகிப் போகும் அந்த காதல். காலத்தின் சாரட் வண்டியில் யாராரோ ஏறி இறங்கிப் போனபின்பும் அந்த முதல் காதலின் மெல்லிய சத்தமும், அந்த முதல் காதலியில் மறந்து போகாத பெயரும் மனதுக்குள் ரீங்காரமிடும். அந்த ஆரம்பப் பள்ளியை எப்போதேனும் கடக்கும் கணங்களில் சட்டென மீண்டும் கண்ணுக்குள் எட்டிப் பார்த்துச் செல்லும் அந்த மின்மினிக் காதல்.

இரண்டாவது காதல் பதின் வயதுகளின் படிகளில் பல்லாங்குழி ஆடும். ஹார்மோன்கள் சக்திமான்களாக புஜம் உயர்த்தும் பொழுதுகளில் இந்தக் காதல் கனவுகளுக்குள்ளே கற்பனைகளையும், கற்பனைகளுக்குள்ளே கனவுகளையும் ஒளித்து வைத்து மாயாஜாலம் காட்டும். இதுதாண்டா காதல் என பள்ளிக்கூட தாவணி தேவதைகளின் பின்னே அரும்பு மீசை பாரதிராஜாக்களாக அலையவிடும்.

கடைக்கண் பார்வை போதும் இடுக்கண் எல்லாம் நீங்கும் என இலக்கியம் பேசும். கள்ளி முள்ளில் காதல் கிறுக்கி, காம்பஸால் மேஜை கிறுக்கி, நாளெல்லாம் கவிதை கிறுக்கி இந்தக் காதல் கிறுக்கு தேசத்தில் கிறு கிறுக்க வைக்கும். காதலுக்கும், காமத்துக்கும் வெகு அருகில் உலவும் இந்தக் காதல் இரண்டையும் விட உயர்வாய் இதயத்தில் பச்சை குத்தும்.

கல்லூரிக் காதல் கலர்புல் காதல். பரவச தேசத்தின் பளிங்கு மாளிகையில் கனவுகளின் தாயம் உருட்டி விளையாடும் காதல். குறைந்த பட்சம் ஒரு காதல் என்பது கல்லூரிக் காதலின் கணக்கு. மேலதிகக் காதல் என்பது சுகமான அவஸ்தை அல்லது அவஸ்தையான சுகம். தற்குறிப்பேற்ற அணிகளும், இல்பொருள் உவமை அணிகளும், உவமைத் தொகைகளும் கவிதைகளாய் பொழியும் காலம் இது. அணி என்பதே அழகுதானே, உன்னை அணிகளால் அழகு பார்க்கவா, அணியாமல் அழகு பார்க்கவா என சிலேடை சில்மிஷங்கள் உலவும் காதல்.
நல்லவேளை காதல் எல்லாம் கல்யாணத்தில் முடியவில்லை. கல்யாணம் முடிந்து குழந்தை குட்டிகளுடன் வாழ்வின் உன்னத வாழ்க்கை வாழும் எல்லா மனங்களுக்குள்ளும், ஏதோ ஒரு மூலையில் பரவசம் ஊட்டும் பச்சைய நினைவுகளாய் இந்தக் காதல்கள் கண்ணாமூச்சி ஆடுகின்றன. நீ இமைக்கும் அழகைக் காண்பதற்காகவே
இமைக்காமல் கிடக்கின்றன என் இமைகள் என வந்து விழுகின்ற கவிதை வரிகளில் ஏதோ ஒரு பால்ய காதலின் வாசம்.

இந்தக் காதல்கள் தான் வாழ்க்கையை அழகாக்குகின்றன. இந்தக் காதல்கள் தான் காதலை அர்த்தப்படுத்துகின்றன. இந்தக் காதல்கள் தான் ஒரு மனிதனை ரசனைவாதியாகவோ, இலக்கியவாதியாகவோ, கலைஞனாகவோ, ஓவியனாகவோ, சிற்பியாகவோ மாற்றுகின்றன.

பால்ய காலக் காதல்களின் வேர்களிலிருந்து தான் இலக்கியவாதிகள் தங்களுக்கான விருதுப் படைப்புகளை உறிஞ்சி எடுக்கின்றனர். திரை இயக்குனர்களின் கனவுப் படைப்புகள் பெரும்பாலும் அவர்களின் கனவுகளில் புரண்டு படுக்கும் காதலின் பெருமூச்சுகளே. கவிஞர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். பால்யக் காதல் இல்லாத கவிஞர்கள் பாலையில் சாகுபடி செய்யும் பரிதாபத்துக்குரியவர்கள்.

எல்லாக் காதலையும் சொல்ல முடியாது. எல்லாக் காதலையும் வெல்ல முடியாது. காதல் என்பது காற்றைப் போல, அரைகிலோ காற்றை அளந்து தர முடியாது. காதல் மின்சாரம் போல, நாலு மீட்டர் மின்சாரத்தை வெட்டிக் காட்ட முடியாது. காதல் என்பது உணர்வு. தோல்வி என்பது நாமாகவே சொல்லிக் கொள்வது. நந்தவனத்தில் நடப்பது போன்றதே காதலில் பயணிப்பது. ஓர் முறை நடந்த சிலிர்ப்பு மறையப் போவதில்லையே.

நல்லவேளை எல்லாக் காதலும் கல்யாணத்தில் முடிவதில்லை. காதல் பிரமிப்புகளை மட்டுமே வரிசையாய் வைக்கும். கல்யாணம் ரேஷன் கடைகளிலும் வரிசையில் நிற்க வைக்கும். காதல் சிரிப்புகளின் சின்ன தீவு, திருமணம் வாழ்க்கையின் நெரிசல் வீதி. காதல் அருவியின் ஆக்ரோஷம், திருமணம் தண்ணீரின் தடுமாற்றம். காதல் விருப்புகளின் அனுமதிச் சீட்டு, திருமணம் பொறுப்புகளின் கூட்டுத் தொகை.

எல்லாக் காதலும் கல்யாணத்தில் முடிவதில்லை.
ஆனால்,
எல்லா கல்யாணங்களும் காதலில் தொடங்குகின்றன !

இது இரண்டாம் பாகம். எழுதிக் கிழித்தவைகளை புறந்தள்ளிவிட்டு புதிதாய் பதிப்பிக்கப் போகும் கவிதைத் தொகுப்பு. மாங்கல்ய முடிச்சிட்டு, இடைவெளி அவிழ்த்து புலன்களின் வாய்க்கால்களின் புதிதாய் பதியமிடப்போகும் நாற்று.

இது காதலின் கூட்டுத் தொகை. பால்யக் காதலின் புனிதமும், பதின் வயதுக் காதலின் பரவசமும், கல்லூரிக் காதலின் சில்மிஷமும் இணைந்து ஊட்டும் கூட்டாஞ்சோறு. திருமணத்தில் செயல்படுத்தத்தான் அத்தனை முன்காதலின் முகவுரைகளா ?
கடந்து வந்த பாதைகளின் இனிமைகளை எடுத்து, கல்யாண வாழ்க்கையின் வீதிகளில் விதைப்பவர்கள் வலுவான திருமண வாழ்க்கையை அறுவடை செய்கின்றனர். அதுவே காதலுக்குச் செய்யும் மரியாதையும் கூட. கடந்த காதல்களின் இனிமையை மறந்து காயங்களில் மட்டுமே கூடு கட்டிக் குடியிருப்பவர்கள் திருமணத்தை மட்டுமல்ல காதலையே காயப்படுத்து கின்றனர்.

**எல்லாக் காதலும் கல்யாணத்தில் முடிவதில்லை.**
**எல்லா கல்யாணங்களும் காதலில் தொடங்குகின்றன !**




RAJU PARCEL SERVICE
ராஜு பொதிகள் சேவை
தற்பொழுது காப்புறுதியுடன்
+ கொழும்பு
+ யாழ்ப்பாணம்
Home delivery
+ கிளிநொச்சி
+ வவுனியா
+ முல்லைத்தீவு
+ திருகோணமலை
+ மட்டக்களப்பு
+ மன்னார்
+ புத்தளம்
+ சிலாபம்
+ நீர்கொழும்பு
+ கண்டி
+ காலி
மற்றும் ஏனைய பிரதேசங்களுக்கும்
நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு எமது அடுத்த பொதிகள் சேவை நவம்பர் ஆரம்பத்தில் இருப்பதால், தயவுசெய்து உங்கள் பொதிகளை எமது Raju Parcel Service ஏஜண்ட்டுகளிடம் அக்டோபர் 25 ற்கு முதல் ஒப்படைக்கவும்.
கீழ்க்காணும் நாடுகளில் எமது Box and Packing tape free யாக தமிழ் வர்த்தக முகவர் நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்
Germany
Holland
Sweden
France
Belgium
Italy
Denmark
தொடர்புகளுக்கு :
RAJU PARCEL SERVICE
RPS
DE: 0049 (0) 163 5065 663
NL: 0031 (0)645 664 110




## விறகினை மூட்டும் வேளை

## தீயும், விறகும், ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துதான் பற்றிக் கொள்ளுமா?

கண்ணம்மாவிடத்து காதலன் பாரதி கொண்ட அளப்பெரும் ஆழி மிஞ்சும் காதலை செப்பிடஎத்தனித்து எத்தனை தடவை என் எழுதுகோல்கள் வென்றிட முயன்றாலும் மீண்டும் மீண்டும் தோற்றுக் கொண்டேயிருக்கிறது.



"அன்னியமாக நம்முள் எண்ணுவதில்லை - இரண்டு
ஆவியும் ஒன்றாகுமெனக் கொண்டதில்லையோ?

அடிமை புகுந்த நிலையையும். ஆரத்தழுவி அமர நிலை எய்தும் தன்மையும். ஆவி இரண்டும் ஒன்றெனக் கொள்ளும் பிணைப்பையும் தம் பல கவிகளில் முத்திரையிட்டள்ளார்.

ஆன்ம பந்தமாய் உயிர்கவ்வும் உணர்வ வெறமனெப்பிறப்பில் அறிந்து தெரிந்து அதன்பின் ஏற்படவல்லதல்ல. ஆண்டாண்டுகளாய் பல பிறப்புக்களின் தொடர் கர்ம சம்பந்தமாய்த்தான் விளைந்திடக்கூடும். ஆகையால் அக்காதல் சக்தி வாய்ந்ததாய் வலுப்பட்டேயிருக்கும். எனவே அக்காதலை வெறுமனே புறத்தே கண்டறியும் அயலவரால் மட்டுமல்ல, சம்பந்தப்பட்ட இரு உள்ளங்கள் துணிந்தால் கூட விலகிச்செல்ல இயலாது.

சாத்திரக் காரரிடம் கேட்டு வந்திட்டேன் - அவர்
சாத்திரம் சொல்லியதை நினைக்குரைப்பேன்
நேற்று முன்னாளில் வந்த உறவன்றடி மிக
நெடும்பண்டைக் காலமுதல் நேர்ந்து வந்ததாம்.

கண்ணம்மாவின் சம்பந்தம் பல பிறப்புக்களின் தொடர் பந்தம் என்ற அவளிடம் எடுத்தரைக்கிறார். அவள் நம்பவதற்காக சாத்திரர் சொன்னார் எனவும் உரைக்கிறார். வருடங்கள் மட்டுமல்ல யுகம் யுகமாய் தொடர்ந்த உறவிது என்ற பல கதை பேசுகிறார்.

"போற்றும் ராமனென முன்பு உதித்தனை அங்கு
பொன் மிதிலைக்கரசன் பூமடந்தை நான்"

இற்றைக்கு பல்லாயிரம் வருடங்களுக்கு முன்புதான த்ரேதாயுகத்தில் பொற்றதற்குரிய ராமனாக நீ பிறந்திருக்கும் வேளை, மிதிலைக்கு அரசனான ஜனகனின் மகளாய் பூமாதேவியின் மகளென பொறுமையின் முகவரியாய் சீதாவாய் நான் பிறந்தேன்.
கன்னி மாடத்தில் உனைக் கண்டதுமே பார்வைகள் ஒன்றிட உயிர் கவ்விட இதயம் கலந்த ஈருடல் ஓரயிரானோம். அங்கு நாம் முறைப்படி மணந்து காதல் பந்தத்தில் இணைந்து நின்றோம்.

"ஊற்றமுதென்ன ஒரு வெய்ங்கழல் கொண்டோன் - கண்ணன்
உருவம் நினைக்கமையப் பாரத்தன் அங்க நான்"

அடுத்த யுகமான துலாபார யுகத்தில் அமுதூற்றுப் போல் பாய்ந்திடும் செவிக்கினிய இசை கொண்டு கவர்ந்திழுக்கும் கண்ணனாய் நீ பிறந்தாய். உன் உருவத்தை நினைத்துக் கொண்டேயிருக்கும் வகையில் அர்ச்சுனனாய் நான் பிறந்தேன். அங்கு நாம் நட்பின் பந்தத்தல் இணைந்திருந்தோம்.

முன்னை மிகப் பழமை இரணயனாம் - எந்தை
மூர்க்கம் தவிர்க்க வந்த நரசிங்கன் நீ

மேற்குறிப்பிட்ட யுகங்களுக்கு முன்னயதாய்யான க்ருத யுகத்தின் நரசிங்கனாய் நீ அவதரிக்கும் வேளை, பிரகலாதனாய் நான் பிறந்தேன். இரண்யனெனும் என் தந்தையின் மூர்க்கம் அடக்கி என்னை ஆண்டு கொண்டாய். அங்கு பக்தி பந்தத்தில் காதல் கொண்டோம்.

"பின்னை ஓர் புத்தனென நான் வளர்ந்திட்டேன் - ஒளிப்
பெண்மை அசோதரை என்றுன்னை எய்தினேன்"

யாவற்றிற்கும் பிற்பட்ட யுகமானகலியுகத்தில் புத்தனாய் ஆன்ம ஈடேற்றத்திற்கு வளர்ந்திட்ட வேளை, மெய்ஞ்ஞானத்தின் ஒளி நிறைந்த பெண்ணாய் அசோதரையாய் நீ இருக்க உன்னை ஞான பந்தத்தில் இணைந்து கொண்டேன்.இவ்வாறாக நான்கு யுகங்களை காதலோடு பற்றியிருந்த அன்போடும் இறைவனினன் அவதாரங்களொடும் அற்புதமாய் இணைந்துச் சுட்டிக் காட்டுகிறார். தூய காதல், பந்தத்திற்கான காரண காரியம் ஏதென அறியாது எவ்வகையானது என்று இனம் புரியாது. புறத்தாக்கமா? அகத் தாக்கமா? என்று கூட வகையிட்டு எண்ணாது காதலில் மட்டுமே வீழ்தலைச் சிறப்பித்துக் கருதப்படும். காதலில் வீழ்ந்தேன்! என்று சொல்வது தான் பிற மொழிகளிலும் வழக்கம். அவ்வண்ணம் அடிமை புகுவதே, அன்பின் சிறகுகளுக்கு அத்திவாரம் என்பதை நன்கறிந்தவர் பாரதி.

"சொன்னவர் சாத்திரத்தில் மிக வல்வர்காண் - அவர்
சொல்லில் பழுதிருக்கக் காரணமில்லை
இன்னும் கடைசிவரை ஒட்டியிருக்குமாம் - இதில்
எதுக்கு நாணமுற்றுக் கண் புதைப்பதோ"

இந்த யுகங்களின் தொடர் சாட்சியாய் மட்டமல்ல இன்னும் இறதிவரை நாம் இணைந்தே ஒட்டிருப்போம் என்று சாத்திரர் சொல்கிறார். அவர் சாத்திரங்களைக் கணிப்பதில் மிக்க வல்வர்.

தொடர்ச்சி 20 ம் பக்கம்

S.J. ASIAN - AFRO STORE



**Mannheim**
S1 – 11
68161 Mannheim
Tel.: 0621/86243212
Indo-Afro Ravels
info@asian-afro.de

**Ludwigshafen**
Schulstr. 7-9
67059 Ludwigshafen
Tel.: 0621/54544276
info@asian-afro.de

Indo-Afro
Indo Afro Travels
68161 Mannheim



# யேர்மனியில் அகதிகளின் தாக்கம் தேர்தலில் பிரதிபலித்தது!

ஜெர்மனியின் வட கிழக்கு பிராந்திய தேர்தல் ஒன்றில் ஏன்ஜலா மேர்கலின் ஆளும் C.D.U கட்சி குடியேற்ற எதிர்ப்பு மற்றும் இஸ்லாமிய எதிர்ப்பு கட்சியிடம் தோற்று மூன்றாவது இடத்திற்கு பின்னடைவை சந்தித்துள்ளது.



யோ்மனியில் அகதியும் நாட்டின் அதிபரும் செல்பி எடுக்கும் அளவு சுதந்திரம்

Germany to spend €20 billion on refugees in 2016: report



கடந்தமாதம் ஞாயிறன்று (04.09.2016) நடந்த தேர்தலில் மைய வலதுசாரி S.P.D கட்சி 30 வீத வாக்குகளை பெற்று முதலிடத்தை பிடிக்கும்போது குடியேற்ற எதிர்ப்பு A.F.D கட்சி 21 வீத வாக்குகளை வென்றுள்ளது. ஜெர்மனி அதிபரின் சி.டி.யு C.D.U கட்சிக்கு 19 வீத ஆதரவே கிடைத்துள்ளது.

2017ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜெர்மனி பாராளுமன்ற தேர்தலுக்கு இந்த வாக்கெடுப்பு ஒரு சோதனைக் களமாக பார்க்கப்படுகிறது.

முன்னாள் கிழக்கு ஜெர்மனியின் மெக்லென்பேர் பிராந்தியத்திலேயே தேர்தல் இடம்பெற்றது. எனினும் ஏ.எப்.டி A.F.D கட்சியுடன் கூட்டணி சேர்வதை ஏனைய கட்சிகள் நிராகரித்துள்ளன.
எனினும் இந்த கட்சி மீதான வலுவான மக்கள் ஆதரவு அடுத்த ஆண்டு தேசிய தேர்தலில் மேர்கலுக்கு பலவீனத்தை ஏற்படுத்தும் என்று கணிக்கப்பட்டுள்ளது. மேர்கல் அரசு கடந்த ஆண்டில் 1.1 மில்லியன் அகதிகள் மற்றும் குடியேறிகளுக்கு நாட்டில் அடைக்கலம் வழங்கியது உள்நாட்டில் குடியேற்ற மற்றும் இஸ்லாமிய எதிர்ப்பை அதிகரித்துள்ளது.


மங்கல இசைக் குழு
நாதஸ்வர இன்னிசைச் செல்வன் N.K.ரகுராமன்



உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட தவில் மேதை
அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
N.K.Raguraman



Dresdener Str.6
50126 Bergheim
Germany
0049 2271 670236
Mob: 0049 157 89 15 95 71


19ம் பக்க தொடர்ச்சி....

## நின்னைச் சரணடைந்தேன்

ஆதலால் அது பிழையாதற் வாய்ப்பேயில்லை. அவ்வாறிருக்க ஏன் நீ நாணமுற்று கண் புதைக்கிறாய், என்று ஆயுள் முழுவதும் சொந்தம் தாமென்று உறுதி சொல்கிறார் வல்ல வீரக் காதலன் பாரதி.



அன்பினால் ஆட்கொண்ட இதயச் சரங்கத்தின் பொத்தி வைத்த ஆசைகளின் வெளிப்பாட்டு மொழி நயன பரிபாஷையாய் மட்டுமே அமைந்தால் அந்த உணர்வு நிலை சுகானுபவம். சுரதியின்றி பாடல் இல்லை என்பது வெளிப்படை. பாட்டோடு சுருதி இணையும் போது முகமன் கதை பேசி வீண்நேரம் கழிக்காது. ஒளிக்கதிர்களை நீட்டிக் கொண்டு விண்ணை ஆரத்தழுவ நிலவுவந்ததும், எட்ட நின்று வானத்தைப் புகழ்ந்துபல மொழி பேசவிட்டு உத்தரவு கேட்டா உள்ளே வரும். விறகினை மூட்டும் வேளை தீயும். விறகும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து உபச்சார வகை செய்து பின்பு தான் பற்றிக் கொள்ளுமா?
இல்லை இவை இயற்கை அற்புத அழகென்று யாவர்க்கும் தெரியும்.
உன்னைக் கவர்ந்த உன் சம்மதம் பெறப் பழங்கதைகளைக் நாட்டின் பல நாயகர்கள் போல் நானும் சொல்ல வேண்டுமோ?

"நாட்டின் பெண்களுக்கு நாயகர் சொல்லும் - சுவை
நைந்த பழங்கதைகள் நான் உரைப்பதோ?

பாட்டும் சுதியும் ஒன்று கலந்திடுங்கால் - தம்முள்
பண்ணி உபசரணை பேசுவதுண்டொ?

நீட்டும் கதிர்களோடு நிலவு வந்தே விண்ணை
நின்று புகழ்ந்து விட்டுப் பின் மருவுமோ?
மூட்டும் விறகினை அச்சோதி கவ்வுங்கால் - அவை
முன் உபசார வகை மொழிந்திடுமோ?

கன்னி வயதிலிந்து நாம் ஒருவரை ஒருவர் கண்டு கன்னம் சிவக்க முத்தமிட்டுள்ளோமல்லவா?
இன்னமும் காதலுறவாடும் வயது வரவில்லை என்று எண்ணுகிறாயா? இல்லை ஈதென்ன செய்யத்தகாதது?
சத்திரிய வம்சத்தில் உதித்தவளே இப் பிராமணனோடு கூடலாமோ! என்பது தானோ உன் தயக்கத்தின் நோக்கம்? கண்கள் இரண்டும் ஒன்றையொன்று கண்டு நாணம் கொள்ளுமா? உன்துகில்களைவது எனக்கோர் அஞ்சத்தகு பெரும் கடின காரியமல்ல. எனினும் ஊன்மத்தம் காண உன் சம்மதம் தாராய் என மீண்டும் பெண்மைக்கு உச்ச மரியாதை செய்து கண்ணம்மாவிடம் கெஞ்சி நிற்கிறார் காதலன் பாரதி.

**என்னைப் புறமெனக் கருதுவதோ? கண்கள்**
**இரண்டில் ஒன்றையொன்று கண்டு வெள்குமோ?**







Ram Mohan

16 வருட அனுபவம் மிக்க சேவையாளர்

உங்கள் ஆசையை
நிறைவு செய்ய
இதுவே தருணம்
விரையுங்கள்

Telefon: +49 2151 3259152-Fax: +49 2151 3259153- Mobil: +49 1726835790

Büro für Deutsche Vermögensberatung
Ram Mohan
Westwall 117
47798 Krefeld

Ram.Mohan@dvag.de
www.dvag.de/Ram.Mohan




# கிரகப் போர்

காசியரின் பேரன்

மாங்கதிர் கிரகத்தின் ஏதோ ஒரு இடத்தில் உள்ள விமான நிலையத்தில் பரமசாமியும் சுந்தரியும் வந்திறங்கியதை உணர்ந்து கொண்டார்கள். பூமியைவிட்டு பல்லாயிரம் கோடி மைலகளுக்கப்பால் உள்ள ஒரு கிரகத்தில் தாம் இருக்கிறோம் என்ற உண்மையை அவர்களின் மூளை ஒப்புக் கொண்டாலும் அதை அவர்களால் நம்ப முடியாமலும் இருந்தது.

அவர்களிருவரும் மாங்கதிர் கிராமத்துக்கு வரவழைக்கப்பட்ட மிகவும் முக்கியமான விருந்தினர்களாக அங்குள்ளவர்களால் உபசரிக்கப்பட்டார்கள். எல்லாவற்றையும் விட ஆச்சரியம் அவர்கள் பூமியில் உள்ள மனிதர்கள் போல் இருப்பதும்,தமிழில் பேசுவதும் அவர்களுக்கு ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. உடைகளும் தமிழர்கள் உடுக்கும் உடைகளாகவே இருந்தன.விமான நிலையத்தை விட்டு வெளியே வந்தவர்களை இராஜ மரியாதையுடன் அங்குள்ள சிலர் அழைத்துச் சென்றனர்.பூமியை விட்டு வந்திருக்கிறோம் என்பதை அவர்களிருவரும் உணர்ந்த போதும் எதோ ஒரு மந்திரசக்திக்கு கட்டுப்பட்டவர்கள் போல அவர்களிருவரும் நடந்து கொண்டார்கள். பயமென்ற என்ற உணர்ச்சி கொஞ்சமும் அவர்களிடத்தில் இல்லமலிருந்தது.விமான நிலையத்திற்கு வெளியே அவர்கள் கண்ட காட்சி அவர்களை மேலும் மேலும் ஆச்சரியப்படுத்தியது.

விமான நிலையத்திற்கு வெளியே பனைகளும் தென்னைகளும் வாழை மரங்களும் பூச்செடிகளும் வரிசையாக இருப்பதைப் பார்த்தும் தாங்கள் இருப்பது வேற்றுக்கிரகந்தானா என நம்ப முடியாமல் தவித்தார்கள். விமான நிலையத்தில் காத்திருந்த வாகனமொன்றில் ஏற்றினார்கள். அந்த வாகனம் பூமியில் உள்ள வாகனம் போலல்லாது வேறு ஒரு வடிவத்தில் இருந்தது.அந்த வாகனம் போகும் வேகத்தை அவர்களால் கணக்கெடுக்க முடியவில்லை. பூமியில் வாகனமொன்றில் போகும் போது அதன் வேகத்தை உணர முடியும். ஆனால் அவர்களிருவரும் உட்கார்ந்திருந்த வாகனத்தின் வேகம் மெதுவாகப் போகின்றதா வேகமாகப் போகின்றதா என்பதை அவர்களால் கண்டறிய முடியவில்லை. வாகனம் ஒரு பெரிய கட்டிடத்தின் உள்ளே போய் நின்றது.அங்கே நின்ற ஆண்களும் பெண்களும் அவர்களை புன்னகையுடன் வரவேற்றார்கள். அவர்களின் உடலில் இருந்து ஒருவித நறுமணம் வீசிக் கொண்டே இருந்தது. இரு பெண்கள் அவர்களை ஒரு அறைக்குள் அழைத்துச் சென்றார்கள். அஙிகு அவர்களுக்கு உணவு வைக்கப்பட்டிருந்தது. என்ன வகை உணவு என்பதை அவர்களால் உணர முடியவில்லை.ஆனால் சுவையாக இருந்தது.
சில நிமிடங்கள் இன்னொரு பெரிய மண்டபத்திற்கு அவர்களிருவரையும் அழைத்து வந்து உட்காரச் சொன்னார்கள். அது விஞ்ஞானகூடம் போன்றிருந்தது. பலர் அங்கு வேலை செய்து கொண்டிருந்தார்கள்.பெரிய திரை ஒன்றிருந்தது. அங்கு வந்த ஒருவர் பரமசாமியையும் சுந்தரியையும் வரவேற்று பேசிவிட்டு ஒரு தூரநோக்கு கண்ணாடிக்கூடாகப் பார்க்கச் சொன்னார்கள். பார்த்தவர்கள் அதிர்ந்து போனார்கள். பூமியில் உள்ள தமது வீட்டைப் பார்த்தார்கள். இப்பொழுது அங்கே விடியற்பொழுது.அவர்களின் வீடு பூட்டப்பட்டிருந்தது. வீதியில் போவோரில் சிலர் இவர்களின் வீட்டுக்கருகாமை சென்று " சுந்தரி சுந்தரி அழைப்பதும், "இவள் எங்கை போய்விட்டாள் என்று சொல்வதும் இவர்களின் காதுகளில் பொருத்தப்பட்டிருந்த கருவிக்கூடாகக் கேட்டது.தங்களுக்கு மிக அருகில் அந்தக் காட்சிகள் தெரிந்ததை நம்ப முடியாமல் தவித்தார்கள்.

தூரநோக்குக் கருவியிலிருந்து கண்களை எடுத்ததும். பெரிய திரையில் காட்சிகள் தெரியத் தொடங்கின.பூமியில் சட்லைற் வேலை செய்யாமல் இருந்த போது நடந்த அத்தனை சம்பவங்கள் தொட்டு தங்களை மாங்கதிர் கிரகத்திற்கு கொண்டு வந்தது வரை உள்ள அத்தனை நிகழ்வுகளும் திரையில் காட்சியளிக்கத் தொடங்கின.இவர்கள் மந்திரசக்தி உள்ளவர்களா அல்லது அதீதமான விஞ்ஞான சக்தி உள்ளவர்களா தான் படித்த செய்தி போல தமிழர்கள் மந்திர சக்தி உள்ளவர்கள் அந்தச் சக்தியைத்தான் விஞ்ஞான சக்தியாக மாற்றினார்கள் என்பது உண்மைதானோ என பரமசாமி நினைத்தார்.

"பரமசாமி நீங்கள் நினைப்பது சரியே தமிழர்கள் மந்திரசக்தி உள்ளவர்கள். அவர்கள் இங்கிருந்துதான் பூமிக்கு அனுப்பப்பட்டவர்கள். பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன் அனுப்பப்பட்ட முன் பூமிக்கு அனுப்பபட்ட மனிதர்களின் வாரிசுகளே இப்பொழுதிருக்கும் மனிதர்கள். தமிழ் மொழியிலிருந்து அங்கு பேசும் அனைத்து மொழிகளும் உருவாகின. நாங்கள் இங்கிருந்தபடியே ஒவ்வொரு விநாடியம் பூமியில் நடப்பதை கண்காணித்துக் கொண்டே வருகின்றோம்.இனிப் பூமியை அழிக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. பூமியில் உள்ள அமெரிக்கா சொல்வது போல ஏலியன்ஸ் உருவத்தில் எந்த உயிரினமும் இல்லை. மாங்கதிர் என்ற எங்கள் கிரகம் 15,000 கிரகங்களை கண்காணித்து வருகின்றது.

செவ்வாய் கிரகம் என்று பூமியில் உள்ளவர்களாலஇ அழைக்கப்படும் கிரகமும் மனிதர்கள் வாழ்ந்து அழிக்கப்பட்ட கிரகமே. அவர்கள் தமக்குத் தாமே அழிவைத் தேடிக் கொண்டவர்கள். நீங்கள் இங்கேயே தங்கப் போகிறீர்களா அல்லது பூமிக்கே திரும்பப் போகிறீர்களா என இதுவரை பேசிக் கொண்டிருந்த மனிதர் கேட்டதும், பரமசாமியும் சுந்தரியும் "நாங்களிரவரும் இங்கேயே இருக்க விரும்புகிறோம்" என்றனனர்."நீங்கள் கொடுத்து வைத்தவர்கள் பூமியில் பலகோடி மனிதர்கள் இருந்தும் உங்களிருவருக்குமே அந்த அதிர்ஸ்டம் கிட்டியுள்ளது.இன்னும் சில நிமிடங்களில் இன்னொரு கிரகத்திற்கு அழைத்துக் கொண்டு போகப் போகிறோம் சில நிமிடங்கள் ஓய்வெடுங்கள் என அவர் போக ஒரு ஆண் இருவரையும் அழைத்துக் கொண்டு போய் ஒரு வாகனத்தில் உட்கார வைக்கிறான். அது படுக்கை அறை கொண்ட வாகனம். அவர்கள் படுக்கையில் படுத்ததும் நித்திரையாகிவிடுகிறார்கள்.வாகனம் போய்க் கொண்டிருப்பது போல உணர்கிறார்கள். கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தவர்கள் மலைத்துப் போய் நிற்கிறார்கள்.
பூமியில் கோவிலகளில்களில் சிலைகளாக வைத்துக் கும்பிடப்படும் விநாயகர் உருவகங்கள் உயிருள்ளவையாக அங்குமிங்குமாக நடமாடிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறார்கள்

(இப்பகுதி நிறைவு பெறுகிறது. பரமசாமியும் சுந்தரியும் மாங்கதிர் கிரகத்தில் வாழ ஒப்புக் கொண்டதால்,அவர்களின் வாழ்க்கை இனி அங்குதான். ஆனால் அவர்களுக்கு பல கிரகங்களுக்கு போய் வரும் வாய்ப்பு கிடைக்கப் போகின்றது. பூமியிலிருந்து பலர் அடிக்கடி மாயமாக மறைகிறார்கள். அவர்களுக்கு என்னவாயிற்று என்பதை எவராலும் அறிய முடியவில்லை. அப்படி யாருக்கும் தெரியாமல் மாயமாக மறைந்தவர்கள்தான் பரமசாமியும் சுந்தரியும். இனி................)

கிரகப்போர் கட்டுரையின்
இறுதிப் பாகம் இது.
வித்தியாசமான ஒரு தளத்தில் இருந்து
இக்கட்டுரையை எழுதியவர்
ஏலையா முருகதாசன் அவர்கள்.
அவர் சிந்தனைகள்
எப்பவும் வித்தியாசமானவை
ஆரோக்கியமானவை
அவருக்கு வெற்றிமணியின் வாழ்த்துக்கள்.


ஏலையா முருகதாசன் அவர்கள்.





லண்டனில் தங்க இடமும், இலங்கை உணவும், கொண்ட இனிய நம்மவர் விடுதி!

**Rising Sun Hotel & Restaurant**

அறைகள் யாவும் நவீன வசதிகளுடன் அமைந்துள்ளது.
இவற்றுடன் காலை ,மதிய, இரவு உணவு வசதிகளும் சிறப்பாக உண்டு

En-Suite Rooms ,Restaurant & Bar facilities available
to make your stay comfortable.

Free Wi-Fi & Car Park

admin@risingsunhotels.com

138, Greenford Road
Sudbury Hill
Harrow
Middlesex HA1 3QL
U.K

Tel: +44 208 4222 575

Sudbury Hill Station இல் இருந்து இரு நிமிட நடைத்தூரத்தில் !
Heathrow Airport இல் இருந்து 30 நிடங்களில் எம்மை வந்தடைய நேரடி Train வசதி உண்டு

# புர்கினி நீச்சல் உடைத் தடை! இடைநிறுத்தம்!!

புர்கினி என்று அறியப்படும் முஸ்லிம் பெண்கள் அணியும் முழு நீள நீச்சல் உடையை, ∴பிரான்ஸில் சில கடற்கரைகளில் அணிய இருந்த தடையை, அந் நாட்டு உயரிய நீதிமன்றங்களில் ஒன்று இடைநிறுத்தியிருக்கும் உத்தரவை ஐ.நா. மனித உரிமை ஆணையம் வரவேற்றிருக்கிறது.

∴பிரான்சின் உள்ளூர் அதிகாரிகள் பலரால், மத்தியதரைக்கடல் கடற்கரைகளில் நிறைவேற்றப்பட்டிருந்த இது தொடர்பான தடைகள், முஸ்லீம்களை களங்கப்படுத்துவதால் உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்று இந்த ஆணையம் தெரிவித்திருக்கிறது.

∴பிரான்ஸின் சில மேயர்கள் இந்த தடையை தொடர்ந்து செயல்படுத்தப் போவதாக வலியுறுத்தியுள்ளனர்.







கடந்த வாரம் நீஸ் நகரக் கடற்கரையில் உடல் முழுவதையும் மூடிக்கொள்ளும் நீச்சல் உடையை அகற்றுவதற்கு ஒரு முஸ்லீம் பெண்ணை நான்கு காவல் துறையினர் கட்டாயப்படுத்துகின்ற புகைப்படங்கள் வெளியாகி, முஸ்லீம் சமூகத்தினர் மற்றும் மனித உரிமை பரப்புரையாளர்களின் மத்தியில் கோபத்தை தூண்டியது குறிப்பிடத்தக்கது.




## பொய் அன்பு போகும்

தயாளினியும் பத்மாவும் பூங்காவில் பிள்ளைகள் விளையாடுவதை இரசித்துக் கொண்டிருந்தார்கள்.

"பிள்ளை! பிரபு உச்சிக்குப் போகாதை. கவனம் " பத்மா சொல்வதற்குள் தீபன் அவனைத் தள்ளி விட்டான்.

தீபனின் தாயார் தயாளினியும் அதைப் பார்த்திருந்தார்.

பிரபு மறுபுறமுள்ள பற்றைக்குள் விழுந்தான். கால் முறிந்து வைத்தியசாலையில் படுத்திருந்தான்.

தள்ளியதைப் பிள்ளையும், பார்த்ததைத் தாயாரும் ஒருவருக்கும் சொல்லவில்லை.

"முற்பிறப்பிலை செய்த பாவத்திற்கு தண்டனை" வைத்தியசாலைக்கு வெளியே நின்ற தயாளினி யாருக்கோ சொல்வது பத்மாவிற்குக் கேட்டது.


**Ayurveda praxis**

**ஆயுள்வேத வைத்திய நிலையம்**

டாக்டர்.ஆனந்தி B.S.M.S, A.M.P, S.M.P., R.M.P (Ind) Dipl.Ayurveda(Germany)


**கடந்த 18 வருட காலமாக ஆயுள்வேத / சித்தவைத்தியத்தில் அனுபவமும் நிபுணத்துவமும் பெற்றவைத்தியக்கலாநிதி Dr.ஆனந்தி அவர்கள் தமது குழுமத்துடன் நடத்திவரும் அரச அங்கிகாரம் பெற்ற வைத்திய நிலையம்.**

- நீரிழிவு நோய் (Diabetes)
- இரத்த அழுத்தம் (Blood pressure)
- அஸ்மா சளித்தொல்லை,இருமல்
- மூட்டுவலி, கை, கால், உழைவு, செமிபாட்டுப்பிரச்சினை,
- தோல்வியாதி, சிறுநீரகக்கோளாறு. உடற்பருமன் பிரச்சினை
- மற்றும் சலரோகத்தால் ஏற்படும் ஆண்மைக்குறைபாடுகள்
- அனைத்தும் பக்கவிளைவுகள் அற்றமுறையில் குணப்படுத்தப்படும்.

**சுகம்! அது நிரந்தரம்!!**

**எமது வைத்தியத்தில் சிறப்பு பக்கவிளைவுகள் ஏதும் கிடையாது.**












ஆண்மைக்குறைபாடுகள்



**அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்**





Ayurveda Praxis-Am Baumrain 06 / 57319 Bad Berleburg

Tel:02751 427 9575
Möbile: 0175 75 85 952

# யேர்மனி சோஸ்ற் தமிழ்க்கல்வி கலாசார அமைப்பு பத்தாவது வருட விளையாட்டுப் போட்டி!


















சோஸ்ற் தமிழ்க்கல்வி கலாசார அமைப்பு 18.09.2016 அன்று தனது வருடாந்த இல்லங்களுக்கான 10 வது விளையாட்டு விழாவை திரு திருமதி தெய்வேந்திரன் இந்து தலைமையில் சிறப்பாக கொண்டாடியது. பிரதம விருந்தினராக வெற்றிமணி பத்திரிகை சிவத்தமிழ் பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு சிவகுமாரன் அவர்கள் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக எழுத்தாளர் திரு. சபேசன் அகரம் சஞ்சிகை ஐரோப்பிய தமிழ் வானொலி அதிபர் த.ரவீந்திரன் நுன்கலைக்கல்லூரி எசன் பொறுப்பாளர்கள் திரு.திருமதி நயினை விஜயன் சசிகலாவும் சோஸ்ற் நகர மக்களும் பிற நகர மக்களும் கலந்து சிறப்பித்தனர்.

தாயகத்தினைப் போன்று இங்கும் இல்லங்களுக்கு பந்தல் கட்டப்பட்டு அந்த அலங்காரப்பந்தலுக்கு ஒழுக்கம் வரவேற்பு அலங்காரம் என என்று சிறப்புப் புள்ளிகளிட்டு சிறந்த ஆலங்காரப்பந்தல் எது என்பது தெரிவாகப்பட்டது. ஆங்கு பச்சை அணி இல்லம் 275 புள்ளிகள் பெற்று முதலிடத்தை பெற்றது.

விளைாட்டுப் போட்டிகளில் சிறுவர் சிறுமிகள் மிக ஆர்வத்துடன் கலந்து சிறப்பித்தனர்.திருமதி இந்து தெந்தேந்திரன், மற்றும் தெய்வேந்திரன், பெற்றோர் சோஸ்ற் தமிழ்க்கல்வி கலாசார அமைப்பு உறுப்பிர்கள் நண்பர்கள் என பலர் அங்கு கூடியிருந்தனர்.

## தெய்வேந்திரம் இந்து தம்பதிகளின் 30 வது திருமணநாள் வாழ்த்து 29.08 2016



ஜேர்மனி சோஸ்ற் நகரில் வாழ்ந்து வரும்
தெய்வேந்திரம் இந்து தம்பதிகள்
29.08.2016 தமது 30 வது
திருமணநாளைக் கொண்டாடினார்கள்.
(சோஸ்ற் தமழ்க்கல்வி-கலாசார அமைப்பு
பொறுப்பாளரும் ஆசிரியரும் ஆவர்.)
இவர்களை பிள்ளைகள், சகோதரர்கள்
உறவினர்கள் நண்பர்கள்
பல்லாண்டு சிறப்புற வாழ வாழ்த்தினார்கள்.







திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிராரர்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்



# மன அழுத்தம் மனச் சோர்வு இதற்கு மருந்து நல்ல தூக்கம்.



முனைவர் வ.வே.சு.



தூக்கம் என்பது உணவைப் போல உடல் நலத்திற்கு மிகவும் இன்றியமையாதது. தூக்கம் தருவதைப் போல, உடலுக்கு ஓய்வையும் சக்தியையும் ஒரே நேரத்தில் அளிப்பது வேறெதுவும் கிடையாது. தூக்கம் உயிரின் தேவை. மூளைக்கு உணவு. இடையூறின்றி உடல் இயங்க வேண்டுமென்றால், இடையூறின்றித் தேவையான அளவு தூக்கம் நிச்சயம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டாத எவரும் வாழ்க்கையில் முன்னேறுவது கடினம். எனவே முன்னேற வேண்டும் என்ற துடிப்புள்ள இளைஞர்கள் தூக்கத்தைப் புறக்கணிக்கக் கூடாது. உறக்கம் உயிர்களின் பிறப்புரிமை

தூக்கமின்மையால் ஏற்படும் நோய்களின் காரணமாகத் தூக்கத்தைப் பற்றிய விரிவான ஆய்வுகளை மருத்துவ உலகம் மிக முன்னதாகவே மேற்கொண்டது. பிறந்த குழந்தைக்குப் பதினான்கிலிருந்து பத்தொன்பது மணி நேரம் வரை உறக்கம் தேவைப்படுகின்றது. வளர வளர இது குறைந்தாலும், பள்ளிச் சிறார்களுக்கு ஒன்பதிலிருந்து பதினோரு மணி நேரங்களும், பருவ வயது இளைஞர்களுக்கு எட்டிலிருந்து பத்து மணி நேரங்களும் தூக்கம் தேவைப்படுகின்றது. இந்தத் தூக்க நேர அளவு குறையும் போது, அது பல உடல் நலக் கேடுகளுக்கும், நோய்களுக்கும் காரணமாக அமைந்து விடுகின்றது.

தூங்கும்போது பல நன்மைகளை உடல் பெறுகின்றது என ஆய்வாளர்கள் கண்டுள்ளனர்.1) நல்ல அளவான தூக்கம் பெறும் இளைஞர்களுக்கு நினைவாற்றல் (Memory power) அதிகரிக்கின்றது

2) தொண்ணூறு வயதுக்கு மேற்பட்ட உடல்நலமுள்ள முதியோர்களைப் பேட்டி கண்டபோது, அனைவரும் தமது உடல்நலத்துக்கு முதன்மையான காரணம், தொடர்ந்து கடைப்பிடித்துவரும் உறக்கப் பழக்கம்தான் (Sleeping Habit) என்று உறுதி செய்ததை ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

3) ஹார்வர்ட் பல்கலைக்கழக ஆய்வு, சரியான தூக்க அளவு, ஒருவரது படைப்பாற்றலை(Creativity) அதிகமாக்குகின்றது என்று பதிவு செய்துள்ளது.

4) மன அழுத்தம் (Mental Stress) மனச் சோர்வு (depression) ஆகியவை மறைவதற்கான மாற்று மருந்து நல்ல தூக்கம்.

5) உடல் இயக்கங்கள் (Metabolic activity) சரிவர இயங்க, தூக்கமும் ஒரு கிரியாஊக்கி போலச் செயல்படுகின்றது.

6) எந்த மருந்தாலும் கொடுக்க இயலாத ஓய்வையும் ஒரு புத்துணர்ச்சியையும் (Rejuvenation) தூக்கம் ஒன்றால்தான் கொடுக்க இயலும்

7) விரைவு விழி இயக்கம் (REM-Rapid Eye Movement) என்ற தூக்க நிலையில்தான், மனிதர்களுக்குக் கனவுகள் தோன்றுகின்றன. சில தீவிர மன உளைச்சல்களுக்கும் வன்முறை எண்ணங்களுக்கும் இத்தகைய கனவுகளே வடிகால்களாக அமைகின்றன என்று மருத்துவ ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

8) உடலில் ஏற்படும் வெட்டுக் காயங்கள் போன்றவை சீரடையும் தன்மை (Wound healing process) நல்ல தூக்கத்தால் விரைவு பெறுகிறது.

எனவேதான் உறக்கம் என்பது எல்லா உயிரினங்களுக்கும் தேவைப்படுகின்றது. விலங்குகளுக்கும் இதிலிருந்து விலக்கு கிடையாது. நீண்ட நேரம் பறக்கும் அல்பட்ராஸ் (Albatross) போன்ற நீர்ப்பறவைகள், பறந்துகொண்டே உறங்கும் திறமை கொண்டவை எனச் சில ஆய்வுகள் சொல்கின்றன. குதிரைகள் நின்று கொண்டே உறங்கும் தன்மை கொண்டவை. டால்பின் (Dolphin) எனும் விலங்கு ஒரு கண்ணையும் ஒருபக்க மூளையையும் மாற்றி மாற்றிப் பயன்படுத்தி அரைத் தூக்கமே தூங்குகின்றனவாம். எதிரிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளப் பல விலங்குகள் மிகக் குறைந்த கால அளவே உறங்குகின்றன. எனினும் பழுப்பு நிற வெளவால்கள் (Brown Bats) ஒரு நாளைக்குப் பத்தொன்பது மணிநேரம் உறங்குகின்றனவாம். பாதுகாப்பின்றி இயற்கைச் சூழலில் கிடைக்கும் நேரத்தில் உறக்கம் கொள்ள வேண்டிய நிலையிலிருக்கும் பல உயிரினங்களை ஒப்பிடும் போது, மனிதன் பரிணாம வளர்ச்சியில் நிறைவாக உறக்கம் கொள்ளும் அரிய வாய்ப்பைப் பெற்றுள்ளான். உடல், உள்ளம் இரண்டுக்கும் தேவையான உறக்கத்தை உதாசீனம் செய்தல் தவறு.

**தூக்கத்தை இழக்காதீர்கள்**

இன்றைய இளைய தலைமுறை தூக்கத்திற்குச் சரியான மதிப்பு அளிக்கவில்லையோ என்று தோன்றுகின்றது. ஏதோ ஒருநாள் அவசரத்திற்குத் தூக்கம் இழப்பது நிகழ்ந்தாலும், அது மறுநாள் உடலைப் பாதிக்கிறது என்று தெரிந்தபின்னும், தூக்கத்தை அசட்டை செய்யும் வாழ்க்கைமுறையைப் (Life style) பல இளைஞர்கள் தொடர்ந்து பின்பற்றுகின்றனர். உடலுக்குத் தெம்பும் பயிற்சியும் உற்சாகமும் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட பல வெளிஅரங்க விளையாட்டுகள் (Outdoor Games) இன்று இரவு நேரங்களில் விளையாடப்பட்டுப் பல இளைஞர்களைத் தங்கள்பால் ஈர்க்கின்றன. கேளிக்கைகள், இரவு நேர உணவுவிடுதி விருந்துகள், வீட்டுக்குள்ளேயே யாரையும் தூங்கவிடாமல் செய்யும் இருபத்தி நான்கு மணி நேரத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஆகியவை தூக்கமின்மையை உருவாக்கும் கேடுகளாக இன்றைய சமுதாயத்தில் காணப்படுகின்றன.

உறக்கத்தை இழப்பதற்குக் காரணமாக இன்றைய இளைஞர்களுக்குக் கணினி முதல் கைபேசி வரை பலவித அறிவியல் கருவிகள் கிடைத்துள்ளன. படுக்கையில் படுத்துக் கொண்ட பிறகும், கைபேசியில் தொடர்ந்து பேசிக் கொண்டு இருப்பதும், காணொளிப் பதிவுகளைப் பார்த்துக் கொண்டிருப்பதும், கண், காது இரண்டிற்கும் கேடு விளைவித்து, உறக்கத்தையும் அண்டவிடாமல் செய்துவிடும். உறங்குவதற்கு முப்பது நிமிடங்களுக்கு முன்னால் இவை போன்ற கருவிகளைப் பயன்படுத்தாமல் இருந்தால்தான் ஆழ்நிலை உறக்கமும் (Deep Sleep) அதனால் பெறப்படும் பயன்களும் கிடைக்கும் என மருத்துவர்கள் அறிவுறுத்துகிறார்கள்.

பல நேரங்களில் மாணவர்கள் வகுப்பறையில் கவனத்தைச் சிதற விடுவதற்கும், பாடம் நடக்கும் போதே தூங்கிச் சாய்வதற்கும் காரணம், தேவையான உறக்கத்தையும் ஓய்வையும் அவர்கள் இழந்துள்ளனர் என்பதே ஆகும்.

நேரம் கிடைக்கும் போது தூங்கிக் கொள்ளலாம் என்றில்லாது, தூங்கும் பழக்கத்தை ஒரு நெறிக்குள் (Regulation of Sleeping habit) கொண்டு வந்தால், அதுவே உடலுக்கும் உள்ளத்திற்கும், நீண்ட கால நன்மை (Long term benefit) பயக்கும் செயலாக அமையும் என்று ஒருமித்த கருத்தாக மருத்துவம் தெரிவிக்கின்றது.

உறக்கத்தையும் இழக்காதீர்கள்... வாழ்வின் உயரங்களையும் இழக்காதீர்கள்.


உங்கள் தாய் மொழியில்....

HK Hammacher

வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம்,யேர்மன்,பிரஞ்,
துருக்கி மொழிகளில்
வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு
வரக்கூடிய
வினாக்கள், கார் மற்றும்
மோட்டோசைக்கிளிற்கும்
சிறப்பாகத்
தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
ASP

இவர்களுக்கான
சிறப்பு
வகுப்புக்களும்
உண்டு!



A.tu.Z Dolmetscher -
und Übersetzungsdienst
Für alle weltsprachen

மொழிபெயர்ப்புச் சேவை!

V.Ramakrishnan



Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888

உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்பதற்கும் நாடவேண்டிய இடம். Lise-Meitner-Str.20 45144 Essen

e.mail:atuzuebersetzung@hotmail.com



# அவளும் நானும் 44

**மாதவி**

இணையத்தில் உதித்த இணையில்லாத காதல். என் வாழ்வில் இப்படி ஒரு தேவதையை ஆண்டவன் இப்ப தருவான் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. இது கனவு அல்ல நிஜயம், என்பதை இறங்குவதும் ஏறுவதுமாக இருந்த விமானங்களின் சத்தம் என்னை நிஜ உலகிலேயே வைத்திருந்தது.

இரவு முழுவதும் நித்திரை இல்லை. கணனியுகத்தில் பாவிக்கக்கூடிய அத்தனை நுட்பத்திற்கூடாகவும் அவளை நான் நுகர்ந்துள்ளேன். ஆனால் முதல் முதல் நேருக்கு நேர் இன்றுதான் காணப்போகின்றோம். கறுப்பு வெள்ளைப்படம் பாரத்தவனுக்கு, திரையரங்கில் திறிடீ படம் பார்தால் எப்படி உருவங்கள் நீட்டிக்கொண்டு முன்வந்து நிற்குமோ! அதுக்கும் கொஞ்சம் மேலாக உயிரோடு உறவாட முன்னாலே அந்த வனப்பை நீட்டிக்கொண்டு வந்து நிற்கப்போகிறாள்.
இதற்கும் மேல் ஒருவன் இரவு முழுவதும் தூங்கியிருந்தால் நான் ஆம்பிளையா என்று எனக்கே சந்தேகம் வந்திருக்கும்.

இந்தனை வருடமாக விமான நிலையத்திற்கு எத்தனை தரம் செல்பவர்களை ஏற்றவும், வந்து இறங்குபவர்களை அழைக்கவும் வந்திருப்பேன். அத்தனை தடவையும் கணனியில் வரும் நேரம் போகும் நேரம் எல்லாம் சரியா என்று செக்பண்ணிவிட்டுத்தான் வருவேன்.
விமானங்கள் தாமதமானால் மகிழ்ச்சிதான். காரணம் அவசரம் இல்லாத ஓட்டமாக இருக்கும்.

இன்று விமானம் இறங்கும் நேரம் பார்க்கவே இல்லை. அதற்கு நேரமும் இல்லை. டோட்மூண்ட் விமான நிலையத்தில் வாகனத்தரிப்பிடத்தில் முதல் தடவையாக வாகனத்தை நிறுத்திவிட்டு, அவள் வரவுக்காகக் காத்து இருக்கின்றேன்.

மற்றும்படி என் வாகனம் எப்பவும்மே விமான நிலையத்திற்கு முன்னால் உள்ள மைக்டோனாவில் ஒரு சிக்கின் பேகருடன் நிற்கும். வருபவர்கள் வந்து மிஸ்கோல் தரும் வரை மில்சேக் துணை நிற்கும். இன்று எல்லாமே தலைகீழாக மாற்றிவிட்டுள்ளது இந்தக்காதல்.

காதல் இந்தக் காலத்தில் படுவேகம். நாம் வாழும்காலம் அப்படி. எத்தனை தடவை காதல் வந்தாலும், அத்தனை தடவையும் அதே உணர்வுதான். ஏதோ முதல் காதல் மனதுக்குள் ரோசாவாக மணத்தாலும், புதுக்காதல் வானத்தில் வெடித்துச்சிதறும் மத்தாப்பை அல்லவா அண்ணாந்து பார்த்து நிற்கிறது. நானும் தான் இப்ப அண்ணாந்து பார்த்தபடி விமான நிலையத்தில் நிற்கின்றேன்.

அவள் வருவதாகச் சொன்ன நேரம் நெருங்குகிறது. அவள் என்னை கட்டிப்பிடித்து நொறுக்குவதுபோல் இருந்தது.. நான் கிரேக்தேசத்தின் ஆணழகன். அவள் பல்கிரியாநாட்டின் இளவரசி.
மிக மிக ஏழ்மையில் பிறந்தவள் மட்டுமல்ல, இன்றும் அப்படியே வாழ்பவள்.
இந்தக்கணனி செய்த மாயம் ஏழைக்கு ஆடை உணவு கொடுக்காவிட்டாலும், கூப்பிட்ட குரலுக்கு பதில் கொடுக்க ஐயோ கடவுளே என்று ஒரு பழைய ஐபோனை என்றாலும் கொடுத்து வைத்துள்ளது. அத்தோடு எந்த நாட்டிலும் எதற்கும் இல்லாத பிளட்ரேட் இந்த போனுக்குத்தான் உண்டு. அதுதான் நம் காதலுக்கும் அத்திவாரமானது.

தண்ணீரும் குடிக்கவில்லை. காப்பியும் அருந்தவில்லை மொத்தத்தில் நீராகரம் ஏதும் இன்றி, நாக்கே வரண்டு போய்க்கிடக்கிறது. இனி அவள் வந்து நனைத்தால் ஒழிய இந்தப் பாலைவனம் நனையாது. ஏன் விமான நிலையத்தில் றெட்புள் இல்லையா? ஒரு கோலா இல்லையா? என்று என்மீது கோபமாகவோ பரிதாபமாகவோ நீங்கள் கேட்கலாம்.
நீங்கள் சொல்வது போல் அந்த ரெட்புல் எனக்குள்ளும் இருக்கு, வெளியேயும் இருக்கு. கோக் அது பார்த்து என்னைக் கடுப்பேத்திக்கொண்டு இருக்கு. இருந்தும் நான் கண்டுகொள்ளாமல் இருக்கிறேன் என்றால் காரணம், அதைவேண்டிக் குடித்தால் எனக்கு உடனம் போகவேண்டும்.
அப்படி போகும் போது அவள் வந்து இறங்கிவிட்டாள் என்றால். அடடா இதுதான்டா காதல். ஏன் என்றால் என்னுடைய வயது அப்படி.

பரீட்சைக்கு போகுமுன்பு முன்னர் படித்தது எல்லாம் ஒருமுறை இரை மீட்டிப்பார்ப்பது போல், மனம் அவளுடன் கதைத்ததெல்லாம் இரை மீட்டிப் பார்க்கின்றது.
நான் பேசிய முதல் வாத்தை உனக்கு என்னைப் பிடிக்காவிட்டால் நீ விலகலாம். உன்னை எனக்கு பிடிக்காவிட்டால் நான் விலகலாம். எதற்கும் ஒருவருடம் வாழ்ந்து பார்ப்போம். அதன் பின் முடிவெடுக்கலாம்.

அவள் பேசி முதல் வார்த்தை எனக்கு உங்களில் பிடித்ததே காதலில் முதுமை பெற்ற உங்கள் வெளிப்படையான பேச்சு. காதலுக்கு காமம் தேவைதான் அதனைவிடவும் கடந்து நிற்பது பரிவும் பாசமும்தான்.


தொடர்ச்சி 30 ம் பக்கம்








# மூளையை பாதிக்கும் வாகனப்புகை! புதிய ஆய்வு எச்சரிக்கை





நகரங்களின் நுண்ணிய வாகன மாசுத்துகள்கள், மூளைக்குள் செல்வதாகவும் மூளையில் ஏற்படும் அல்சைமர்ஸ் நோய்க்கான காரணிகளில் ஒன்றாக அது இருக்கலாம் என்றும் புதிய ஆய்வின் முடிவுகள் குறிப்புணர்த்துகின்றன.

ஐக்கிய ராஜ்ஜிய விஞ்ஞானிகள் மேற்கொண்ட இந்த ஆய்வின் முடிவுகள் நகரவாழ்வின் சுகாதார ஆபத்துக்கள் குறித்த புதிய கேள்விகளை எழுப்பியுள்ளன.

வாகனபுகையால் மூச்சுத்திணறல், இதயநோய், அகால மரணம் போன்றவை ஏற்படும் என்பது நன்கு தெரிந்த செய்தி.

தற்போதைய இந்த புதிய ஆய்வு, வாகனப்புகை மூளைக்குள் சென்று பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்று கவலையளிக்கும் சாத்தியத்தை கண்டுபிடித்திருக்கிறது.

சாதாரண கண்களுக்கு புலப்படாத சின்னஞ்சிறு இரும்புத்துகள்கள் மூளையில் படிந்திருப்பதை இந்த ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

ஒருகிராம் மனித மூளைத்திசுவில் மில்லியன் கணக்கில் இவை படிந்திருக்கின்றன. எனவே மூளைச்செல்களுக்கும் மூளைக்கும் சேதம் ஏற்படுவதற்கு மில்லியன் கணக்கான சாத்தியங்கள் இருக்கின்றன என்கிறார்கள் இந்த ஆய்வாளர்கள்.

இந்த துகள்கள் மேக்னடைட் என்று அறியப்படுகின்றன.

வாகனப்புகையில் இருக்கும் மாசின் பெரிய துகள்கள் மூக்குவழியாக உள்வாங்கப்படும். அவற்றில் சிறியவை நுரையீரல் மூலம் ரத்தத்துக்குள் நுழையும். அதனிலும் சிறியவை, மூக்கை மூளையுடன் இணைக்கும் நரம்புகள் மூலம் மூளைக்குள் செல்வதாக இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளன.

மூளைச்செல்களுக்கு இடையிலான தொடர்பாடலை தடுக்கும் பாசி அல்லது மாசு மூளைக்குள் வளர இந்த மேக்னடைட் துகள்கள் தூண்டுகோலாக இருக்கலாம் என்றும் மூளையை பாதிக்கும் அல்சைமர்ஸ் போன்ற நோய்கள் உருவாக இவையும் ஒரு காரணியாக அமையலாம் என்றும் கருதப்படுகிறது.

ஆனால் இது ஆரம்பகட்ட ஆய்வு மட்டுமே. இந்த மேக்னடைட் துகள்களுக்கும் அல்சைமர்ஸ் நோய்க்கும் நேரடித்தொடர்பு இருக்கிறதா என்கிற கேள்விக்கான தெளிவான பதில் இந்த ஆய்வில் கிடைக்கவில்லை. அதேசமயம், வாகன நெரிசலுக்கும் மனித மூளை மாசடைதலுக்கும் இடையிலான தொடர்பு குறித்து புத்தம்புது ஆய்வுகளத்திற்கான துவக்கமாக இந்த முடிவுகள் பார்க்கப்படுகிறது.






தாயகத்தில்...

## ஈழகேசரியில் 1955 ஆண்டு ஆரம்பித்த இலக்கியப் பயணம் இன்று வரை தொடர்ந்தது





## குறமகளுக்கு வெற்றிமணியின் அஞ்சலி

காங்கேசந்துறை, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவியும், கனடாவில் வசித்தவருமான ஈழத்து எழுத்தின் மூத்த பெண் எழுத்தாளர் திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்கள் ஈழத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியையாகக் கடமையாற்றினார்.

குறமகள் என்ற பெயரில் சிறுகதைத் துறையில் தனக்கென ஓரிடத்தைப் பெற்றிருக்கும் இவரது முதலாவது சிறுகதையான 'போலிக் கெளரவம்' 1955 ஆம் ஆண்டளவில் ஈழகேசரியில் பிரசுரமானது. சிறுகதைகள் மட்டுமன்றி கட்டுரைகள், கவிதைகள் என்பவற்றிலும் இவர் தம் ஆளுமையைக் காட்டியுள்ளார். பெண்களின் சமூக விடுதலைக்கான கருத்துக்களை மையமாகக் கொண்டு எழுதும் இவரது ஆக்கங்கள் ஈழகேசரி, சுதந்திரன், வீரகேசரி, தினகரன்,வெற்றிமணி (1965 ஆண்டு முதல் ) கலைச்செல்வி, ஆனந்த விகடன், ஆகிய இதழ்களிலும், கனடிய பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன.

வீரகேசரியில் 'மத்தாப்பு' என்ற குறுநாவலில் மஞ்சள் வர்ணத்தை வைத்து ஒரு அத்தியாயத்தை எழுதியுள்ளார். மாணிக்கம் சஞ்சிகையில் பிரபல எழுத்தாளர்கல் சிலருடன் சேர்ந்து "கடல் தாரகை" என்ற குறுநாவலை எழுதியுள்ளார். 1954 ம் ஆண்டிலிருந்து சிறுகதை, கட்டுரை, கவிதை எனத் தொடங்கிய இவர் எழுத்துலகில் 50 ஆண்டுகளைக் கடந்துள்ளார். யாழ்ப்பாணத்துப் பெண்களின் கல்விப் பரம்பரியம், குறமகள் கதைகள், உள்ளக்கமலமடி போன்ற நூல்களையும் இவர் வெளியிட்டுள்ளார். இலக்கியப் பணிக்காக தமிழர் தகவல் விருது இரண்டு முறை கிடைத்தது. சுயாதீன கலைத் திரைப்பட மையத்திடமிருந்து அ்.ேகனம் விருது கிடைத்தது. (15.09.2016) அன்னாரின் மறைவுக்கு வெற்றிமணி அஞ்சலிசெய்கிறது.



# திருமந்திரமும் வாழ்வியலும் 11

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே."

சிவ சிவ என்பவர் சிவமே ஆவர் எனக் கூறும் பாடல் எண் 2715

"சிவசிவ என்றே தெளிகிலர் ஊமர்
சிவசிவ வாயுவும் தேர்ந்து உள்ளடங்கச்
சிவசிவ ஆய தெளிவின் உள்ளார்கள்
சிவசிவ ஆகும் திருவருள் ஆமே"

இப்பாடலின் பொருள் "சிவசிவ என்று சொல்லிச் சிவப் பரம்பொருளைச் சிந்திப்பதில் உள்ள பயன்களை அறியாதவர்கள் வாயிருந்தும் பேச இயலாத ஊமைகளாவர். சிவசிவ என்று சிந்திக்க மனமும், மூச்சுக் காற்றாகிய பிராணனும் அலைபாயாது குவிந்து ஒருமுகப் பட்டு உள்ளடங்கி இருக்கும். இந்த நிலையில் சிவசிவ என்னும் சிவமந்திரத்தின் உயர்வினை உணர்ந்தறிந்தவர்கள் இறைவன் திருவருளால் சிவவடிவாவர்." என்பதாகும்.இறைவன் இருக்கிறார் என்போர்க்கு இருக்கின்றான், இல்லை என்போர்க்கு இல்லை ஆவான் எனக் கூறும் பாடல் எண் 1532

"உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் என்பவர்க்கு
உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் எம்இறை
உள்ளத்தும் இல்லை புறத்தில்லை என்பவர்க்கு
உள்ளத்தும் இல்லை புறத்தில்லை தானே"

இப்பாடலின் பொருள் "உள்ளத்துள்ளே இறைவன் இருக்கின்றான் என் பவர்களுக்கும், அப்படி இல்லை வெளியே இருக்கின்றான் என்பவர் களுக்கும் இறைவன் உள்ளத்துள்ளேயும், வெளியேயும் இருந்து அருள் புரிகின்றான். அப்படி இல்லாமல் இறைவன் உள்ளத்துள்ளேயும் இல்லை, வெளியேயும் இல்லை என்பவர்க்கு இறைவன் உள்ளேயும் தெரியமாட்டான், வெளியேயும் காணப்பட மாட்டான்" என்பதாகும்.

தானத்தின் சிறப்பைக் கூறும் பாடல் எண் 250

"ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே"

இப்பாடலின் பொருள் "எல்லோருக்கும் கொடுத்துதவுங்கள். அவர், இவர், வேண்டியவர், வேண்டாதவர் என்று வேறுபாடு பார்க்காதீர்கள். வரும் விருந்தை எதிர்பார்த்துக் காத்திருந்து பிறகு நீங்கள் உண்ணுங்கள். முன் சமைத்து மீந்து போன பழையதைப் பாதுகாத்து வைக்காதீர்கள். ஆசை அதிகம் உடையவர்களே அவசரம் அவசரமாகச் சாப்பிடாதீர்கள். ஆற அமர உண்ணுங்கள். தனியாக இருந்து சாப்பிடாதீர்கள். காகங்கள்கூடத் தம் இனத்தைக் கூவி அழைத்துக் கூட்டமாக இருந்து உண்ணுவதை உணருங்கள்" என்பதாகும். இறைவன் தமிழ்வேதம் (திருமந்திரம்) செய்யத் திருமூலநாயனாரைப் படைத்தான் என்பதைத் திருமூல நாயனார் தன்வாயால்க் கூறிய இப்பாடல் (ஆன்மாக்கள் இறைவனின் கருணையால் சில நோக்கத்திற்காகப் பிறவி எடுப்பதைக் கூறும்) பாடல் எண் 81 இல்

"பின்னை நின்றுஎன்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே."

இப்பாடலின் பொருள் "முற்பிறப்பில் முறையாகத் தவம் செய்யாதவர்கள் மீண்டும் மீண்டும் பிறந்து பிறவி என்னும் துன்பத்தை அனுபவிக்கிறார்கள். ஆனால் நான் இறைவனை நன்றாகத் தமிழ் வேதம் செய்வதற்காக இறைவனால் பிறப்பிக் கப்பட்டுள்ளேன்." என்பதாகும்.இறைவனை வழிபட பூவும், நீரும் போதும் எனக் கூறும் பாடல் எண் 1828 இல்

"புண்ணியம் செய்வார்க்குப் பூஉண்டு நீர்உண்டு
அண்ணல் அதுகண்டு அருள் புரியாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்இறை ஈசனை
நண்ணறி யாமல் நழுவு கின்றாரே"

இப்பாடலின் பொருள் "பூசைக்குத் தேவை பூவும், நீரும். இவற்றைக் கொண்டு பூசித்தாலே போதும். பரம்பொருள் இதை அன்போடு ஏற்றுக் கொண்டு அவர களுக்குத் தன் இன்னருளைப் பொழிவான். இதனை உணராமல் பாவி மக்கள் பலரும் அவன் திருவருளை அடைய நினைக்காமல் நழுவிப் போகின்றனரே" என்பதாகும்.எம்மை அறவழியில் ஒழுக்கமான வாழ்க்கையை வாழ்ந்து பசித்தவர்க்கு உணவுகொடுங்கள் எனக் கூறும் பாடல் எண் 196

"அவ்வியம் பேசி அறம்கெட நில்லன்மின்
வெவ்வியன் ஆகிப் பிறர்பொருள் வவ்வல்மின்
செவ்வியன் ஆகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்விக் கொடுஉண்மின் தலைப்பட்ட போதே"

"அடுத்தவர் மீது பொறாமை கொண்டு, அவதூறாகப் பேசி, அனியாயம் செய்யாதீர்கள். நீதி நூல் கூறிய நல்வழி கெட நடக்காதீர்கள். பெரும் கோபம் கொண்டு, பிறர் பொருளைக் கவர்ந்து கொள்ளாதீர்கள். எல்லாச் சிறப்பும் பெருமையும் பெற்று வாழ்வில் சிறந்திருக்கும் போதே, நீங்கள் உண்ணும் போது பசி என்று யாரேனும் உங்களிடம் வந்தால் அப்போதே அவர்களுக்கு உண்ண உணவைக் கொடுத்துவிட்டு நீங்கள் உண்ணுங்கள்" இதுவே வாழும் வழி வாழ்க்கை நெறி என்பது இப்பாடலின் கருத்து.




ஸ்ரீ மகா காளி ஜோதிட நிலையம்
Astro Palmist
Pandit
Thulasidasan



SRI MAHA KALI JOTHIDA NILAYAM

ஜேர்மனி வாழ் தமிழ் மக்களுக்கு ஓர் நல்ல செய்தி!
அகில உலக பிரசித்திபெற்ற இந்திய ஜோதிடர்
பண்டிற் துளசிதாஸ் அவர்களின் வருகை

ஆன்மீக அன்பர்களின் வாழ்வு மேன் மேலும் வளம் பெறவும், திருமணங்கள், காதல் விவகாரங்கள், வியாபார வெற்றியை தரக்கூடிய பலனையும் மற்றும் குடும்பத்தினரிடையே உள்ள கருத்து முரண்பாடுகளை நீக்கியும், குழந்தைச் செல்வங்கள் தடைப்பெறும் சர்ப்பதோஷம் ராகு, கேது நிவர்த்திப் பொருட்டு பரிகாரங்களை வழங்கியும், வேலை வாய்ப்பு, நோய், நொடி, பிணி, கடன் தொல்லைகளிலிருந்து விலக்கி வெற்றி பெறவும், பரீட்சையில் சித்தி பெறவும் தடையாகவுள்ள அனைத்து தோஷங்களையும் பணம் பொருள் வீடு வாசல் பெற்று வாழ்வில் பயன்பெற நாடுங்கள் ஜோதிடர் பண்டித் துளசிதாசிடம். உங்கள் வசம் ஜனன ஜாதக குறிப்பு இல்லாவிடின் அவற்றினைக் கணித்து பலன் சொல்லப்படும்.
இல்லையேல் கைரேகையின் மூலமும் பலன் சொல்லப்படும்.



காலை 9:00 மணியிலிருந்து இரவு 6:00 மணி வரை
தொடர்புக்கு நாடவேண்டிய தொலைபேசி இலக்கம்
0152 181 33 859
Heiderstr. 86, 45476 Mülheim (Bushaltestelle: Steinmetzstr)



திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!

KS Services
EVENT MANAGEMENT



Berliner Str. 49- 40880 Ratingen

அதிசிறந்த அலங்கார மணவறைகள்



E-Mail. info@ksservices.de Web. www.ksservices.de

Party Service
அழகிய அழைப்பிதழ்கள்



Tel. 0049 21025300247 Mobil. 004917610247194
00491722192035

# AJ HOME APPLIANCES GMBH

AJ HOME APPLIANCES

ADCHAYA

**கிரைண்டர் / மிக்ஸி / குக்கர் மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள், உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்துவித சமையலறை பாத்திரங்கள்**




**WHOLESALE விற்பனையாளர்களுக்கும் , RETAIL வாடிக்கையாளர்களுக்கும் சிறப்புத் தள்ளுபடி உண்டு..!**

## தீபாவளி திருநாளை முன்னிட்டு

**AJ HOME APPLIANCES GMBH வழங்கும்**

**30% முதல் 50% வரை சிறப்புத் தள்ளுபடி...**

## முன்னணி எழுத்தாளர்களின் புதிய வெளியீடுகள்...!




உலகத்தமிழ் மக்களின் நெஞ்சங்களில் என்றைக்கும் நிலைத்து நிற்கும் புத்தகங்கள்...

படிக்க! பயன்பெற! பரிசளிக்க காலத்தை வென்ற படைப்புகள்அனைத்தும் கிடைக்கும் ஒரே இடம் ...!

தொலைபேசி , இ-மெயில் , WhatsApp , Viber மூலமாக நீங்கள் ORDER செய்யலாம்..! அவ்வாறு ORDER செய்வோருக்கு சிறப்பு சலுகைகள் உண்டு..! ஐரோப்பாவில் எங்கிருந்து ORDER செய்தாலும் COURIER மூலம் இரண்டு அல்லது மூன்று தினங்களில் கிடைக்கும்படி அனுப்பி வைக்கப்படும்..!

மேலதிக விபரங்களுக்கு :

e-mail : ajhomegmbh@gmail.com, Tel : 004923113091030, Mobile : 017663092804





Ragu Dharmaratnam ACMA, CGMA
email: ragu.savetax@gmail.com

# Peer to Peer Lending

## Peer to Peer Lending

Peer to Peer lending என்றால் ஒரு தனிப்பட்ட நபருக்கு அல்லது ஒரு வியாபார நிலையத்திற்கு இன்னொரு online கம்பனி மூலம் பணத்தை கடனாக கொடுப்பது. Bank அல்லது Building Society ல் சேமிப்பு பணத்திற்கு கிடைக்கும் வட்டி வீதத்திலும் பார்க்க இதன் மூலம் கிடைக்கும் வட்டி மிக அதிகமாக இருப்பினும் இந்த முறையான lending இனால் risk இருப்பதனையும் அறிந்து கொள்ள வேண்டும். Peer to Peer முறையால் முதலீடு செய்யும் பணத்திற்கு எந்த விதமான நஸ்ட ஈட்டையும் Financial Services Compensation Scheme (FSCS) மூலம் பெறமுயாது எனடபதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த முறையான lending முறையானது கிட்டடதட்ட 10வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது.

**எப்படிப்பட்ட கம்பனிகள் மூலம் முதலீடு செய்ய முடியும்?**



Zopa, Rate setter, Funding circle, Lending works, Lend invest, Land bay போன்ற கம்பனிகள் மூலம் online ல் இந்த முதலீட்டை ஆரம்பிக்க முடியும்.

Zopa கம்பனிதான் முதல் முதலில் இந்த முதலீட்டு திட்டத்தை 2005ம் ஆண்டு ஆரம்பித்தது. இன்று இவர்களிடம் 50,000 பணத்தை முதலீடு செய்பவர்கள் இருக்கின்றார்கள். இவர்களிடம் முதலீடு செய்யும் பணத்திற்கு சராசரியாக 5% வட்டி கிடைக்கும். தற்பொழுது இருக்கும் UK base rate ஆன 0.5% விட இது 10 மடங்கு அதிகமானது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

Zopa விற்கு அடுத்த படியாக இருக்கும் பெரிய கம்பனி Funding Circle. இந்த கம்பனி 2010ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டாலும் இதுவரை 47,000 முதலீட்டு ஆர்வம் உள்ளவர்கள் இருப்பதுடன் 7வீதம் வட்டி கிடைக்கின்றது.

Peer to Peer lending என்பது உங்களுடைய சேமிப்பு பணத்திற்கு கிடைக்கும் வட்டி வருமானம் என கருதக் கூடாது இதனை சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் இடைப்பட்ட ஒன்றே என்று கருத வேண்டும்.

Example= Lending works Company
Loan Type Personal loan 99.6%
Loan Purpose Debt Consolidation 32%
Vehicle Purchase 26%
Borrower age 35-49 38%
25-34 37%
Average Loan £5600
Average Term 38 months
Borrower Gender male 68%
Average income of borrower £37,000
Home owners 59%

இப்ப எப்பட்ட முதலீட்டில் அதிக risk இருப்பினும், Funding Circle என்ற கம்பனியைப் பொறுத்த வரை கடந்த சில வருடற்களில் முதலிடப்பட்ட தொகையில் Bad debts என்பது 5 வீதத்திலும் குறைவானதாகவே காணப்படுகின்றது.

**முடிவுரை**

தங்களிடம் £5000 சேமிப்பாக இருக்கும் அதே நேரம் இன்னொரு நபருக்கு கார் வாங்குவதற்காக £5000 தேவைப்படும், எனவே Zopa போன்ற matching companyfs மூலம் தங்களின் £5000, கார் வாங்க இருப்பவர்களுக்கு கடனாக கொடுக்கப்பட்டு அதன்மூலம் கிடைக்கும் வட்டி தங்களுக்கு தரப்படும்.

Peer to Peer lending என்பது crownd Funcing என்ற முறையில் இருந்து வித்தியாசமானது என்பதனை தெரிந்து கொள்ள வேண்டும்.

| A | B | C | D | E |
|---|---|---|---|---|
| Company | Launched | Average Return | Number of active lenders | Amount lent to date |
| ZOPA | 2005 | 5% | 50,000 | £1.6BN |
| RATE SETTER | 2010 | 4.50% | 33,000 | £1BN |
| FUNDING CIRCLE | 2010 | 7% | 47,000 | £1.4BN |
| LENDING WORKS | 2014 | 5% | 1,250 | £21M |
| LEND INVEST | 2013 | 7% | 3,000 | £700M |
| LANDBAY | 2014 | 4.50% | 1,000 | £42.78M |



ஸ்ரீ கனகதுர்க்கா
அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும்
குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள்
மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main

அனைவருக்கும் எங்கள்
இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்
சித்திரம் Tv
எம்மிடம் கிடைக்கும்




(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

தீபாவளி இந்துசமயத்தவரால் கொண்டாடப்படும் பட்டிகைகளில் ஒன்றாகும். தீபம் என்றால் விளக்கு, ஆவளி என்றால் வரிசை. வீடுகளில் உள்ள இருளை அகற்ற வரிசையாக விளக்கேற்றுதல் என்பது பொருளாகும். எமது மனதில் உள்ள இருளாகிய அக்கங்காரம், கோபம், பொறாமை போன்ற தீய எண்ணங்களை எரித்துவிட்டு அன்பு, கனிவு, நல்ல சிந்தனை போன்ற நல்ல எண்ணங்களாகிய ஒளியை ஏற்றுதல் என்பது இதன் உட் பொருளாகும்.

பண்டைக் காலத்தில் இருந்து மக்கள் இந்நாளில் ஒருவருக்கொருவர் பலகாரங்களை பரிமாறி, உறவினர்கள் ஒன்று சேர்ந்து உணவருந்தி மகிழ்ச்சியாகக் கொண்டாடி வருகிறார்கள். குறிப்பாகச் சிறார்கள் பட்டாசு வெடித்து, புத்தாடை அணிந்து, கோயிலுக்கும், உறவினர், நண்பர்கள் வீடுகளுக்கும் சென்று மகிழ்கின்றார்கள். இயந்திரமயமான இக்காலத்தில் அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளில் இருந்து விடுபட்டு மகிழ்ச்சியாக இருக்க இந்நாள் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

தீபாவளி கொண்டாடுவதற்கான காரணங்கள் புராணங்களிலும், கதைகளாகவும் பல கூறப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போமானால்

1. சக்தி தனது 21 நாள் கேதாரகௌரி விரதத்தை முடித்தபின்பு சிவன் சக்தியை தனது இடப்பாகத்தில் ஏற்று அர்த்தநாரீஸ்வரராக மாறிய நாள் தீபாவளியாகக் கொண்டாடப்படுகின்றது என ஸ்கந்த புராணத்தில் கூறப்பட்டுள்ளது.
2. கிருஷ்ணபரமாத்மா நரகாசுரனை அழித்த நாளை மக்கள் கொண்டாட வேண்டும் என்ற அவனின் வேண்டுகோளுக்கமைய அந்நாள் தீபாவளி எனக் கொண்டாடப்படுகின்றது என பாகவத புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

3. இராமபிரான் 14 ஆண்டுகள் வனவாசம் முடிந்து திரும்பி வந்தபோது மக்கள் வீடுகளில் தீபம் ஏற்றி அவரை வரவேற்ற நாள் தீபாவளி என்று கொண்டாடப்படுகின்றது.

4. இராமபிரான் இராவணனை அழித்துச் சீதையை மீட்டு அயோத்திக்கு வந்தபோது மக்கள் வீடுகளில் தீபம் ஏற்றி அவரை வரவேற்ற நாள் தீபாவளி என்று கொண்டாடப்படுகின்றது.

---

25 ம் பக்கத் தொடர்ச்சி **நானும் அவளும் 44**

இது என்னிடம் இருப்பதாக அவள் சொன்ன பின்புதான் அதை நானே தேடிக் கண்டுபிடித்தேன். இல்லை என்றால் காதலிக்கத் தொடங்கி ஆறுமாதமாக அவளுக்கு மாதா மாதம் பல நூறு யூரோக்கள் பல்கிரியாவிற்கு அனுப்பி இருப்பேனா? இல்லை இப்பவும் நான் அனுப்பிய பணத்தில்தானே பறந்து வந்து கொண்டு இருக்கிறாள்.

நீ வந்ததும் நாம் கிறிக்நாட்டுக்கு விடுமுறை போகலாம் என நினைக்கிறேன் நீயும் வருவாயா. என்று கேட்டதற்கு - இது என்ன கேள்வி! நீங்கள் என் கணவன். நான் உங்கள் மனைவி. நீங்கள் சொல்லும் இடம் போகும் இடம் உங்கள் முடிவே எனது முடிவும் என்றாள்.

இது எதுவோ நான் முன் விரும்பிப் பார்க்கும் இந்தி படத்தில் வரும் ரோமான்ஸ் மாதிரி இருந்தது.

நான் அதிகம் என் காதலை வெளிப்படுத்த பேசுவது குறைவு. ஒன்றே ஒன்று மட்டும் அடிக்கடி சொல்வேன். எனக்குப்பிறகு யாவும் உனக்கே என்று.

அவள் கண்ணில் நீரததும்ப பார்வை ஒன்று பார்ப்பாள். அவள் கண்ணீர்த்துளிகள் ஸ்கைப், பேஸ்ரைம் இதை எல்லாம் தாண்டி, என் நெஞ்சில் வழியும்.

இந்தக் கண்ணீர்த்துளி அவளின் காதலின் அறிகுறியா? அது என்ன குறி? அதனைக் குறிப்பாகச் சொல்லமுடியாத படி அவள் உதடுகளும் சிலிர்க்கும்.

அவள் ஸ்கைப்பில் எனக்கு தந்த முத்தங்கள் எதுவும் வந்து சேரவில்லை. இப்பதான் டிலிவறியாகப் போகிறது என்ற எண்ணம் என்னை பறக்கவும், பதறவும், வைக்கிறது.

இதோ பல்கிரியாவில் இருந்து வந்த விமானம் தரையைத் தொட்டுவிட்டது. அதன் அதிர்வுகள் என் நெஞ்சுக்குள். இமைக்காமல் வரும் வழிபார்த்து நிற்கின்றேன். அவள் வருவாளா? வந்துவிட்டாள் என்று எண்ணவே உடல் வியர்க்கிறது.

ஒவ்வொருவராக வருகிறார்கள். தூரத்தில் வரும் பெண்கள் எல்லாம் எனக்கு அவளாகத் தோன்றினாலும் அருகில் வர அவளற்றுப் போகிறார்கள்.

விமானம் வந்து ஒரு மணி நேரமாகிவிட்டது. ஓடிக்கொண்டு இருந்த லகேச் பெல்ட்டும் நின்றுவிட்டதாக, கணனி காட்டுகிறது. விமானம் திரும்பிச் செல்வதற்கான நேரம் அட்டவணையில் போடப் பட்டுள்ளது.

நான் அவளுக்கு போன் எடுக்கிறேன். பதில் இல்லை. சற்று நேரத்தில் ஒரு எஸ் எம் எஸ் வருகிறது. நான் விமானத்தை விட்டுவிட்டேன். அடுத்த விமானத்தில் அடுத்த வாரம் வருகின்றேன் உடன் ரிக்கற்போட காசு அனுப்பவும். I miss U என்று எழுதி இருந்தது.

நான் உடன் எந்த விமான நிலையத்தில் இப்போ நிற்கிறாய் என்று எழுதினேன் பதில் வந்தது. பேச்சு வரவில்லை. அதுவும் எழுத்திலேதான் வந்தது. அதனை அப்படியே இன்பமேசன் இடத்தில் காட்டிக் கேட்டேன். இந்த இடத்தில் இருந்து டோட்மூண்டுக்கு எப்ப விமானம் வரும் என்று. அவள் செப்பண்ணிவிட்டு சிரித்துக் கொண்டே சொன்னாள் இப்படி ஒரு விமானநிலயம் பல்கேரியாவிலும் இல்லை. இப்படி ஒரு விமானத்தில் இலக்கம் தொடங்கு வதும் இல்லை, என்றாள். சென்ற மாதமும் நீங்களா வந்து என்னைக் கேட்ட நீங்கள் என்றாள். நான் அவனில்லை என்று கொண்டே இலக்கத்தைப் பார்க்கின்றேன்.

AGE 70-26/ 44

கூட்டிக் கழித்துப் பார்க்கின்றேன்

**என் 70 இருந்து அவள் 26 போனால் வருவது 44**
**அவள் கணக்குச் சரிதான்.**

எனக்குப்பிறகு எல்லாம் உனக்குத்தான் என்று என் பென்சனைக் கூறும்போது, அவள் உதடுகள் குவிந்ததின் அர்த்தம் இப்ப புரிந்தது.








# யேர்மனிக்கு பறக்கும் வழியில் ஆகாயத்தில் ,இசையமைத்த ஹாரீஸ்

வானில் பறந்து கொண்டு கவிதை எழுதலாம்,கதை எழுதலாம் படிக்கலாம். ஆனால் இசையமைப்பது இலகுவானதா?

மனம் இசைக்கு வசப்பட்டால் வானமும் வசப்படும் எனக்காட்டுடியுள்ளார் ஹாரிஸ். நடிகர் விக்ரம் நடித்த இருமகன் படத்திற்காக சென்னையிலிருந்து யேர்மனி செல்லும் விமான பயணத்தின் போது இசையமைத்ததாக ருசிகர தகவல் ஒன்றை தெரிவித்திருக்கிறார் ,இசையமைப்பாளர் ஹாரீஸ் ஜெயராஜ்.

,இது குறித்து அவர் தெரிவித்திருப்பதாவது,
நான் எம்முடைய ,இசைக்குழுவிற்காக ,இசைக்கருவினை வாங்குவதற்காக ஜேர்மனி செல்ல தீர்மானித்து விமான நிலையத்திற்கு பயணமாவதற்கான தயாரிப்புகளில் ஈடுபட்டிருந்தேன் அப்போது ,இயக்குநர் ஆனந்த் சங்கரும், தயாரிப்பாளர் தமீன்ஸும் எம்மை தொடர்பு கொண்டு சார் ஒரு டீஸர் வெளியிடவேண்டும். ஒத்துழைப்பு கொடுங்கள் என்று கேட்க, நான் மறுக்க, அவர் எம்மிடமே எம்முடைய வார்த்தைகளை திருப்பி சொல்ல, வேறு வழியில்லாமல் விமானத்திலேயே அந்த டீஸருக்கான பணிகளை மேற்கொண்டேன். ஏறத்தாழ பத்தரை மணி நேர உழைப்பில் அந்த டீஸர் தயாரானது. ,துவரை யாரும் ஒரு படத்திற்காக ஆகாயத்தில் பறந்த படியே பணியாற்றியிருக்கமாட்டார்கள். இதை நான் ,இருமுகனுக்காக செய்தேன். என்றார்.

## இருமுகன்

,இருமுகன் வெளியான முதல் வாரத்தில் உலகம் முழுவதும் ,இந்திய மதிப்பில் 60 கோடி ரூபாய் மேல் வசூலாகியுள்ளதாக படத்தை வெளியிட்ட நிறுவனம் தெரிவித்திருக்கிறது.



கயல் ஆனந்தி



## அரைகுறை ஆடையா கட் என்று சொல்லிவிட்டு வெளியேறும் நடிகையும் உண்டா? உண்டு!!

அரைகுறை ஆடையில் கவர்ச்சியாக நடிக்கும்படி நிர்ப்பந்திக்கின்றனர். இதனால் படப்பிடிப்பில் இருந்து வெளியேறுவதாக படக்குழுவினரை மிரட்டினேன்" என்று நடிகை ஆனந்தி கூறினார். 'எனக்கு இன்னொரு பேர் இருக்கு' என்ற படத்தில் ஜி.வி.பிரகாஷ்குமார், கயல் ஆனந்தி ஜோடியாக நடித்துள்ளனர்.
இந்த படத்தை சாம் ஆண்டன் இயக்கி உள்ளார். லைகா புரொடக்ஷன்ஸ் தயாரித்துள்ளது. இந்த படத்தில் நடித்தது குறித்து நடிகை ஆனந்தி அளித்த பேட்டி வருமாறு:-கயல்"பள்ளியில் படித்துக்கொண்டு இருந்தபோது நடிகை யாக வேண்டும் என்று ஆர்வம் இல்லை. எதிர்பாராமல் நடிகையாகி விட்டேன். கயல் படத்தில் டைரக்டர் பிரபு சொலமன் என்னை நடிக்க வைத்து பிரபலபடுத்தினார். அவர்தான் எனக்கு நடிப்பு சொல்லிக் கொடுத்தார். திரிஷா இல்லன்னா நயன்தாரா, பொறியாளன், சண்டி வீரன் உட்பட பல படங்களில் நடித்து விட்டேன். எனக்கு இன்னொரு பேர் இருக்கு படத்தில் தாதாவின் மகளாக வருகிறேன். இந்த படத்தில் நல்ல கதாபாத்திரம் இந்த படத்தில் எனக்கு அமைந்து இருக்கிறது.
படப்பிடிப்பில் என்னிடம் எல்லோரும் அன்பாக பழகினார்கள். அக்கறையோடு பார்த்துக்கொண்டனர். கவர்ச்சிஏற்கனவே நான் நடித்த சில படங்களில் எனக்கு அசௌகரியங்கள் ஏற்பட்டன. டைரக்டர் ஆரம்பத்தில் என்னிடம் கதை சொன்னதை மீறி படப்பிடிப்பில் கவர்ச்சியாக நடிக்கும்படி வற்புறுத்தப்பட்டேன். அரைகுறை ஆடையை கொடுத்தும் உடுத்த சொன்னார்கள். என் உடல்வாகுக்கு கவர்ச்சி எடுபடாது. கவர்ச்சியாக நடிப்பது இல்லை என்று சினிமாவில் அறிமுகமானபோதே முடிவும் செய்து விட்டேன். எனவே கவர்ச்சி ஆடைகளை உடுத்த மாட்டேன் என்று மறுத்து விட்டேன்.மீறி என்னை வற்புறுத்தினால் படப்பிடிப்பில் இருந்து வெளியேறி விடுவேன் என்றும் மிரட்டினேன்.
இப்போதெல்லாம் கதை கேட்கும்போதே கவர்ச்சியாக நடிக்க மாட்டேன். குட்டைப்பாவாடை அணிய மாட்டேன் என்றெல்லாம் டைரக்டரிடம் உறுதியாக சொல்லி விட்டுத்தான் நடிக்க செல்கிறேன். இவ்வாறு ஆனந்தி கூறினார்.
இப்படித்தான் நடிகை சுஜாதா பத்மினி எல்லோரும் சொன்னார்கள். அதனை முடிந்த வரை தமிழ்படத்தில் அவர்கள் காப்பாற்றினார்கள். வேற்று மொழிப்படங்களில் அவர்களுக்கு தமிழ்படங்களில் உள்ள குடும்பப்பெண் என்ற இமேச் இருக்கவில்லை. டைரக்டர் சாம் ஆண்டன் கூறும்போது, ஒவ்வொருவருக்கும் வெளியே தெரியாத முகம் ஒன்று இருக்கிறது. அதுதான் எனக்கு இன்னொரு பேர் இருக்கு படத்தின் கதை என்றார்.




Hückelhoven நகரில்

Asiatischer Super markt

ஆசியா சமுத்திரம்

பசுமையான மரக்கறிகள்– கடல் உணவுப் பொருட்கள் – வீட்டுக்குத்தேயான மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.

Vijay tv agent

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan

துரித பணமாற்றுச் சேவை


Ria Money Transfer
MoneyGram International Money Transfer
VALUTRANS MONEY TRANSFER



அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்




# ஒரே நடிகரின் இரு படங்கள் ஒரே நாளில் வெளியாகி கலக்கிய காலம் அன்று!








ஊட்டி வரை உறவு - இரு மலர்கள்
எங்கிருந்தோ வந்தாள் - சொர்க்கம்
டாக்டர் சிவா - வைரநெஞ்சம்

அமரர் ஏ.சி.திருலோகசந்தர்

அமரர் ஏ.சி.திருலோகசந்தர் வீரத்திருமகன் படத்தை இயக்கி தமிழ் திரையில் இயக்குனராக முத்திரை பதித்தார் ஏசிடி. அதன் பிறகு தமிழ், தெலுங்கு, இந்தி என்று மும்மொழிகளில் சுழன்றடித்தார். அன்பே வா, தெய்வமகன், தங்கை, இருமலர்கள், எங்க மாமா, எங்கிருந்தோ வந்தாள், அன்பே ஆருயிரே, டாக்டர் சிவா... என்று அவர் இயக்கிய படங்கள் எல்லாமே தரமானவை. கமர்ஷியலாக வெற்றி பெற்றவை.

திரைத்துறையில் ஏசிடி நிகழ்த்தி சாகசங்கள் சுவாரஸியமானவை. அதில் சிவாஜியை சிவாஜியுடன் மூன்றுமுறை மோதவிட்டு மூன்றுமுறையும் வெற்றி பெற்ற கதை முக்கியமானது.

இரண்டு மாஸ் நடிகர்களின் படங்கள் ஒரே நாளில் வெளியானாலே இன்று திரையரங்குகளும், திரைத்துறையும் திணறிப்போகும். வசூல் பாதிக்கும் என்று தயாரிப்பாளரிலிருந்து பாப்கார்ன் விற்பவர்வரை கூப்பாடு போடுவார்கள். திரையரங்குகளின் எண்ணிக்கை குறைவாக இருந்த அந்தக்காலத்தில் அப்படியெல்லாம் இல்லை. ஒரே நடிகரின் இரு படங்கள் ஒரே நாளில் வெளியான கதையெல்லாம் உண்டு.

1967 -இல் ஏசிடி சிவாஜியை வைத்து இரு மலர்கள் படத்தை இயக்கினார். அவர் இயக்கிய படங்களில் இரு மலர்களே ஆகச்சிறந்த படம் என்று சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். இரு மலர்கள் வெளியாவதாக இருந்த அதே தினத்தில் ஸ்ரீதர் இயக்கத்தில் சிவாஜி நடித்த ஊட்டி வரை உறவு படமும் வெளியீட்டுக்கு தயாரானது. ஒரேநாளில் ஒரு நடிகரின் இரு படங்களா என்று பஞ்சாயத்து எல்லாம் பேசாமல் இரு மலர்களையும், ஊட்டி வரை உறவையும் ஒரேநாளில் வெளியிட்டனர். இரு படங்களும் 100 நாள்களை கடந்து ஓடின.

1970 -இல் மீண்டும் அதுபோன்ற ஒரு சூழல். ஏசிடி சிவாஜியை வைத்து எங்கிருந்தோ வந்தாள் படத்தை எடுக்கிறார். டி.ஆர்.ராமண்ணா சிவாஜியை வைத்து சொர்க்கம் படத்தை எடுக்கிறார். இரண்டுக்கும் ஒரே ரிலீஸ் தேதி. இரண்டும் ஒரே நாளில் வெளியாகிறது. இரண்டுமே ஹிட். 100 நாள்களை தாண்டுகின்றன.






1975 -இல் சிவாஜியை வைத்து டாக்டர் சிவா படத்தை இயக்கிய போதும், இயக்குனர் ஸ்ரீதர் போட்டியாக வருகிறார். ஸ்ரீதர் சிவாஜியை வைத்து வைர நெஞ்சம் படத்தை இயக்கியிருந்தார். இரண்டுக்கும் ஒரே ரிலீஸ் தேதி. இரண்டுமே 100 நாளை கடந்து வெற்றி பெறுகின்றன.

